


# தமிழரசு

16-11-1980 50 காசு

# முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா

## 30-10-80



மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேவரின்
சமாதியில் மலர் வளையம் வைக்கிறார்.

பசும் பொன்னில்



சென்னையில்





தமிழக ஆளுநராக திரு சாதிக் அலி அவர்கள்
4-11-'80-ல் பதவி ஏற்றார்.


# தமிழரசு

மலர் : 11 இதழ் : 10

16-11-1980


## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| நலிவுற்ற உழவர்களுக்கு நல்வாழ்வு .. | 2 |
| கூட்டுறவே ஏற்ற வழி .. | 3 |
| கூட்டுறவுத்தாய் .. | 5 |
| நேருவின் நினைவே நேரிய நினைவு .. | 9 |
| நேருவின் வாழ்விலே .. | 11 |
| குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் பேட்டி | 13 |
| இனி ஒரு விதி செய்வோம் .. | 17 |
| கப்பலோட்டிய தமிழனின் தமிழ்ப்பணி .. | 24 |
| தனிநாயகம் என்னும் தமிழ்ப்பூங்காற்று .. | 33 |
| கிருஷ்ணாபுரம் சிற்பங்கள் .. | 36 |
| பசும்பொன்னார் பிறந்த நாள் விழா .. | 39 |
| ஏமாறாதே! ஏமாற்றாதே! .. | 42 |
| கிராம அங்காடித் திட்டம் .. | 46 |



# நலிவுற்ற உழவர்களுக்கு நல்வாழ்வு

மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர்
கா. காளிமுத்து

"சேற்றூரும் வரப்பெடுத்த வயலும், ஆறு தேக்கிய நல்வாய்க் காலும் வகைப்படுத்தி நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும் நிறையுழைப்புத் தோள்களெல் லாம் எவரின் தோள்கள்?'' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் வினாவிற்கு விடை யாக விளங்கும் உழவர் பெரு மக் களே! தமிழக அரசின் வேண்டு கோளை ஏற்று வேளாண்மை உற்பத்தியைத் தொடர்ந்து பெருக்கி வருவதால் உங்கள் அனைவருக்கும் முதற்கண் அரசு சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ''சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்: அதனால் உழன்றும் உழவே தலை'' என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க தமிழக அரசு உழவுத் தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமையும், முக்கியத்துவமும் அளித்து வரு கிறது.

ஒட்டிய வயிற்றுடனும், ஒளி இழந்த கண்களுடனும்காலங்கால மாக உழைத்து உருக்குலைந்து கூனிக் குறுகிப்போன ஏழை உழ வர்களை நிமிர்ந்து நடைபோடச் செய்யவேண்டும். உழவைத் தொழில் என்று கருதாமல் வாழ்க்கை வழியாக ஏற்று, வய லையே வீடாகவும், வானத்தை கூரையாகவும், வரப்பையே தலையணையாகவும் கொண்டு நெற்றி வியர்வை நிலத்திலே விழப் பாடுபட்டு வரும் உழவர் களின் வாழ்வை வளப்படுத்த வேண்டும்! என்ற இலட்சியத் திலேதான், காலங்காலமாக கவ னிக்கப்படாமல் இருந்துவந்த உழவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க - இந்தியாவிலேயே முதன் முதலாக - புரட்சித்தலைவர் அரசு ஒரு உயர்மட்டக்குழுவை நியமித்தது உயர்மட்டக்குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப படிப்படி யாக உழவர்களின் பிரச்சினை கள் - கடன்சுமைகள் குறைக்கப் பட்டு வருகின்றன.

விவசாயத்திற்கான மின் சாரக் கட்டணம் யூனிட் 16

## வளரும் தமிழகம்

பைசா என்றிருந்ததைச் சிறு உழ வர்களுக்கு 12 பைசா என்று குறைத்துள்ளது தமிழக அரசு. அண்மையில் மீட்டர் வாட கையை ரூ. 4 லிலிருந்து ரூ. 2 ஆகக் குறைத்துள்ளது. இவை களினால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏறத்தாழ 50 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட் டுள்ளது. ஆயினும் தமிழக அரசு நட்டத்தைப் பொருட்படுத்தா மல் மின் கட்டணத்தையும், மீட் டர் வாடகையையும் குறைத் துள்ளது. ஏன்? எண்ணிப்பாருங் கள்! உழவர் நலங்காக்கும் அரசு, தமிழ்நாடு அரசு என்பதற்கு இது ஒன்றே போதும்! அதுமட்டு மல்ல! நலிவுற்ற உழவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் ரூ. 60 கோடி கடனைத் தள்ளுபடி செய்துள்ளது தமிழக அரசு. இச் செயல் உழவர் நலங்காக்கும் அரசு என்பதை எடுத்துக்காட்ட வில்லையா?

வறட்சியும் புயலும் அடுத் தடுத்து தாக்கி தமிழக வேளாண் மைப் பொருளாதாரத்தைச் சீர் குலைத்த பொழுதெல்லாம் தமிழக அரசு உழவர்களின் நலன் கருதி குறிப்பாகச் சிறு உழவர்க ளின் நல்வாழ்வை முன்னிட்டு-நில வரியைத் தள்ளுபடி செய்ததுடன் பலகோடி ரூபாய் மதிப்புள்ள விதைகளை இலவசமாக வழங்கி யது, நிலங்களில் மூடிய மணலைச் சிறு உழவர்களுக்கு இலவசமாக அகற்றிக் கொடுத்துள்ளது.

முந்திய அரசுகள் பணப்பயிர் களுக்கு விதித்திருந்த கூடுதல் வரியை இன்றைய தமிழக அரசு குறைத்துள்ளது. இப்படிப் பல் வேறு நன்மைகளை நலிவுற்ற உழவர்களின் நன்மைக்காகவே தமிழக அரசு செய்துவருகிறது.

''உழுதவன் கணக்குப் பார்த் தால் உழக்குக்கூட மிஞ்சாது!'' என்பதை இன்றைய தமிழ்நாடு அரசு நன்கு உணர்ந்துள்ளது. இரசாயன உரம், பூச்சிமருந்து கள், டீசல் எண்ணெய் ஆகிய வற்றின் விலை உயர்வால் தமி ழக உழவர்கள் பாதிக்கப்பட்டுள் ளார்கள் என்பதை உணர்ந்து அவைகளின் விலையைக் குறைக் குமாறு மத்திய அரசை வற் புறுத்தி வருகிறது தமிழக அரசு. அதுமட்டுமல்ல!

நெல்லுக்கும் கரும்புக்கும் சாகுபடி செலவிற்கு ஏற்ப கட்டு படியாகும் விலையை நிர்ணயிக் கும்படி மத்திய அரசை வற் புறுத்தி வருகிறோம். கோது மைக்கும் அதிக விலை நிர்ணயித் ததுபோல் நெல்லுக்கும் ஏன் அதிக விலை நிர்ணயிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி தமி ழக உழவர்களின் நலனுக்காக மத்திய அரசுடன் வாதாடி வரு கிறோம்.

நெல்லுக்குக் குறைந்தபட்ச விலை குவிண்டால் ரூ. 130 என் றும், கரும்புக்கு டன் ரூ. 200 என்றும் விலை நிர்ணயிக்கும்படி மத்திய அரசை வற்புறுத்தி வரு கிறோம்.

அதே நேரத்தில் தமிழக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க தமிழக அரசு இணைந்து செயலாற்றி வருகிறது. அதன் காரணமாகவே 1976-77-ல் 50 லட்சம் டன் ஆக இருந்த அரிசி உற்பத்தி கடந்த ஆண்டில் $62\frac{1}{2}$ இலட்சம் டன்னாக உயர்ந்துள் ளது!

அரிசிக்கு வரிசையில் காத்து நின்ற நிலைமை மறைந்து, அனை வர்க்கும் மலிவான விலையில் தரமான அரிசி கிடைக்கும் நிலைமை மலர்ந்துள்ளது!

காலம் நமக்குக் கற்றுத்தந்த பாடத்தின் அடிப்படையில் நடப்பு ஆண்டில் 65 இலட்சம் டன் அரிசி, $21\frac{1}{2}$ இலட்சம் டன் சிறு தானியங்கள் $3.\frac{3}{4}$ இலட்சம்

— தொடர்ச்சி 48-ஆம் பக்கம்

# கூட்டுறவே ஏற்ற வழி

## மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் சி. பொன்னையன்

"கூட்டுறவு இயக்கத்தோடு இந்தியாவையே இணைக்க வேண்டுமென்பதே என்னுடைய நோக்கம். அதுவே ஊர்தோறும் அடிப்படைச் செயலாக அமைய வேண்டும். இந்தியாவின் பொது எண்ணமே கூட்டுறவு முறையில் இருக்கவேண்டும்" என்று கூறினார் மறைந்த பண்டித நேரு. அவரது பிறந்தநாளான நவம்பர் 14ம் தேதி முதல் 20ம் தேதி வரை அனைத்து இந்திய அளவில் கொண்டாடப்படும் கூட்டுறவு வாரவிழாவின்போது நேரு பெருமகன் நாட்டின் வளர்ச்சியோடு கூட்டுறவை இணைத்து வலியுறுத்திய பொன்னான கருத்துக்களை இந்த நேரத்தில் நினைவு கொள்வது மிகவும் பொருத்தமாகும்.

எளியோரின் இதய விளக்காகவும், நலிந்தோரின் நல்வாழ்வு பேணும் கேடயமாகவும் கூட்டுறவு இயக்கம் நாள்தோறும் புதிய பொலிவோடும், வலிவோடும் வளர்ந்து வருவதை நாடு அறியும். நாட்டின் நலனுக்கும், சமூகத்தில் நலிவுற்றோருக்கும் எந்த அளவுக்கு உதவியாக உள்ளது என்ற சாதனைதான் கூட்டுறவு இயக்கத்தின் வெற்றிக்கு அளவுகோலாக அமையும்.

இந்தப் பெரும் பணியில் கடந்த முக்கால் நூற்றாண்டுகளாக சிறந்த முனைப்புடன் தமிழகத்தின் கூட்டுறவு நிறுவனங்கள் அரும் பெரும் பணியாற்றி வருவதை சிறந்த புகழ்மிக்க சாதனை என்றே கூறலாம். உழவர் பெருமக்களின் கடன் தொல்லையை நீக்குவதையே அடிப்படையாகக் கொண்டு துவக்கத்தில் கூட்டுறவு இயக்கம் முனைப்பாக இருந்தாலும் இன்றைய நிலையில் எங்கும் எதிலும் கூட்டுறவு என்ற அளவுக்கு நாள்தோறும் கூட்டுறவு இயக்கத்தின் பணி பல்கிப் பெருகி வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். குறிப்பாக உழவர் பெருங்குடியினருக்கு கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றி வருகிற பணியை உழவர் பெருமக்கள் எளிதில் மறந்து விட முடியாது. கோடி கோடியாக கடனுதவியை எளிய உழவர்களைத் தேடிச்சென்று உதவி வருவது கிராமக் கூட்டுறவுச் சங்கம்தான். கிராமங்கள்தான் நாட்டின் பொருளாதாரத்தின் உயிர்நாடி என்பது நாம் ஏற்றுக்கொண்டுள்ள உண்மை. அந்த உயிர்நாடி தொடர்ந்து துடிப்புடன் செயலாற்ற கிராமக் கூட்டுறவுச் சங்கம் புதிய வலிவு ஊட்டுகின்றது. இது வரலாறு கூறும் உண்மை.



பரம்பரையாக லேவாதேவிக்காரர்களின் இரும்புப் பிடியில் சிக்கி உழன்று கொண்டிருந்த ஏழை உழவர் பெருமக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டி கரை ஏற்றியது கூட்டுறவு இயக்கம்தான். கடன் வழங்குவது மட்டுமல்லாமல் விற்பனை வசதி, துணைத் தொழிலுக்குக் கடனுதவி - வருவாயைக் கூடுதலாக்க வாய்ப்புகள் - உழவுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் ஒரே இடத்தில் பெறுவதற்கான உதவிகள்-தேவையான பண்டங்கள் அனைத்தையும் நியாய விலையில் பெறுவதற்கான ஏற்பாடுகள்- அனைத்தையும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் உழவர்களுக்காகச் செய்து வருகின்றன. கிராம அளவிலே உழவர் பெருமக்களுக்கு உதவக்கூடிய நிறுவனம் கிராமக் கூட்டுறவுச் சங்கம்தான். கிராம அளவில் நிறுவன ரீதியாக வேறு அமைப்புகள் அவர்களது நலம் பேணும் அமைப்பு வேறு இல்லையென்றே சொல்லலாம்.

இந்த நிலையில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் பணி உழவர்களுக்குத் தொடர்ந்து கிடைக்க வேண்டுமென்றால் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள உழவர் பெருமக்கள் ஆற்ற வேண்டிய கடமை மிக முக்கியமானது. அதுதான் சங்கத்திலே வாங்கிய கடனை உரிய நேரத்திலே தவணை தவறாமல் திருப்பிச் செலுத்துவதாகும். கடமையைச் செய்து உரிமையைப் பெறுவதுதான் நியாயமாகும். சந்தர்ப்ப வசத்தால் சிறு உழவர்கள் வழி மாறி தாங்கள் ஆற்ற வேண்டிய கடமையினின்றும் நழுவிவிட்டார்கள். அதன் பயனாக கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழக்க நேரிட்டு அவர்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளைத் தொடர்ந்து செய்யமுடியாத சூழ்நிலை உருவாயிற்று. இது உழவர்களுக்கும் நல்லதல்ல. சமுதாயத்திற்கும் உகந்ததல்ல.

சிறு உழவர்களின் நலனில் கூட்டுறவு இயக்கமும், தமிழக அரசும் தீவிர கவனம் செலுத்திவருவதை உழவர்கள் மறந்திருக்கமாட்டார்கள். இயற்கையின் சீற்றத்தால் உழவர்கள் பாதிக்கப்பட்டபோது, கோடி கோடியாக சலுகைகளை அள்ளி வழங்கி கூட்டுறவுத்துறை மூலம் தமிழக அரசு ஆதரவு அளித்துள்ளது. கிராமப்புற மக்களுக்கு குறிப்பாக, ஏழை, எளிய நலிந்த பிரிவினரின் நல்வாழ்வில் தீவிர ஆர்வம் கொண்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையிலான தமிழக அரசினால் அண்மையிலும் 42 கோடி ரூபாய் அளவுக்கு சிறு உழவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டன. மேலும் சிறு உழவர்களின் பாதுகாப்புக்காகப் பல சலுகைகளும் வழங்கப்படுகின்றன. அண்மையில், கூட்டுறவுச் சங்கங்கள்

மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பயிர்க்காப்புறுதித் திட்டம் உழவர் நலம் பேணும் அம்சமாகும்.

நுகர்பொருள் வழங்குவதிலும் பல சிறப்புப்பணிகளைக் கூட்டுறவு நிறுவனங்கள் ஆற்றியுள்ளன. நகரங்களில் வாழ்கின்ற மக்களுக்கு மட்டுமின்றி, கிராமங்களில் வாழ்கின்ற எளியோருக்கும் வீட்டுக்கு வேண்டிய பண்டங்களை நியாயமான விலையில் வழங்குவதற்கு கிராம அங்காடிகள் அமைக்கப்பட்டுச் செயலாற்றி வருவது தமிழக அரசின் ஒரு புரட்சிகரமான திட்டம் என்பதை மறந்து விடக்கூடாது. மாணவர்களுக்கு மலிவு விலையில் புத்தகம் வழங்குதல், குறிப்போடுகள் வழங்குதல் ஆகிய முயற்சிகள் கூட்டுறவு மூலம் நடைபெறுவது வருங்கால தலைமுறையினருக்குக் கூட்டுறவு இயக்கம் செய்து வருகின்ற ஆக்கப் பணிகளில் முக்கியமானதாகும்.

"ஆத்மீக நெறியில் நம்பிக்கை கொண்டு ஆத்மீக வழியில் செயல்பட்டு வந்த பெருமான் தேவர். ஆத்மீகத்துக்கும் - அரசியலுக்கும் ஒரு பாலம் அமைத்து இறுதிவரை நேர்மையாகவும் - நாணயமாகவும் வாழ்ந்தவர், முத்துராமலிங்கத் தேவர். அப்படிப்பட்டவருக்குத் தமிழக அரசு விழா எடுப்பதைத் தவிர வேறு எதை அரசு விழாவாகக் கொண்டாட முடியும்? தேவர் பிறந்த நாளுக்கு விழா எடுப்பது எங்களின் கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

—மாண்புமிகு முதல்வர், பசும்பொன் கிராமத்தில் 30-10-'80-ல் ஆற்றிய உரையிலிருந்து.



மகளிர், தொழிலாளர், பணியாளர், நலிந்தோர் இப்படி சமூகத்தில் பல பிரிவினருக்கும் நுகர் பொருட்களைச் சீராக வழங்கும் பணியில் கூட்டுறவுப் பண்டக சாலைகளும் சிறப்பங்காடிகளும் ஈடுபட்டுள்ளன.

மலை வாழ் மக்களின் இருண்ட வாழ்வில் ஒளி ஏற்றி வைத்ததும் கூட்டுறவு இயக்கம் தான். மலை வாழ் மக்கள் குறிப்பாக உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள உழவர் பெருமக்களின் நலனுக்காக தமிழகத்தில் 9 இடங்களில் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் காலம் காலமாக இடைத் தரகர்களின் வலையிலே சிக்கித் திணறிக் கொண்டிருந்த மலைவாழ் மக்களுக்கு ஒரு புதிய ஒளி கிடைத்திருக்கின்றது.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு பாதுகாப்பு அளித்து அவர்களின் நலம் பேணி மனிதாபிமானத்துடன் வாழவைப்பது நமது கடமையாகும். அந்தச் சீரிய பணியில் நலிந்த பிரிவினரான தொழிலாளர்கள், சலவைத்தொழிலாளர்கள், முடி திருத்துவோர், பழங்குடி மக்கள் போன்றவர்களின் நலனைப்பேணி கூட்டுறவுச் சங்கங்கள் மகத்தான பணி புரிந்து வருகின்றன. தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெற்று, இடைத் தரகர்களின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்தரமாக உழைப்பின் பலனை அனுபவித்து வருகிறார்கள். மேலும் சுய வேலை வாய்ப்புப் பெற்று தன்னம்பிக்கையுடன் வாழ்வில் தலை நிமிர்ந்து நின்று மனிதனாக உலவ, கூட்டுறவு மூலம் சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்களுக்கும் பல்வேறு உதவிகள் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

"கூட்டுறவு என்பது மனிதனுக்கு மனிதன் தகுதியை உணர்வது மட்டுமல்ல; தரத்தை மட்டுமல்ல, அவர்களை மதிக்கக்கூடிய பணியைப் பெறுவது மட்டுமல்ல; தங்களுக்கு முடிவதைப் பிறர் இயலாமையை எண்ணி அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய அந்த எண்ணம் கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படையான மூலதனம்"- என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கூறியுள்ளது இங்கு நினைவு கூரத்தக்கது.

எல்லோரும் எல்லாமும் பெற இந்த உலகத்தில் இல்லாமை என்ற பொல்லாங்கு இல்லாமல் மறைந்தாக வேண்டும். வலியார் சிலர் எளியாரை வீழ்த்தி வாழ்வு பெறக் கூடாது. எளியார் ஏற்றம் பெற சமுதாயத்தில் புதிய மாற்றம் காணவேண்டும். இந்த நோக்கத்திலே கூட்டுறவு இயக்கத்தின் பணிகள் செல்லாத இடம் இல்லை, அதன் சாதனைகள் இல்லாத இடமும் இல்லை.

கடந்த முக்கால் நூற்றாண்டுக் காலமாக ஆற்றி வந்த பணி ஏராளமாக உண்டு. சோதனைக்காட்டாறுகள் பலவற்றைக் கடந்து சாதனைச் சோலைகளிலே உலவி வந்த நேரமும் உண்டு. ஆற்றி வந்த பணிகளையும், அடைந்த வெற்றிகளையும் எண்ணிப் பூரிக்கின்றோம். அதே நேரத்தில் நாம் தொடர்ந்து ஆற்ற வேண்டிய பணிகள் நம் முன்னே குவிந்து கிடக்கின்றன. வறுமைக் கோட்டின் கீழ் இருக்கின்ற பல்லாயிரக் கணக்கான எளிய மக்களின் நலம் காக்கும் பணியில் இந்த இயக்கம் மேலும் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கம். அதன் பணிகள் மக்கள் மறுமலர்ச்சிப் பணிகளாகும். இந்த உணர்வு மக்கள் நெஞ்சத்தில் ஆழப்பதிய வேண்டும். கூட்டுறவு வாரவிழா கொண்டாடுகின்ற இந்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் வழங்கிய கருத்தை நினைவு கொள்வது சாலச் சிறந்ததாகும்.

"நமது பொருளாதார அமைப்பின் எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு முறையானது நன்கு பரவியுள்ளது. பொருள்களின் விலை உயர்வுகளைக் கட்டுப்படுத்திப் பொது மக்களுக்கு நேர்மையான விலையில் அவர்களின் அவசியத் தேவைகளை வழங்கி உதவும் சிறந்த பணியைக் கூட்டுறவு நிறுவனங்கள் செவ்வனே நிறைவேற்றி வைக்க முடியும். சிறப்பான வகையில் அவைகளின் அமைப்பு இயங்குவதன் மூலம்தான் இயக்கம் இந்த உயர்ந்த குறிக்கோளை அடைய முடியும். கூட்டுறவுத்துறையானது பலம் பெற்று நல்ல வளம் பெற யாவரும் பாடுபடுவோமாக!"

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணவும் வாழ்வில் வளம் பெற்று நலம் பேணவும் கூட்டுறவே ஏற்ற வழி.

வெல்க கூட்டுறவு!




# கூட்டுறவுத் தாய்

டி.ஏ.எஸ்.பிரகாசம்,
ஐ.ஏ.எஸ்.,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,
தமிழ்நாடு அரசு

மனிதனின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக் கையாளப்படும் முறைகளில் கூட்டுறவு முறை ஒன்று. தொன்றுதொட்டு இயங்கி வருவது முதலாளித்துவ முறை. அதை எதிர்த்து சென்ற நூற்றாண்டில் தோன்றியது பொதுவுடைமை முறை. இரண்டுக்கும் இடைப்பட்டு இரண்டின் நன்னோக்கங்களையும் கொண்டு உருவாகி வளர்ந்து வருவது கூட்டுறவு முறை. இது, முதலாளித்துவம் போல் பணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மனிதனுக்கு முக்கியத்துவம் கொடுப்பது; பொதுவுடைமைக் கொள்கையாகிய 'தேவைக் கேற்ற ஊதியம்' என்றில்லாமல் 'உழைப்புக் கேற்ற ஊதியம்' என்றகொள்கை உடையது. இதனால் இது மற்ற இரண்டு முறைகளையும் விடச் சிறந்தது என்று கூட்டுறவு, அறிஞர்களால் போற்றப்படுவதும் உண்டு. மனிதனின் தனித்தன்மையை மதித்து, இடைத்தரகை விலக்கி, உழைப்பின் பயனை உழைத்தவனே பெறச் செய்து சமத்துவ சமுதாயத்தை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும். அனைவரும் உறுப்பினராகலாம், ஜனநாயக நிர்வாகம், முதலீட்டுக்கு அளவான வட்டி, உபரித்தொகையில்(இலாபத்தில்) பங்கு, சிக்கனம் முதலிய கொள்கைகள் இந்த நோக்கத்திற்கு அடிப்படையாகும்.

கூட்டுறவு இயக்கம்—தனியாரின் வட்டிக் கொடுமையிலிருந்து மீள்வதற்காக ஒரு நாட்டிலும், வர்த்தகர்களின் சுரண்டலிலிருந்து தப்பிக்க இன்னொரு நாட்டிலும முதன் முதலாகத் தோன்றியது. இருப்பினும், மக்களின் இன்றியமையாத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகிய இம்மூன்றையும் பெறவும், இவற்றை உற்பத்தி செய்யத் தேவைப்படும் வேளாண்மை உள்ளிட்ட பல தொழில்களைச் செய்யவும் ஏற்றது எனக் கண்டு, கூட்டுறவு முறை அனேகமாக எல்லாப் பொருளாதாரத் துறைகளிலும் பரவலாகக் கையாளப்படுகிறது. அந்தந்த நாட்டின் பொருளாதார விழிப்பிற்கு ஏற்ப, இந்த இயக்கத்தின் வளர்ச்சி அமைந்துள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், இந்த முறையைக் கடைப்பிடிக்காத பொருளாதாரத் துறைகளை விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிற்குக் கடந்த 75 ஆண்டுகளாக கூட்டுறவு இயக்கம் பரந்து வளர்ந்துள்ளது.

**உணவு உற்பத்திக்கு உதவி:**

பொருளாதாரத்தின் முதுகெலும்பான வேளாண்மைத் தொழிலுக்குத் தேவைப்படும் தரமான விதைகள், இரசாயன உரம், பூச்சிகொல்லி மருந்து மற்றும் இதர செலவுகளுக்கான ரொக்கம், பயிர் செய்யத் தேவைப்படும் உழவு மாடுகள், தெளிப்பான்கள், இதர கருவிகள், சேமிப்புக் கொள்கலன்கள், இடுபொருள்களைக் கொண்டுவரவும் தானியங்களை எடுத்துச் செல்லவும் உதவும் டயர் சக்கரம் கொண்ட மாட்டு வண்டிகள், வருமானத்தை அதிகரித்துக் கொள்ள உதவும் கறவைமாடு, ஆடு, கோழி முதலியவற்றை வாங்கி வளர்க்கத் தேவைப்படும் கடன்கள் ஆகியவற்றை வழங்கி, தமிழ்நாட்டில் உள்ள 16,000 கிராமங்களுக்கும் சேவை செய்வதற்காக 4,700 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

விவசாயக் குடும்பங்களில் 77 வீதத்தினர் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகி உள்ளனர். 1977-78-ம் ஆண்டில் 121 கோடி ரூபாய் அளவிற்கு ஒரு ஆண்டில் திருப்பிச் செலுத்த வேண்டிய குறுகிய காலக் கடன்களையும், மேற் சொன்ன இதர காரியங்களுக்காக 6 கோடிரூபாய் அளவிற்கு மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டிய மத்திய காலக் கடன்களையும் இந்த விவசாயசேவை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கின. தமிழ்நாட்டில் மொத்தமாக வினியோகிக்கப்படும் இரசாயன உரத்தில் 52 சதவீதம், அதாவது சுமார் 3.5 இலட்சம் டன் இரசாயன உரம் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வினியோகிக்கப்பட்டது. 1979-80ஆம் ஆண்டு முதன் முறையாக பயிர்க் காப்புறுதித்திட்டம், விவசாயசேவை

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 17 வட்டங்களில் செயல்படுத்தப் பட்டது. இத்திட்டத்தின்படி விளைச்சல் குறைவினால் ஏற்படும் நட்டம் 2,000 ரூபாய் வரை ஈடு கட்டப்படும். 1980-81ல் இத்திட்டம் 20 வட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

நிலத்தை வளப்படுத்தி விளைச்சலை அதிகரிக்கும் பொருட்டு கிணறு வெட்டவும், பம்புசெட்டுகள் வைக்கவும், குழாய்கள் பொருத்தவும், டிராக்டர், டில்லர் போன்ற கருவிகள் வாங்கவும், நிலத்தைச் சீர் செய்யவும், பழத்தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள், காபித் தோட்டங்கள் முதலியவற்றை அமைக்கவும் ஏழு முதல் பதினைந்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டிய நீண்டகாலக் கடன்கள் வழங்குவதற்காக, தமிழ்நாட்டில் 223 கூட்டுறவு நிலவளவங்கிகள் வட்ட அளவிலும், வட்டார அளவிலும் பணி புரிந்து வருகின்றன. இவை 1977-78-ம் ஆண்டில் 12 கோடி ரூபாய் அளவிற்கு நீண்டகாலக் கடன்களை மேற்சொன்ன காரியங்களுக்காக வழங்கியுள்ளன.

சுமார் 25 இலட்சம் விவசாயிகள், அதாவது தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளில் சுமார் 50 சத வீதத்தினர் இந்த விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களாலும், கூட்டுறவு நிலவள வங்கிகளாலும் பயனடைந்துள்ளனர். 1977-78க்கு அடுத்த இரண்டு ஆண்டுகளில் இவை ஆற்றிய பணி 'தவணை கடந்த கடன்நிலுவை அதிகரிப்பு' என்ற நோயினால் சிறிது மட்டுப்பட்டு உள்ளது.

**விற்பனைக்கு உதவி:**

உற்பத்தி செய்யவும் உற்பத்தியை அதிகரிக்கவும் உதவி செய்து விட்டு, விளைந்த பொருளுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்யாவிட்டால் விவசாயிக்கு உண்மையிலேயே உதவி செய்ததாகக் கொள்ள முடியாது. இதை உணர்ந்து, விற்பனை செய்து கொடுக்கவென்று 114 விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் வட்ட அளவில் இயங்கி வருகின்றன. இவை, சென்ற ஆண்டு 41 கோடி ரூபாய் அளவுக்கு விவசாய உறுப்பினர்களின் விளைபொருள்களை விற்றுத் தந்திருக்கின்றன. விளைபொருள்களைப் பதப்படுத்தி விற்றுத்தருவதால் கூடுதலான விலை விவசாயிக்குக் கிடைக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, நெல் அறைவை ஆலை, எண்ணெய் பிழியும் ஆலை, பருத்தி விதை நீக்கும் ஆலை முதலிய 95 பதப்படுத்தும்ஆலைகளை இந்த விற்பனைச் சங்கங்கள் நிறுவியுள்ளன. விருத்தாசலத்திலும், திருவண்ணாமலையிலும், கோவை ஒண்டிப்புதூரிலும் மூன்று பெரிய எண்ணெய் பிழியும் ஆலைகள் அண்மையில் நிறுவப்பட்டுள்ளன. அறுவடை செய்த உடனே குறைந்த விலையில் விற்க நேரிடும் நிலையைத் தவிர்க்க, விளைபொருளை கிடங்கில் வைத்துக் கொண்டு அதன் ஈட்டின் பேரில் கடன் கொடுக்கவும் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் உதவி செய்கின்றன. இந்த வகையில் ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தானியத்தை இருப்பு வைக்கவும், இரசாயன உரம் மற்றும் இன்றியமையாத நுகர் பொருட்களை வினியோகம் செய்யவும் இந்தச் சங்கங்கள் அரசிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் மானியமும், கடனும் பெற்று இதுவரை சுமார் 5 இலட்சம் டன் கொள் அளவுள்ள 3,275 கிடங்குகளைக் கட்டி உபயோகப்படுத்தி வருகின்றன.

**புதிய விற்பனைத்திட்டம்:**

மேட்டுப்பாளையம், திருச்செங்கோடு, சேலம், ஈரோடு, திருப்பூர், தேனி; திருவில்லிபுத்தூர், பட்டிவீரன்பட்டி முதலிய விற்பனைச் சங்கங்கள் உருளைக் கிழங்கு, பருத்தி, நிலக்கடலை, மஞ்சள், காப்பிக் கொட்டை, பாக்கு போன்ற விளைபொருள்களைப் பெருத்த அளவில் விற்பனை செய்து கொடுத்து உற்பத்தியாளர்களுக்கு உதவிபுரிந்து வந்தாலும், பொதுப்படையாக எல்லா விற்பனைச் சங்கங்களும் போதிய அளவு இந்த வகையில் உதவி செய்யவில்லை. இதற்கு, ஒருபுறம் உறுப்பினர்களின் தயக்கமும், இன்னொரு புறம் விற்பனைச் சங்கங்களின் நட்டம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சமும் தான் முக்கிய காரணங்கள். இவற்றைப் போக்க இந்த ஆண்டு ஒரு புது கொள்முதல் விற்பனைத் திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கிறது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்தப் பகுதியில் விளைகின்ற முக்கியமான விளை பொருளை, சென்ற ஆண்டில் நிலவிய சராசரி விலைக்குக் கொள்முதல் செய்து, அவ்வப்பொழுது நிலவும் சாதகமான விலைக்குக் கூட்டுறவு மொத்தப் பண்டக சாலைகளுக்கு விற்பனை செய்யும்; மொத்தச்சரக்கும் விற்ற பிறகு, 5 சதவீதம் பிடித்தம் செய்து கொண்டு, சராசரி விற்பனை விலைக்கும் கொள்முதல் விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகை உற்பத்தியாளர்களுக்குத் திருப்பித் தரப்படும். இதனால் இடைத் தரகர்கள் அல்லது தனிப்பட்ட வியாபாரிகளுக்குக் கிடைக்கின்ற இலாபம் உற்பத்தியாளர்களுக்கே போய்ச் சேரும். பிடித்தம் செய்யப்படுகின்ற 5 சதவிதத்தொகை ஒரு நிதியாக ஒதுக்கி வைக்கப்பட்டு, சராசரி விற்பனை விலை கொள்முதல் விலையை விடக் குறைகின்றபோது அந்த நட்டத்தைச் சரிக்கட்டப் பயன்படுத்தப்படும். கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சிறு குழு கொள்முதல்விலையையும் விற்பனை விலையையும்நிர்ணயிக்கும்இந்தத் திட்டம் படிப்படியாக எல்லா விற்பனைச் சங்கங்களுக்கும் விரிவு படுத்தப்படும்.

**நுகர் பொருள் விநியோகம்:**

வாழ்க்கைக்கு வேண்டிய அன்றாடத் தேவைகளைக் கலப்படமில்லாமல் நல்ல தரத்தில், சரியான அளவில், நியாயமான விலையில் நுகர்வோர்களாகிய எல்லா மக்களும் பெற வேண்டியது மிக முக்கியம். இதற்காக



நுகர்வோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுறவு பண்டகசாலைகள் பணி செய்கின்றன. கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், கூட்டுறவு பண்டகசாலை இணையமும் முக்கியமான பண்டங்களை உற்பத்தி செய்யும் இடங்களிலேயே மொத்தமாகக் கொள்முதல் செய்து, தங்களுடைய சிறப்பங்காடி போன்ற சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமும், பிரதமக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலமும் விற்பனை செய்கின்றன.

தமிழக அரசு நிறைவேற்றி வரும் ''கிராமத்திற்கு ஒரு கடை'' என்ற திட்டத்தின்படி, 11,101 கிராமக் கடைகள் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இவை, தாம் வினியோகிக்கும் பண்டங்களைக் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளிலிருந்து பெறுகின்றன. இந்தக் கிராமக் கடைகள் மட்டும் ஒரு ஆண்டில் 18 கோடி ரூபாய் அளவிற்கு அத்தியாவசியப் பண்டங்களை விற்பனை செய்துள்ளன. கூட்டுறவு பண்டகசாலைகள் நடத்தும் சுமார் 4600 கடைகளிலும் சென்ற ஆண்டு 175 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை ஆயிற்று. மாணவர்களுக்குத் தேவைப்படும் பாடப் புத்தகங்கள் சுமார் 4 கோடி ரூபாய் அளவிற்கும், குறிப்பேடுகள் சுமார் 37 இலட்சம் ரூபாய் அளவிற்கும் விற்பனை செய்யப்பட்டன. நடப்பு ஆண்டில் குறிப்பேடுகளின் பற்றாக்குறை காரணமாக சில்லறை விற்பனைக்குத் தீவிர ஏற்பாடுகள் செய்து இதுவரை சுமார் 2 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. தமிழ் நாட்டிலுள்ள 97 இலட்சம் குடும்பக் கார்டுகளில் 75 இலட்சம் கார்டுகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் சர்க்கரை, மண்ணெண்ணெய், அரிசி, கோதுமைபோன்ற அத்தியாவசியப் பண்டங்கள் வினியோகிக்கப்படுகின்றன.

**உடை:**

கூட்டுறவு பண்டகசாலைகள் துணி விற்பனையில் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. முக்கியமாக, இந்திய அரசு தமிழ் நாட்டுக்கு ஒதுக்கும் கட்டுப்பாட்டு விலைத் துணி கூட்டுறவு பண்டகசாலைகளாலேயே விநியோகிக்கப்படுகிறது. சென்ற ஆண்டு சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள சுமார் 20,000 பேல் கட்டுப்பாட்டு விலைத் துணி விநியோகிக்கப்பட்டது. இதில் சுமார் 75 சதவீதம் கிராமப் புறங்களில் கூட்டுறவு பண்டகசாலைகள் மூலமாகவும் கூட்டுறவு கிராமக்கடைகள் மூலமாகவும் விநியோகிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் தீபாவளிக்காக சுமார் 3,500 பேல் கட்டுப்பாட்டு விலைத் துணி அதிகமாக ஒதுக்கீடு பெற்று விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும், இதர மில் துணிகளும் நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்கும் வகையில், சுமார் 6 கோடிரூபாய் மதிப்புள்ள துணி வகைகளை முக்கியமான மில்களிலிருந்து நேரடியாகப் பெற்று, சிறப்பங்காடிகள் மற்றும் கிளைகள் மூலம் கூட்டுறவு பண்டகசாலைகள் இந்த தீபாவளி சமயத்தில் விநியோகம் செய்தன. வெளிச் சந்தையைவிட 10 முதல் 15 சதவீதம் வரை விலை குறைவாக விற்கப்பட்டது. 1,052 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து தங்கள் உற்பத்தியை நேரடியாகவும், தமிழ் நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மூலமாகவும் ஆண்டுக்கு 60 கோடி ரூபாய் அளவில், பண்டிகைக் காலங்களில் சிறப்புத் தள்ளுபடி அளித்து, விற்பனை செய்கின்றன.

**உறைவிடம்:**

நகரங்களிலும், கிராமங்களிலும் வீடுகள் கட்டிக் கொள்வதற்காக, நீண்டகாலக் கடன்கள் வழங்க 1,282 வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாடு முழுவதும் இயங்கி வருகின்றன. இவை 1978-79ஆம் ஆண்டுவரையில் சுமார் 38,000 வீடுகள் கட்டி முடிக்கக் கடன்கள் வழங்கின. கிராமங்களில் வீட்டு வசதியை அதிகரிக்கும் பொருட்டு 360 கிராமப்புற வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் தனி கவனம் செலுத்தி இயங்கி வருகின்றன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வீடு கட்டும் திட்டம் 1962-ம் ஆண்டில் கைவிடப்பட்டது. இந்தத் திட்டம் 1979-80ம் ஆண்டில் மீண்டும் துவக்கப்பட்டு1000 ரூபாய் அரசு மானியமும்,4,000 ரூபாய் கடன் ஆக 5,000ரூபாய் மதிப்பில் 350 வீடுகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் 1,650 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**தொழில்கள்:**

நாட்டின் மிகப்பெரிய தொழிலாகிய வேளாண்மைத் தொழிலுக்குக் கூட்டுறவு முறை பயன்படும் விதம் ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. அடுத்த பெரிய தொழிலாகிய கைத்தறி நெசவுத் தொழில் அதே அளவுக்குக் கூட்டுறவு முறையைப் பின்பற்றி முன்னேறி உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில் 2.40 இலட்சம் கைத்தறிகள் 1,052 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்டு, நெசவாளர்கள் நியாயமான கூலி பெற்றுப் பயனடைந்து வருகிறார்கள். 12கூட்டுறவு நூற்பாலைகளில் மாதந்தோறும் உற்பத்தியாகும் சுமார் 7,000 பேல் நூல் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாயமான விலையில் விநியோகிக்கப்படுகிறது. கைத்தறித் துணி விற்பனையை அதிகரிக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு வட்டி மானியமும் விலைத் தள்ளுபடி மானியமும் வழங்கி இந்தத் தொழிலுக்கு ஆதரவு தந்து வருகிறது. கரும்பு உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் 10 தமிழ் நாட்டில் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 97,000 உறுப்பினர்கள் உள்ளனர். இவை ஆண்டொன்றுக்கு சுமார் 2.15 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்கின்றன. தேயிலை உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கும் பொருட்டு 12 தேயிலை கூட்டுறவு ஆலைகள் நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. 5,000க்கு மேற்பட்ட சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் இவற்றில் உறுப்பினர்களாகி உள்ளனர். இவை ஆண்டொன்றுக்கு 7½ கோடி ரூபாய் மதிப்புள்ள தேயிலையைப் பதப்படுத்தி விற்கின்றன. பால் விற்பனைக்கு உறுதி அளிக்கவும், நியாயமான விலை கிடைக்கவும், பால் உற்பத்தியாளர்களுக்காக சுமார் 3,600 பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 7 இலட்சம் உறுப்பினர்கள் இருந்து பயனடைகின்றனர். நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய 6 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்து விற்கப்படுகிறது. பனை வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு விற்பனை வசதியும், நியாயமான விலையும் கிடைப்பதற்காக சுமார் 900 கூட்டுறவுச் சங்கங்கள் பணி செய்கின்றன. இவற்றில் சுமார் இரண்டு இலட்சம் பனைவெல்ல உற்பத்தியாளர்கள் உறுப்பினர்களாக இருந்து, ஆண்டு ஒன்றுக்கு சுமார் 9கோடி ரூபாய் அளவிற்குப் பனை வெல்லம் உற்பத்தி செய்து விற்றுப் பயன் அடைகின்றனர். மீனவர்களுக்கு விற்பனை வசதியும் நியாயமான விலையும் கிடைப்பதற்காக, சுமார் 500 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் பணிசெய்கின்றன. இவற்றில் சுமார் 86,000 மீனவர்கள் உறுப்பினர்களாகி, ஆண்டொன்றுக்கு சுமார் 40 இலட்சம் ரூபாய் அளவிற்கு மீன்களைப் பிடித்து விற்றுப் பயனடைகின்றனர். குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்


களில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கூட்டுறவு நகர வங்கிகள் ஆண்டொன்றுக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு கடன் உதவி அளித்து வருகின்றன.

**இதர நலிந்த பிரிவினருக்கு உதவி:**

மலைவாழ் பழங்குடியினருக்காக 9 தனிக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 22,000 பழங்குடியினர், அதாவது அவர்களுடைய மொத்தக் குடும்பங்களில் 80 சதவீதத்தினருக்கு மேல் உறுப்பினர்களாகி உள்ளனர். அவர்களுக்குப் பயிர் செய்யவும், கறவை மாடுகள் வளர்த்தல் போன்ற உப தொழில்களுக்காகவும் 4 சதவீத குறைந்த வட்டிக்குக் கடன் வழங்கப்படுகிறது. இச் சங்கங்கள் கடுக்காய், புளி, சீயக்காய் போன்ற சிறு காடு படு பொருட்களை உறுப்பினர்கள் வாயிலாக சேகரம் செய்து, விற்பனை செய்வதன் மூலம் உறுப்பினர்களுக்கு அதிக வருவாய் கிடைக்க உதவுகின்றன.

தொழில் ஒப்பந்தக்காரர்களிடம் பணி செய்வதால், சரியான கூலி கிடைப்பது அரிது. தொழில் ஒப்பந்தங்களின் முழுப்பயனையும் அடைய தொழிலாளர்களே கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து பணிகளை நிறைவேற்றும் ஏற்பாடு ஊக்குவிக்கப்படுகிறது. இவ்வகையில் 22,000 தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட 111 தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. 1978-79ம் ஆண்டில் இச்சங்கங்கள் 136 இலட்சம் ரூபாய் பெறுமான பணிகள் செய்து, 108 இலட்சம் ரூபாய் கூலியாக உறுப்பினர்களுக்கு வழங்கின. மேலும், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள், சலவைத் தொழிலாளிகள், முடி திருத்தும் தொழிலாளிகள், உப்பளத் தொழிலாளிகள் போன்ற சமுதாயத்தில் மிக நலிந்த பிரிவினர்களுக்காகவும் தனி வகைச் சங்கங்கள், தம் உறுப்பினர்கள் அவரவர்கள் தொழிலைச் செய்து கணிசமான வருவாயைப் பெற உதவி செய்கின்றன.

கடன் நிவாரணச் சட்டத்தின் விளைவாக சென்ற இரண்டு, மூன்று ஆண்டுகளாக தனிப்பட்ட வட்டிக் கடைக்காரர்களிடமிருந்து மருத்துவச் செலவு போன்ற திடீர் செலவுகளுக்கு நகை ஈட்டின் பேரில் கடன் கிடைப்பது வெகுவாகக் குறைந்துவிட்டது. இந்தக் குறைவை ஈடுகட்டும் வகையில் கூட்டுறவு நகர வங்கிகளும், கூட்டுறவு மத்திய வங்கிகளின் கிளைகளும், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்



கங்களும நான்கு ஆண்டுகளுக்கு முன் சுமார் 400 இடங்களில் 22 கோடி ரூபாய் அளவிற்கு நகை ஈட்டுக் கடன்கள் கொடுத்து வந்ததைப் படிப்படியாக உயர்த்தி, 1979-80-ம் ஆண்டில் சுமார் 1,600 இடங்களில் 111 கோடி ரூபாய் அளவிற்கு இக்கடன்களை வழங்கின. இதனால் சுமார் 10 இலட்சம் பேர்கள் எளிதாகத் தங்களுடைய அவசரத்திற்குக் கடன்களை நியாயமான வட்டிக்குப் பெற முடிந்துள்ளது. நலிந்த பிரிவினர் வாழும் இடங்களுக்குச் சென்று அவர்களிடையேயும் சேமிப்புப் பழக்கத்தை உண்டாக்கும் எண்ணத்தோடு சென்னையில் நடமாடும் வங்கி கிளை என்று சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியால் அண்மையில் தொடங்கப்பட்டு நடந்து வருகிறது. இது தமிழ்நாட்டிலேயே முதல் நடமாடும் வங்கிக் கிளையாகும்.

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் இதர நிறுவனங்களிலும் அலுவலகங்களிலும் பணி புரிவோருக்கும் எளிதாகக் கடன் வசதி கிடைக்கும் பொருட்டு சுமார் 1,200 பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சுமார் 9 இலட்சம் உறுப்பினர்கள் ஆண்டொன்றுக்கு 120 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் பெற்று பயனடைகின்றனர். சிக்கனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகை ஒவ்வொரு உறுப்பினராலும் சங்கத்தில் சேமித்து வைக்கப்படுகிறது. இந்த வகையில் 60கோடி ரூபாய் அளவிற்கு இந்தச் சங்கங்களில் சிக்கன சேமிப்புத்தொகை சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**பொதுச்சேவை:**

கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுடைய நலனைப் பேணுவதோடு நில்லாமல், இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் வெள்ளம், புயல் போன்ற பேரிடர்களின் போது பாதிக்கப்படும் மக்களுக்குத் துயர் துடைக்கும் பணி புரிகின்றன. இலாபத்திலிருந்து ஒதுக்கும் பொது நல நிதியிலிருந்து உதவி செய்வதோடு உறுப்பினர்களும் பணியாளர்களும் நேரடியாக மீட்புப் பணியிலும் ஈடுபடுகிறார்கள்.

சென்ற ஆண்டு, மதுரை மாவட்டத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின்போது, மதுரை மீனாட்சி கூட்டுறவு பண்டகசாலைத் தலைவர் கே.ஜே. இராமமூர்த்தி அவர்களும், கோட்ஸ் ஆலைத் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலை செயலர் வி. இராஜகோபால் அவர்களும் இதர கூட்டுறவாளர்களுடைய துணையுடன், வெள்ளத்தில் சிக்கிய மதுரை நகர மக்களுக்கு மூன்று, நான்கு நாட்கள் உணவுப் பொட்டலங்கள் தயாரித்து வழங்கியதை என்றும் மறக்க முடியாது. இம்மாதிரி பொதுச் சேவைகளை அமைப்பு ரீதியாக சீரிய முறையில் செய்வதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவாளர்களைக் கொண்டே கூட்டுறவுத் தொண்டர் அணி அமைக்கப்பட்டு வருகிறது.

**தாயன்பு:**

ஒரு தாய் தன்னுடைய மக்களை அரவணைத்து ஒவ்வொருவருடைய தேவையையும் பரிவோடு தீர்த்து வைப்பது போல், கூட்டுறவு இயக்கம் மக்களின் எல்லாப் பிரிவினருக்கும் அவரவருடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள உறுதுணையாக இருக்கிறது. கூட்டுறவு முறையில் நம்பிக்கையும் ஆற்ற வேண்டிய கடமையில் கருத்தும் இருப்பது மிக மிக முக்கியம். கூட்டுறவு வளர்ச்சியால் பாதிக்கப்படும் தீயசக்திகள் அதற்குக் கேடு விளைவிக்க முயற்சிகள் பல செய்யலாம். மிட்டாய்க்கு ஆசைப்பட்டு பிள்ளை பிடிப்பவனோடு போகும் பிள்ளையைப் போல் ஏமாறாமல் கூட்டுறவுத் தாயின் நிலையான பாசத்தை எப்போதும் நினைவில் கொண்டு அந்தத் தாயிடம் உண்மையாக நடந்து கொள்ள வேண்டும். தான் ஈட்டும் பொருளைத் தாயிடம் தந்து, தாய் பரிவுடன் தரும் உணவைக் கொள்ளாமல், தாயை மறந்து வேறு எங்கெங்கோ சென்று உணவு அருந்தும் நிலையை உருவாக்கிக் கொண்டால் அது உடலுக்குக் கேடு; தன் மானத்திற்குக் கேடு; தாய் மானத்திற்கும் கேடு; தாய் போன்ற, தங்களுக்குச் சொந்தமான கூட்டுறவுச் சங்கத்திடம் தங்களுடைய உரிமையைத் தட்டிக் கேட்டு அடைவதுடன், அதற்குத் தாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைத் தவறாமல் ஆற்றினால், கூட்டுறவு முறையால் பெற முடியாத நலன் எதுவுமே இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம்.





# நேருவின் நினைவே நேரிய நினைவு!

மண்ணகம் கூடி மக்களைப் பெறலாம்
கோடி மக்களில் குணமுள ஒருவனைப்
பெறுவோர் தமக்கே பெற்றோர் எனும்பெயர்!
ஆல மரத்தில் ஆயிரம் இலைகள்
வந்தால் என்ன வாடினால் என்ன ?
வேரைப் பொறுத்தே விதியின் பயணம்
ஆணிவே ராக அமைந்தவர் சிலபேர்
உலக மெங்கினும் உத்தமர் இருப்பினும்
இலகு பெரும்புகழ் ஏற்பவர் சிலரே!
பண்டித நேரு பரம்பரைப் பெருமையன்
உண்டும் உறங்கியும் உதவா தவனாய்
கண்டது நாடிக் கரைந்தவன் அல்லன்;
வயது வந்து வாசலில் நின்றது
மனது இந்த மண்ணை நினைத்தது
அன்று தொடங்கிய அழியா உணர்ச்சி
என்றும் நின்றது இறுதி வரைக்கும்!
சென்றான் அவன்எனச் சேதியும் வந்தது;
தீயில் அவனுடல் சிதைவுற் றழிந்தது
நெருப்பும் அவனது நேர்மையைப் புகழ்ந்தது
காந்தியாம் அண்ணலும் கண்ணியன் நேருவும்
மாந்தர் உளவரை மறக்கவொண் ணாதவர்
சாந்தம் உரைத்த தலைவன் மகாத்மா
ஏந்தும் தொழில்களை இயக்கினான் நேரு
நேருவைப் போலொரு நேரிய மனிதன்
உள்ள வரைக்கே உலகம் பிழைக்கும்!
நாட்டுக் காகத் தன்னலன் இழந்தனன்
வீட்டை மறந்து விழுப்புண் பெற்றனன்
உத்தமர் நேருவை உளத்திற் பதித்து
அத்தகு மகன்போல் அழகிய மக்களைப்
பெற்றெடுப் போரே பேரும் பெற்றவர்
நேருவை தினமும் நினைப்போ மாக!
நிறைந்த மனத்துடன் நினைப்போ மாக!
நேருஇல் லாவிடில் நீயார், நான்யார்!
தேரும் இதையே தேசமே கேட்க!







அரசுக் கவிஞர் கண்ணதாசன்

# நேருவின் மணிமொழிகள்!



• மக்கள் பயிற்சி பெறுவதற்கும் குறைகளைக் குறைத்துக் கொள்வதற்கும் ஒரேயொரு வழிதான் உண்டு; பொறுப்பை ஏற்றுக் கொண்டு, செய்யும் பிழைகளின் மூலம் அனுபவம் பெற்றுக் கொள்ளும்படி செய்வதுதான் இந்த ஒரே வழி.

• சமுதாய நீதி வேண்டும் என்று இன்று மக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். ஏழையாகப் பிறந்தால் ஏழையாகவே இருக்க வேண்டும் என்று நினைத்து 'விதி', 'தலை எழுத்து' என்றெல்லாம் பேசுகிற பேச்சை இன்றைய மக்கள் குறைவாகவே மதிக்கிறார்கள். எனவே செல்வர்க்கும் வறியவர்க்கும் இடையேயுள்ள வேற்றுமைகளை நீக்க முயற்சிப்பது தவிர வேறுவழியில்லை. எல்லாருக்கும் சமவாய்ப்பு ஏற்படுத்தும் வகையிலே நாம் முயலத்தான் வேண்டும்.

* * * * *

• மனிதனுடைய கை, மூளை ஆகியவற்றின் விரிந்த வளர்ச்சியே கருவிகள். கருவிகள் மூலமாகக் கைத்திறனையும் மூளைத் திறனையும் பெருக்காவிட்டால் ஆற்றலும் வளராமல் சுருங்கிவிடும்.

• பழைய நாகரிகங்களிலே பல சீர்மைகள் உண்டு; என்றாலும் இன்றையத் தேவைகளுக்கு அவை போதியவை யல்ல என்பது தெளிவாகிவிட்டது.

• ஆணைகள் பிறப்பித்துச் செல்வத்தை உண்டாக்கிவிட முடியாது; உழைப்புத் தான் செல்வத்தைப் படைக்கும்.

* * * * *

• பணம், பணம் என்றே மக்கள் பேசுகிறார்கள். பணம் பயனுடையதுதான். ஐயமில்லை; ஆனால் முடிவான மதிப்பு மனிதனுக்குத்தான்; பணத்துக்கு அன்று! வரலாற்றை உருவாக்கியவன்—மனித சமுதாய முன்னேற்றத்தை உருவாக்கியவன் மனிதன்தான் ; பணம் அன்று.

• உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமாயின், அந்த நம்பிக்கையே மலைகளைக்கூட அசைத்து விடும்.

• பாதுகாப்பு என்பது போர் முனையில் போர் வீரர்கள் செய்யும் வேலை மட்டுமல்ல; நம்முடைய உற்பத்தியை அதிகமாகப் பெருக்குவதும் பாதுகாப்பு வேலைதான்; உற்பத்தியைப் பெருக்குவதற்காக விவசாயத்தில் புதுமுறைகளை நாம் கையாள வேண்டும்.

* * * * * *

• ஆத்ம திருப்தி கொண்டவர்களுக்காகவும் அறிவுக்கு வேலை கொடுக்க மறுப்பவர்களுக்காகவும் சமூகப் பொருளியல் நிலைமைகள்காத்துக்கொண்டிருப்பதில்லை. மக்களின் கருததுகள் நின்ற நிலையிலேயே இருக்கலாம்; ஆனால் சமூகப் பொருளியல் நிலைமைகள் நின்ற நிலையிலேயே இருப்பதில்லை. அவை வேகமாக முன்னேறிச் செல்கின்றன.

• உலகம் இருந்த இடத்திலேயே இருப்பதில்லை; யாரோ சொன்னது போல் நம்மைச் சரித்திரத்தின் குப்பைத் தொட்டியில் தள்ளிவிட்டு, அது முன்னேறிக் கொண்டே இருக்கிறது.

• விஞ்ஞானம் மனிதனுடைய அறிவை அதிகரித்தது மட்டுமின்றி, இயற்கையின் மீது அவன் செலுத்தக் கூடிய ஆதிக்கத்தையும் அதிகரிக்கிறது.

• யந்திரமும், யந்திரக்கைத்தொழிலும் வந்த பிறகு மதத்தின் பால் காட்டப்பட்டு வந்த அலட்சியம் இன்னும் அதிகரித்தது. குருட்டு நம்பிக்கையின் அடிப்படையை விஞ்ஞானம் தகர்த்தெறிந்துவிட்டது.

• விஞ்ஞானம் வாழ்க்கையின் வழி, துறைகள் எல்லாவற்றையும் அடியோடு மாற்றிவிட்டது. அது உலகிலேயே ஒரு புரட்சியை உண்டு பண்ணிவிட்டது.

• ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வையும் நாகரிகத்தையும் உள்ளவாறு பிரதிபலிக்கும் கண்ணாடி, கலையாகும். இந்திய நாகரிகம் உயிராற்றல் பொங்கித் ததும்பிய காலத்தில் அது அழகுப் பொருள்களைப் படைத்தது. கலைகள் சிறந்தோங்கின; அவற்றின் எதிரொலி தொலை நாடுகளிலும் கேட்கப் பட்டது.

# நேருவின் வாழ்விலே...

## -புலவர் தமிழ்ப்பித்தன்

இந்திய விடுதலைக்குப் பின்னர் ஒரு நாள்! காலையில் நேரு தமது அலுவலகத்திற்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தார். ரோஜா மலரை அவருக்கு அணிவிப்பதற்காக ஒரு சிறுமி அவரது இல்லத்தில் காத்திருந்தாள். ஆனால் அவளால் அந்த மலரை அவரிடம் சேர்ப்பிக்க முடிய வில்லை. ஏமாற்றத்துடன் வீடு திரும்பினாள்; என்றாலும் அவள் தனது முயற்சிக்கு ஓய்வு கொடுத்துவிடவில்லை. ஒவ்வொருநாள் காலையிலும் அன்று மலர்ந்த புது ரோஜா மலருடன் நேருவின் இல்லத்தின் வாயிலில் காத்திருந்தாள். ஒருநாள் அவள் ரோஜாமலரை ஏந்திக் கொண்டு காத்திருந்ததைக் கண்டுவிட்டார் நேரு. புன்னகை புரிந்தவாறு, அந்தச்சிறுமியின் அருகில் சென்று, மலரை வாங்கிக் கொண்டார். மிகுந்த விருப்பமுடன் தனது அங்கியில் பொருத்திக் கொண்டார். அந்தச் சிறுமியின் இதயம் பெருமகிழ்ச்சியடைந்தது. அவள் வீடு திரும்பினாள். அந்தக் காட்சியைக் கவனித்த அவரது வீட்டுத் தோட்டக்காரன் நேருவுக்கு ரோஜாவென்றால் பிடிக்கும் என்பதை அறிந்துகொண்டான். அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் அன்றலர்ந்த ரோஜா மலரைப் பறித்து அவருக்கு அளித்து வந்தான். அவரும் தொடர்ந்து அங்கியில் அணிந்து வந்தார். டெல்லியில் இருந்தபோது மட்டுமல்ல - அவர் எங்கு சென்றாலும் ரோஜா மலரை விருப்பமுடன் அணிந்து வந்தார்.

1946ஆம் ஆண்டு; நேரு அவர்கள் லாகூரிலிருந்து அமிர்த சரசுக்குப்போய்க் கொண்டிருந்தார். வழியில் அவரது ஊர்தி பழுதடைந்துவிட்டது; அப்போது அந்த வழியில் வந்த ஒருவர் அக் காட்சியைப் பார்த்து தனது ஊர்தியை நேருவுக்குக் கொடுத்துதவினார். நேருவும் குறித்த நேரத்தில் அமிர்தசரசுக்குப் போய்ப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

சில வருடங்கள் கழித்து அதே நபர் அலகாபாத்துக்குச் செல்ல நேர்ந்தது. அப்போது நேரு அங்கே இருந்தார். எனவே அவரைக் காண அந்த நபர் விரும்பினார். வழக்கமான ஆங்கிலப் பாணி உடையணிந்திருந்த அந்த நண்பர், தனது இல்லத்தரசியின் தூண்டுதலால் புதிதாகக் கதர் ஆடை வாங்கி அணிந்துகொண்டு ஆனந்த பவனத்துக்குச் சென்று நேருவைச் சந்தித்தார்.

''என்னை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா? நான் தான் முன்பு ஒருமுறை.....'' என்று இழுத்தார் அந்த நண்பர்.

உடனே நேரு குறுக்கிட்டார்.

''உங்களை எனக்கு அடையாளம் புரியவில்லை. அமிர்தசரசுக்குப்போவதற்கு ஊர்தி கொடுத்து உதவிய நண்பர் 'சூட்' அணிந்திருந்தார். அவர் என்னை மீண்டும் பார்க்க வரும்போது தனக்குப் பழக்கமில்லாத உடையை அணிந்து இப்படி 'பபூன்' போல வருவார் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை'' என்றார்.

வந்திருந்த நண்பர் தன்னை மறந்து சிரித்துவிட்டார். ஒரு முறை ஒருவரைப் பார்த்திருந்தாலும் கூட, அவரைப் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் திறமை நேருவிடம் இருந்தது என்பதற்கு இந்நிகழ்ச்சி சான்றாகத் திகழ்கிறது.

நேரு ஒருமுறை சென்னைக்கு வந்தபோது தீவுத்திடலில் ஒரு பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நூற்றுக் கணக்கான ஒலி பெருக்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. நேரு பேசிக்கொண்டிருந்தார். 'ஒன்றும் கேட்கவில்லை' என்ற கூச்சல் ஒரு மூலையில் எழுந்தது. எந்த ஒலிபெருக்கியில் கோளாறு என்று தெரியவில்லை. தலைவர்கள் எல்லாரும், 'அமைதியாக இருங்கள் 'என்று மக்களைக் கேட்டுக் கொண்டனர். பயன் கிடைக்கவில்லை. கூச்சல் அதிகமாகிக் கொண்டே வந்தது', உடனே ''என் பேச்சு யாருக்குக் கேட்கிறதோ அவர்கள் எல்லாம் கையைத் தூக்குங்கள்'' என்றார் நேரு. உடனே பலரது கைகள் எழுந்தன. பின்னர், ''கேட்காதவர்கள் கை தூக்குங்கள்'' என்றார். அதற்கும் பலர் கை தூக்கினார்கள். உடனே, நேரு ''கேட்கவில்லை என்றால் இப்போது



நான் வேண்டிக்கொள்வது எவ்வாறு உங்களுக்கெல்லாம் கேட்டது?'' என்றார். பலத்த சிரிப்பொலி அந்தக் கூட்டத்தில் எழுந்தது.

நேரு ஒருமுறை தென்னகத்தில் சுற்றுப் பயணம் செய்து

கொண்டிருந்தார். வழியெல்லாம் காரை நிறுத்தி மக்களுக்குக் காட்சியளித்து வந்தார். இடையில் ஓர் ஊரில் கார் நிறுத்தப்பட்டது. வழி ஓரத்தில் முதியவர் ஒருவர் பலூன் விற்றுக்கொண்டிருந்தார். அவருடைய முதிர்ந்த நிலையையும் தள்ளாத பருவத்தையும் பார்த்த நேரு வண்டியிலிருந்து இறங்கி அம் முதியவரின் தோள்மீது அன்புடன் கையை வைத்தார்.

பலூன்களின் விலை என்னவென்று கேட்டார். பலூன் ஒன்றின் விலை இரண்டனா என்றார் அந்த முதியவர். அவரிடம் சில பலூன்கள் இருந்தன. நேரு வழக்கமாகப் பணம் எதுவும் கையில் எடுத்துச் செல்வதில்லை. உடனே அருகிலிருந்த ஒருவரிடம் 20 ரூபாய் கடன் வாங்கி அந்த முதியவரிடம் கொடுத்து அவரிடமிருந்த பலூன்கள் அனைத்தையும் வாங்கி, சுற்றி நின்று கொண்டிருந்த சிறுவர்களிடம் கொடுத்துவிட்டார்.

யானையைக் கண்டால் பிஞ்சுக் குழந்தைகள் மகிழ்ச்சியடைவது இயல்பு. எந்த நாட்டைச்சேர்ந்த குழந்தையாக இருந்தாலும், இந்தக் குணத்திற்கு விலக்கு அல்ல.

இரண்டாவது உலகப்போரின் காரணமாக, ஜப்பான் விலங்குச் சாலையில் உள்ள யானைகள் கொல்லப்பட்டுவிட்டமையால், அங்கு யானையே இல்லாதிருந்தது. அதனால் கவலையுற்ற ஜப்பான் நாட்டுக் குழந்தைகள், 'யானையை அனுப்ப வேண்டும்' என்று இந்தியத் தலைமைஅமைச்சர் நேருவுக்கு அன்புக் கடிதம் எழுதினார்கள். குழந்தையுள்ளம் கொண்ட நேரு, குழந்தைகளின் வேண்டுகோளை உடனடியாக நிறைவேற்ற முற்பட்டார். மைசூரிலிருந்து ஒரு பெண் யானைக் குட்டியை ஜப்பானுக்கு அனுப்பி வைத்தார். மைசூரிலிருந்து கல்கத்தா சென்று அங்கிருந்து கப்பல் பயணம் செய்த அந்த யானையின் பெயர் இந்திரா.

இதே யானையை எட்டு ஆண்டு கழித்து, ஜப்பான் சென்றபோது நேரு கண்டார்.

ஜப்பானுக்கு யானை அனுப்பப்பெற்ற செய்தி உலகெங்கும் பரவியது. உடனே பல நாடுகளிலிருந்தும், யானைக்குட்டி கேட்டுக் கடிதங்கள் நேருவுக்கு வரத் தொடங்கின.

அமெரிக்கக் குழந்தைகளுக்கு இரண்டு யானைக் குட்டிகளை அனுப்பினார். ஒன்று பெண்; மற்றொன்று ஆண். பெண்ணின் பெயர் சாந்தி; ஆணின் பெயர் அசோக். அந்த இரண்டு யானைகளும் கப்பல் பயணம் செய்து அமெரிக்கா சென்றன.

துருக்கி நாட்டில் யானையைப் பார்க்கவேண்டும் என்று விரும்பிய ஒரு சிறுமி, தனது ஆசையைத் துருக்கியிலுள்ள பத்திரிகை ஒன்றில் தெரிவித்திருந்தாள். இந்தச் செய்தி நேருவுக்கு எப்படியோ எட்டிவிட்டது. உடனே 'மோகினி' என்னும் பெயருடைய பெண் யானைக் குட்டியைத் துருக்கிக்கு அனுப்பி வைத்தார் நேரு.

ஜெர்மன், ஆலந்து, ரஷ்யா, அரேபியா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கெல்லாம் யானைக் குட்டிகளை அனுப்பி அங்குள்ள பிஞ்சுக் குழந்தைகளின் நெஞ்சங்களிலெல்லாம் இடம் பெற்றார் நேரு. உலகக் குழந்தைகளிடம் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டைத் தெரிவித்து வருகிறது நேருவின் யானைப் பரிசு.



**1953**-ம் ஆண்டு.

டெல்லியில் குழந்தைகளுக்கான படம் ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. யூகோசுலேவியா நாட்டின் படம் அது. அதனைக் குழந்தைகளுடன் குழந்தையாக அமர்ந்து நேருவும் பார்த்தார். படம் முடிந்தவுடன் அங்கிருந்த பிஞ்சுக் குழந்தைகளைப் பார்த்து ''இந்தப் படம் என்ன என்று புரிந்ததா? யூகோசுலேவியா பற்றி உங்களுக்கு என்ன புரிந்தது?'' என்று கேட்டார் நேரு.

குழந்தைகள் பல்வேறு விதமான பதில்களைத் தெரிவித்தனர்.

உடனே நேரு யூகோசுலேவியா பற்றியும் அந்தத் திரைப் படத்தில் நடித்த வீரச் சிறுவனைப் பற்றியும் ஒரு வகுப்பே நடத்தி விட்டார். மறுநாள் டெல்லிப்பத்திரிகைகளில் அந்தச் செய்தி முதலிடம் பெற்றது. பத்திரிகைகள் இந்தச் செய்திக்கு என்ன தலைப்புக்கொடுத்தன தெரியுமா?

''ஆசிரியர் வேலை பார்த்தார் பிரதமர் நேரு''.

ஆள் இல்லாத அறைகளில் விளக்கு எரிந்து கொண்டிருந்தால், அதனை அசட்டை செய்யாமல், உடனே ஓடிச்சென்று அணைத்து விடுவார் நேரு. எழுத்துப் பிழைகளை அவரால் பொறுத்துக் கொள்ள முடியாது. 'கட்டுரை, செய்திகள், ஆகியவற்றைத் தட்டச்சு செய்யும்போது மிகுந்த இடைவெளி விடப்படுவதை அவர் விரும்புவதில்லை. காகிதங்களை 'பைல்' செய்வது, பின்குத்துவது ஆகியவை கூட ஒழுங்காகவும் துப்புரவாகவும் இருக்க வேண்டும். 'பைல்'களில் காகிதங்களை எவ்வாறு அடுக்கி வைப்பது என்பதைக்கூட அவரே எடுத்துக் கூறுவார்.

நேருவைப் பார்க்க அவரது மாளிகைக்குப் பல்வேறு விதமான மக்கள் நாள்தோறும் வருவார்கள். பார்வையாளர்களில் முதியோர் உண்டு; இளையோர் உண்டு; சிறுவர், சிறுமியர் உண்டு.

அவர்களுடைய பிரச்சினைகளையெல்லாம் நேரு அக்கறையுடன் கேட்டு ஆவன செய்வார். அதனால் அனைவரும் உரிமையுடனும் உற்சாகத்துடனும், அணிதிரண்டு வந்து நேருவிடம் தங்கள் குறைகளைத் தெரிவித்து வருவார்கள்.

ஒரு நாள் ஒரு தோட்டி தனக்கு ஏற்பட்ட குறையை நேருவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். நேரு மிகுந்த அக்கறையுடன் கேட்டுக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அதிகாரி ஒருவர் குறுக்கிட்டு, நேரு அவர்களுக்கு வேறு பணி இருப்பதை நினைவூட்டினார். உடனே நேருவுக்குக் கோபம் வந்துவிட்டது. அந்த அதிகாரியைக் கனல் தெறிக்கப் பார்த்தார்.

''உங்களுக்கெல்லாம் இதயமே இல்லையா?'' என்று கேட்டார். அந்த அதிகாரி உடனே அங்கிருந்து நகர்ந்து விட்டார். அதன் பின்னர் மூதாட்டியின் பிரச்சினை முழுவதையும் கேட்டுவிட்டுத் தான் நேரு புறப்பட்டார்.



# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தலைவர் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்களின்

## சிறப்புப் பேட்டி

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நோக்கம் என்ன?**

தமிழகத்திலுள்ள மக்கள் அனைவருக்கும், நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தேவையான அளவில் கிடைக்கச் செய்ய திட்டங்கள் தீட்டிச் செயல் படுத்துதல்; நகர்ப்புறங்களில் வடிகால் திட்டங்களை வடிவமைத்துச் செயல் படுத்துதல் ஆகியனவாகும்.

**• தமிழகம் முழுவதும் குடிநீர் வடிகால் வாரியம் செய்துவரும் பணிகள் என்னென்ன?**

நடப்பு ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் (வகைகள் 1-2) 2000 குடியிருப்புக்களுக்கும், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 2242 குடியிருப்புக்களுக்கும் குடிநீர் வழங்கும் பணியை வாரியம் செய்து வருகிறது.

**• இதுவரை எத்தனைக் கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது?**

வாரியம் தொடங்கப்பட்ட 1971 முதல் 1980 மார்ச் முடிய 21,600 கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

**• இன்னும் எத்தனைக் கிராமங்களுக்குக் குடிநீர் வசதி தர வேண்டும்?**

இன்னும் 10,307 கிராமங்களுக்கு (வகைகள் 3,4, 5) குடிநீர் வசதி செய்து தர வேண்டும்.

**• கைப்பம்புகள் எத்தனைப் போடப் பட்டுள்ளன? மேநிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் எத்தனைக் கட்டப் பட்டுள்ளன? எத்தனை கட்டும் திட்டம் உள்ளது?**

18,340 கைப்பம்புகள் போடப்பட்டுள்ளன. 10,750 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டப் பட்டுள்ளன. 1,150 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் நடப்பு ஆண்டில் கட்டி முடிக்கப்பட உள்ளன.

**• பாதாளச் சாக்கடைத் திட்டம் பற்றி சற்று விவரமாகக் கூறலாமா?**

தமிழ்நாட்டில் மொத்தம் 740 நகரங்கள் உள்ளன. இதன் மக்கள் தொகை 155 லட்சங்களாகும். இந்த 740 நகரங்களில், இதுவரை 2 மாநகராட்சிகள் உட்பட, மொத்தம் 13 நகரங்களில் வடிகால் திட்டங்கள் பயனில் உள்ளன. இதனால் பயனடையும் மக்கட் தொகை சுமார் 14.60 லட்சங்களாகும். மேலும் 10 நகரங்களில் (மேம்பாடு திட்டங்கள் உள்பட) ரூ. 2,445.95 இலட்சங்கள் செலவில், வடிகால் திட்டங்கள் செயலில் உள்ளன. 3 நகரங்களில் வடிகால் திட்டங்கள் ஆய்வில் உள்ளது.

**பேட்டி: ஜி. ஆனந்தன்**

## பேருந்துகள், ஒப்பந்த ஊர்திகளில் மின்விசை வேகக்கட்டுப்பாடு சாதனம்

நமது சாலைகளில், பெரிய மற்றும் மரணத்தை விளைவிக்கும் அதிக அளவிலான விபத்துக்கள் நடைபெறுவதைத் தமிழ்நாடு அரசு ஆழ்ந்த வருத்தத்துடன் நோக்குகிறது. அதி வேகமாக கனரக வாகனங்கள் ஓட்டப்படுவதால் தான் இம்மாதிரி விபத்துக்கள் ஏற்படக் காரண மாகிறது எனக் கருதப்படுகிறது. பேருந்துகள், ஒப் பந்த ஊர்திகள் (ஆம்னி பஸ்) மற்றும் கனரக சரக்கு வாகனங்களில் இந்திய தரக்கட்டுப்பாட்டுக் குழு அல்லது மாநில அரசின் ஒப்புதல் பெற்ற மின் விசை வேகக்கட்டுப்பாட்டுச் சாதனம் கட்டாய மாகப் பொருத்தப்பட வகை செய்யும் பொருட்டு 1940ம் வருட மோட்டார் வாகனச் சட்டத்தில் 381-ஏ என்ற புதிய விதி அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி குறித்த அறிக்கையானது 6-2-80 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளி யிடப்பட்டு அந்நாள் முதல் நடைமுறைக்கு வந் துள்ளது. ஆகையால் மேற்சொன்ன விதியின் படி இந்திய தரக்கட்டுப்பாட்டுக் குழு அல்லது மாநில அரசின் ஒப்புதல் பெற்ற மின்விசை வேகக்கட்டுப்பாட்டுச் சாதனத்தைக் கட்டாயமாக எல்லா பொதுப்பணி வண்டிகளான பேருந்துகள், ஒப்பந்த ஊர்திகள் (ஆம்னி பஸ்) மற்றும் கனரக சரக்கு வாகனங்களில் பொருத்தப்படல் வேண் டும்.

---

மக்கட்தொகை ஒரு இலட்சத்திற்கு மேல் உள்ள நகரங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் செயலில் உள்ள நகரங்கள் அனைத்திற்கும், போதிய நிதி ஒதுக்கீடு வசதி இல்லாததால் வடிகால் திட்டங்கள் செயலுக்கு எடுத்துக் கொள்ள இயலவில்லை. எனினும் நகராட்சிகள், பேரூராட்சிகள் வைப் புத் தொகையாக நிதி வசதி அளித்தால், பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் செய லில் உள்ள, விடுபட்ட நகரங்கள் அனைத்திற் கும், வடிகால் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

● 'கூவம்' சீரமைப்புத் திட்டம் எந்த நிலை யில் உள்ளது?

கூவம் சீரமைப்புத் திட்டம் தமிழ்நாடு அரசின் தீவிர பரிசிலனையில் உள்ளது.

● புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா? திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக உலக வங்கியின் பங்கு என்னென்ன?

60 புதிய குடிநீர்த் திட்டத்திற்கும், 9 குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கும் ரூ. 85 கோடி உலக வங்கியிடம் கோரப்பட்டு இருக் கிறது.

● குடிநீர் பாதாளச் சாக்கடை நீரோடு கலந்து விடுவதாகக் கூறப்படுகிறதே, இது பற்றித் தாங்கள் (அரசு) எடுத்த நடவடிக்கை என்ன? அப்படி நடக்க என்ன காரணம்?

குடிநீரும், சாக்கடை நீரும் ஒன்றாகக் கலக்க வாய்ப்பில்லை என அறிகிறேன். கழிவு நீர்க் குழாய்கள், பல தரப்பட்ட ஆழததில் புதைக்கப்பட்டுள்ளன. குடிநீர்க் குழாய்கள் தெரு ஓரத்தில் உள்ள போது, கழிவுநீர்க் குழாய்கள் தெருவின் மத்தியில் செல்லுவதால் இரண்டு நீரும் கலப்பதற்கு எந்த வகையிலும் வாய்ப்பில்லை. பழுதடைந்த குடிநீர்க்குழாய் கள் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தால் அவ் வப்போது மாற்றப்படுகிறது.

● பொதுவாக, பணிகள் தாமதமாக நடை பெறுகின்றன என்று பரவலாக ஏற்பட்டுள்ள குறைகளைத் தவிர்க்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப் படுகிறதா?

தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள் தமிழ்நாடு முழுவதும் வேகமாகவும், துரிதமாகவும் நடைபெற்று வருகிறது. ஆங்காங்கு உள்ள கண்காணிப்புப் பொறியாளர்கள், நிர்வாகப் பொறியாளர்கள், உதவி நிர்வாகப் பொறியாளர்கள், மற்றும் உதவிப் பொறியாளர்கள் மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி தன்னிறைவுத் திட்டம் விரைவு படுத்தி முடிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்கள். மேலும் தாமதத்திற்குக் காரணம் சி. ஐ. பைப்புகள், ஏ. சி. பைப்புகள் மற்றும் பி. வி. சி. பைப்புகள் சரியானமுறையில் காலாகாலத்தில் சப்ளை கிடைக்காததால் தாமதம் ஏற்படு கிறது. அதைத் தவிர்க்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

● மாவட்டந்தோறும் மக்கள் கருத்துக் களை அறிய பொதுமக்கள், அரசு அலுவலர் கள் ஆகியோர் மாநாட்டைக் கூட்டும் உத் தேசம் உண்டா?

கடந்த இரண்டு மாத காலமாகத் தமிழ் நாட்டில் உள்ள 12 மாவட்டங்களில் தமிழ் நாடு குடிநீர் வடிகால் திட்டக் கருத்தரங்கு கள்-நடைபெற்று முடிவடைந்துள்ளன. மேற் படி கருத்தரங்குகளில் மக்கள்பிரதிநிதிகளான சட்டமன்ற, பாராளுமன்ற மற்றும் மேலவை உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியாளர்கள், நகராட்சி ஆணையாளர்கள், தனி அதிகாரி கள், பொறிஞர்கள் மற்றும் ஒன்றிய ஆணை யாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு வெற்றி கரமாக முடிந்து உள்ளது. இக்கருத் தரங்குகள் மூலம் திட்டப் பணிகள் துரிதப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.



# கூட்டுறவு மூலம் பெருகும் தொழில்கள்



தமிழ்நாட்டில் 1979-80-ல் 6850 சிறு தொழில் பிரிவுகள் செயல்படத் துவங்கின. இதனால் 80,000 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைத்தது. தொழில்துறை 1978-ல் மார்ச் மாதத்தில் 297 தொழில்கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தது. இது 1980 மார்ச்சில் 559ஆக உயர்ந்தது. இச்சங்கங்கள் 1979-80ல் ரூ. 2,489.33 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்தன. தேயிலை தீக்குச்சித் தொழில்களுக்குத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதில் குறிப்பிடத்தக்க வெற்றி கிட்டியுள்ளது.

12,434 ஏக்கர் பரப்பளவில் 12 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. அங்கு 35,730 பேர் பணியாற்றுகின்றனர். கடந்த இரண்டாண்டுகளில் இம்மாநிலத்தில் தீக்குச்சித் தொழில் குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ந்துள்ளது. ஆயத் தீர்வையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அனுகூலமாக எடுத்துக் கொண்டு, மாநில அரசு, புதிதாக ஏறக்குறைய 3,000 தீக்குச்சித் தொழில் பிரிவுகளை 30 தீக்குச்சிச் சங்கங்கள் மூலமாக உருவாக்கியுள்ளது. கதர்-கிராமத்தொழில் வாரியம் மேலும் ஏறக்குறைய 2,000 தொழில் பிரிவுகளை உருவாக்கியுள்ளது.

இப்புதிய தீக்குச்சிப் பிரிவுகள் ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். அவர்களில் 90 சதவீதத்தினர் பெண்களாக இருப்பர். தீக்குச்சித் தொழில் பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், 1978-79ல் 100 ஆக இருந்து, 1979-80ல் 255 ஆக உயர்ந்தது.

கிராமப் பகுதிகளில் கணிசமான அளவுக்கு வேலை வாய்ப்பளிக்கும் பிற தொழில்கள் தோல், கயிறு ஆகும். தொழில் துறை சிறிய அளவில் தோல் பதனிடுவோருக்கு உதவ வேண்டி தோல் நேர்த்தி செய்வதற்குப் பணித் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து வருகிறது. நாட்டில் தேங்காய் உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. இம் மாநிலத்தில் சுமார் 36,000 டன் கயிறு தற்போது உற்பத்தி செய்யப்படுகிறது. அதனால் சுமார் 23,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பது, மட்டையைப் பலவிதத்தில் பயன்படுத்திக் கொள்வதை மேம்படுத்துவது ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு கயிறு உற்பத்தி அளவை இரண்டு மடங்காக உயர்த்த முடியும். அத

---

## திருத்தியமைக்கப்பட்ட தமிழக மாநிலத் திட்டக் குழு

தமிழக மாநிலத் திட்டக் குழு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

திட்டக் குழுவின் தலைவர் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள்.

துணைத் தலைவர் திரு டி.கே. சீனிவாசன் அவர்கள்.

### முழுநேர உறுப்பினர்கள் :

டாக்டர் பிரைட் சிங் (தற்போதைய உறுப்பினர்) அவர்கள், மதுரை காமராஜர் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு அவர்கள்.

### பகுதி நேர உறுப்பினர்கள் :

டாக்டர் பி. சிவராமன் (இந்தியத் திட்டக் குழுவின் முன்னாள் துணைத் தலைவர்), பேராசிரியர் நாயுடம்மா (அடையாறு மத்திய தோல் ஆராய்ச்சி நிலைய வல்லுநர்), டாக்டர் சாந்தப்பா (அடையாறு மத்திய தோல் ஆராய்ச்சி நிலைய தற்போதைய இயக்குநர்), டாக்டர் அறம் (காந்தி கிராமப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்), தொழிலதிபர் மகாலிங்கம், எம். எம் கனி (கோழிக்கோடு பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர்), டாக்டர் ஏ. வெங்கடராமன் (தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்), திருமதி சரோஜினி வரதப்பன் (இந்திய செஞ்சிலுவைச் சங்கத் தலைவர்), க. திரவியம் ஐ.ஏ.எஸ், (தமிழக அரசின் இரண்டாவது செயலாளர்.)

இந்த உறுப்பினர்களின் பதவிக் காலம் ஓராண்டாகும்.

தமிழ்நாட்டுக்கான ஐந்தாண்டு மற்றும் ஓராண்டுத் திட்டங்களை வகுத்துத் தீவிரமாக செயல்படுத்த இவ்வாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

னால் மேலும் சுமார் 47,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கலாம். கயிறு தயாரிக்கும் தொழிலாளர்களுக்குக் கயிறு பின்னும் நிலையங்களையும் இழை பிரிக்கும் பிரிவுகளுக்கும், கயிற்றுத் தறிகளை விநியோகிப்பதற்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களையும் அமைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

## தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதில், அதிலும் குறிப்பாக நலிந்துள்ள மக்களுக்கும், கிராம மக்களுக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதில் தொழில் துறையின் ஆற்றல் மிக்க அமைப்புகளில் ஒன்றாகத் திகழ்வது, தொழிற் கூட்டுறவுச் சங்கங்களே ஆகும். இந்த ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் போற்றத்தக்க அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளன. 1978ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதியில் தொழில் வணிக இயக்ககத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 297 ஆக இருந்தது. இது 1980 ஆம் ஆண்டு மார்ச் இறுதியில் 559 ஆக உயர்ந்துள்ளது.

இவை அனைத்தும், இவற்றின் முழு உற்பத்தி அளவினைஎட்டியிராவிட்டாலும் உற்பத்தி மற்றும் விற்பனையில் அவை போற்றத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளன. 1976-77-ல் 396 சங்கங்கள் இயங்கி வந்தன. இவை 1,128. 58 இலட்ச ரூபாய்க்கு உற்பத்தியையும் 12,97.19 இலட்ச ரூபாய்க்கு விற்பனையும் செய்திருந்தன. 1979-80ல் சங்கங்களின் எண்ணிக்கை 559 ஆக இருந்தது. இவற்றின் உற்பத்தி, விற்பனை முறையே 2,489.33 இலட்சமாகவும் 2,874.25 இலட்சமாகவும் இருந்தது.

## தேயிலைத் தொழில்

இந்த ஆண்டில் ஒரு சங்கம் பதிவு செய்யப்பட்டதையும் சேர்த்து, தொழிற் கூட்டுறவுத் துறையிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது.

## பால் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ் நாட்டில் பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள் 3,558 உள்ளன. இவற்றில் 7,77,741 உறுப்பினர்கள் உள்ளனர். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 1,67,26,756.

"எறும்பின் சுறுசுறுப்பும் எருதின் உழைப்பும், நரியின் தந்திரமும் நாயின் விசுவாசமும், கழுதையின் பொறுமையும், காகத்தின் கூட்டுறவும், புறாவின் ஒழுக்கமும் சிங்கத்தின் நடையும், யானையின் அறிவும், மானின் வாழ்வும் மக்களுக்குத் தேவை"

—முத்தமிழ்க் காவலர்
**கி. ஆ. பெ. விசுவநாதம்**

தமிழ்நாட்டில் 17 பால் வழங்குஒன்றியங்கள் உள்ளன. இவற்றில் மேலும் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் 6 உள்ளன. இவற்றின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 1,80,88. செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 38.16 இலட்சம்.


ஆனந்த் பாணியில் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அதிக அளவில் உருவாக்க அரசு எடுத்த தீர்மானத்தைச் செயல்படுத்த 1977-78-ல் மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக்கோட்டையில் ஒன்றும் திருச்சி மாவட்டத்தில் கரூரிலும் 2 பால் கொள் முதல் குழுக்கள் நிறுவப்பட்டன. இவை 1980-81ல் ஆனந்த்பாணி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றைத் தொடங்கத் தொடர்ந்து செயல்படும்.

பால் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களின் இருப்பிடத்திலேயே கால் நடைகளுக்கு மருத்துவ உதவி கிடைக்கும் வகையில் தஞ்சை, திருச்சி மற்றும் கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் மூன்று நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் 1977-78-ல் நிறுவப்பட்டன. கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு நடமாடும் கால்நடை மருத்துவநிலையம் அமைக்க 1979-80ல் அரசு அனுமதியளித்தது. மேலும் 4 நடமாடும் கால் நடை மருத்துவ நிலையங்கள் 1980-81ல் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1979-80-ல் கன்னியாகுமரி கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியம் (பங்குத் தொகை 3.50 இலட்சம் ; கடன் 3.50 இலட்சம்), தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி விற்பனைக் கூட்டமைப்பு (பங்குத் தொகை 350 இலட்சம் ; கடன் 3.50 இலட்சம்) திருச்சி-திருவரங்கம் மத்திய கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியம் (2.50 இலட்சம் பங்குத்தொகை; 2.50 இலட்சம் கடன்) ஆகியவற்றின் வளர்ச்சிக்காகவும் விற்பனை வசதிகளுக்காகவும் 50 சதவீதம் கடனாகவும் 50 சதவீதம் பங்குத்தொகை உதவியாகவும் நிதி வசதி அளிக்கப்பட்டது. 1979-80-ல் ஒரு இலட்ச ரூபாய் அளவில் 25 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்குமூலதன உதவி அளிக்கப்பட்டது.

—மாமூலன்





# 'இனி ஒரு விதி செய்வோம்!'

எச். பி. என். ஷெட்டி இ.ஆ.ப.,
ஆணையர், செயலாளர்,
ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித்துறை,
தமிழ்நாடு அரசு

கிராமங்களே இந்தியாவின் இதயம் என்றார் அண்ணல்காந்தி அடிகள். ஒருமனிதனின் உடல் நலத்தையும், உடல் வளத்தையும் ஒருங்கே கட்டுப்படுத்திப் பெருக்குகின்ற ஆற்றல் இதயத்திற்கே உண்டு. அதற்கிணங்க ஒரு நாட்டின் வளர்ச்சி கிராமங்களின் வளர்ச்சியின் பின்னணியிலேதான் அமைவது கண்கூடு. எனவேதான் அன்று முதல் இன்று வரை கிராம வளர்ச்சியிலே இணையற்ற ஈடுபாடு கொண்டு செயல்படுகிறது நமது அரசு.

வாழ்க்கை வீதியில் வேகமாகச சுழல்கின்ற காலச் சக்கரங்கள், தன்னுடைய இயல்பான சுழற்சிக்கு முன் எண்ணற்ற இடையூறுகளைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. அவ்விடையூறுகளைக் களைந்தெறியும் கடமை அரசுக்கு உண்டு. எனவே அத்தகைய இடையூறுகள் எவை என்று உற்று நோக்கும் போது.... வேலையில்லாமையும், தேவைக்குத் தக்க வேலையில்லை என்ற நிலையும் வெளிப்படையாகத் தெரிந்தன. அனைத்துப் பிரச்சினைகளும் இந்தஅடிப்படையிலேதான் எழுந்துள்ளன என்பதை உணர்ந்த அரசு, கிராமப்புறங்களிலே வேலை இல்லை என்ற நிலையை நேற்றைய நிலையாக மாற்ற அறிமுகப்படுத்திய திட்டம்தான் 'உழைப்புக்கு உணவு திட்டமும்', 'வேலை வாய்ப்பு உறுதித் திட்டமும்'.

## புதுப்பரணி

வறுமைக்கு எதிராகப் போர் தொடுத்துப் புதுப் பரணிபாடும் இத்திட்டங்கள், தமிழகத் தரணி முழுவதும் செயல்பட்டு கிராம வாழ் மக்கள் வாழ்வில், புதிய பொற்காலத்தைப் படைத்து வருகின்றன. வரலாறு காணா இவ் வளமை குறித்து மொத்தமாகக் காணாமல், மாவட்ட வாரியாகக் காண்பது நன்று என்று கருதுகின்ற நான் முதற்கண் உங்களைத் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு அழைத்துச் செல்கிறேன்......

திருச்சி.. உயர்ந்து நிற்கும் மலைக் கோட்டையையும், ஓயாது ஓடிக் கொண்டிருக்கும் காவிரியையும் கொண்டு திகழ்கின்ற ஒரு மாவட்டம். அந்த மாவட்டத்தைச் சார்ந்த மண்ணச்சநல்லூர் ஒன்றியத்திலுள்ள ஓர் கிராமத்தில்.....

30.9.79 அன்று காலை—

இத்திட்டங்களை தன் பொற்கரங்களால் துவக்கி வைக்கின்றார் முதலமைச்சர். ஊருக்கு உழைத்து அதே வேளையில் அவ்வுழைப்பால் கிடைக்கும் தானியப் பொருள்களைத் தனக்கு உணவாக்கி, தானும் வாழ்ந்து நாட்டையும் வளப்படுத்த முதலமைச்சர் முன்னிலையில் உறுதி கொள்கின்றனர் உழைக்கும் வர்க்கத்தினர்.

அவ்விழா இனிது முடிந்து ஓராண்டான இன்று, மீண்டும் திருச்சி மாவட்டத்தை வலம் வந்தபோது, இத்திட்டங்கள் விளைவித்த சாதனைகள்தான் எத்தனை! எத்தனை! அத்தனையையும் இங்கே கூற காலமும் காகிதமும் போதாதே!

இத்திட்டங்களின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட 11,946 பணிகளில், 9562 பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுவிட்டன என்னும் செய்தி நம் நெஞ்சிற்கு நிறைவைத் தருகின்றது. இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட 2,06,848 தொழிலாளர் வர்க்கத்தினரில், பெண்டிர் மட்டும் 31.703. மொத்தம் உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்கள் 33,47,230. இப்பணிகளை நிறைவேற்றியமைக்காக இத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட அரிசியின் அளவு மட்டும் 9,659.178 மெட்ரிக் டன்கள். அவ்வரிசியின் மதிப்பு ரூ. 208.50 இலட்சம்.

இவ்வோராண்டுக் காலத்திற்குள், எவ்விதச் சாலைகளுமின்றி தனித் தீவுகளாகப் பிரிந்துகிடந்த சிற்றூர்கள் இணைப்புச் சாலைகளால் ஒருங்கிணைக்கப்பட்டுவிட்டன. 198 கி.மீ. நீளத்திற்கு 188 இணைப்புச் சாலைகள் புதிதாக இணைக்கப்பட்டுவிட்டன. ஊராட்சிகளுக்குச் சொந்தமான 115 சாலைகள், 100.4 கி.மீ. நீளத்திற்குப் புத்தம் புதிதாக ஏற்படுத்தப்பட்டு மக்கள் பயன்பெறத்திறந்து விடப்பட்டுள்ளன. இவைகள் மட்டுமா? ஏற்கெனவே பழுதுபட்டுக்கிடந்த 470 இணைப்புச்சாலைகள், ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான 301 சாலைகள், ஊராட்சிகளுக்குச் சொந்தமான 1902 சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு மேம்படுத்தப்பட்ட சாலைகளின் நீலம் 2384.4 கி.மீ.

'நீரின்றி அமையாது உலகு... எனவே, இத்திட்டத்தின் கீழ்

நீர்நிலைகளின் மேம்பாட்டுக்கு முதலிடம் அளிக்கப்பட்டதன் வாயிலாக, விளைவித்த சாதனைகளில் சில....

889 குளங்கள் ஆழப்படுத்தப்பட்டன. ஆழப்படுத்தப்பட்ட இப்பகுதியின் பரப்பளவு ஏறத்தாழ 635.75 எக்டேர். இதனால் பயன்பெறும் கழனியின் பரப்பளவு 4057.77 எக்டேர். கரைகள் உயர்த்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட குளங்களின் எண்ணிக்கை 382. இக்கரைகளின் நீளம் 83,800 மீட்டர். இதனால் பயன் பெறும் பரப்பளவு 1912.85 எக்டேர்.

மழைக்காலங்களில் நீர் தேங்கி பயிர் வளர்ச்சியைப் பாதிக்கும் தன்மைகொண்ட 398.22 எக்டேர் நிலப்பரப்புகள் சீர்படுத்தப்பட்டுவிட்டன. இவை மட்டுமின்றி மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளால் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன.

குளங்கள் ஆழப்படுத்தப்பட்டன. அதே வேளையில் குளங்களிலிருந்து நீரைக்கொண்டு செல்லும் கால்வாய்களையும் ஆழப்படுத்த வேண்டிய நிலை ஏற்படவே, 601 கால்வாய்கள் சீர்படுத்தப்பட்டன.

இவ்வாறு சீர்படுத்தப்பட்ட கால்வாய்களின் மொத்த நீளம் 4,21,634 மீட்டர் என்னும்போது எண்ணிப்பார்க்கவே வியப்பாக இருக்கின்றது அல்லவா!

திருச்சி மாவட்டத்தில் இத்திட்டங்கள் புரிந்த சாதனைகளை ஒன்றியங்கள் வாயிலாக நீங்கள் அறிய விரும்புவது எனக்குப்புரிகிறது. எனினும், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்கிற பழமொழியைப் பயன்படுத்தி, சில ஒன்றியங்களின் சாதனைகளைப்பற்றி சில வரிகளில் சிறிது கூற விரும்புகிறேன்.

மீண்டும் மணச்சநல்லூருக்கு வருவோம். ஒரு காலத்தில் வெறும் நடைபாதையாக இருந்த தாத்தமங்கலம் - சாலைப்பட்டி சாலைகளில் இன்று வாகனங்கள் விரைந்து சென்று கொண்டிருக்கின்றன. இதனால் தாத்த மங்கலம், சாலைப்பட்டி, தேவிமங்கலம் மற்றும் ஆய்க்குடி ஊர்கள் உரிய சாலையால் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் பயன்பெறும் மக்களின் எண்ணிக்கை மட்டும் 10,000. இச்சாலை அமைக்க உழைத்த தொழிலாளர்கள் 320 பேர். அவர்கள் உழைப்புக்கு ஊதியமாகப் பெற்ற அரிசியின் அளவு 13.34 மெட்ரிக் டன்...

பச்சைமலைக் குன்றுகளில் மூவாயிரம் அடி உயரத்தில் எவ்வித சாலைத் தொடர்பும் இன்றி தவித்துக்கிடந்த சோலமதி என்னும் மலைவாழ் மக்களின் சிற்றூர், செங்காட்டுப்பட்டியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ்விணைப்புச் சாலையின் நீளம் 12 கி.மீ. தான்.. எனினும்... இச்சாலை அமைக்கப்பட்டுள்ளஇடத்தில் வளர்ந்து கிடந்த பாறைகளையும், முட்களையும், கொடிசெடிகளையும் அப்புறப்படுத்தி அமைக்க வேண்டிய சவாலை ஏற்றுக் கொண்டதால், இதன் மதிப்பீடு ஏறத்தாழ ஒரு லட்சம். பயன்பெறும் மலைவாழ் மக்களின் எண்ணிக்கை 3500.

எவ்விதப் பராமரிப்புமின்றி கேட்பாரற்றுக் கிடந்தது இக்கால்வாய். இதனால் ஏறத்தாழ 3000 ஏக்கர் பரப்பளவு நிலம் பாழ்பட்டுக் கிடந்தது. பதின்மூன்று கிலோ மீட்டர் நீளமுள்ள இக்கால்வாய் இப்போது புதுப் பொலிவுடன் திகழ்கின்றது.

கொல்லி மலையின் தென்புறத்தில் வேலம்பட்டி என்னும் ஓர் சிற்றூர். குமிழிடும் நீரூற்றுகள் கொண்ட செல்வ பூமி இவ்வூரின் தனிச்சிறப்பு. இவ்வூற்று எவருக்கும் பயன்படாது இருந்த நிலையை மாற்ற ரூ. 35,000 மதிப்பீட்டில் 'ஊற்றுக் குளம்' அமைக்கப்பட்டுள்ளது. இக்குளம் 200 நீர்ப்பாசனக் கிணறுகளுக்குப் பயன்படுவதோடு, 350 ஏக்கர் நிலப்பரப்புக்கு நீர் அளிக்கும் திறனையும் பெற்றுள்ளது ஓர் சாதனை தானே...

காட்டூரிலுள்ள தென் கால்வாய்களின் இருபுறக் கரைச்சுவர்கள் ஏறத்தாழ 18 மீட்டர் நீளத்திற்குக் கட்டப்பட்டுள்ளன. வெள்ளத்தால் பயிர்கள் பாதிக்கப்படாதபடி வடிகாலாகப் பயன்படும் இக் கால்வாய் முன்னூறு ஏக்கர் நிலத்திற்குத் தக்க பாதுகாப்பை அளிக்கும் பணியை ஏற்றுள்ளது.

நரசிங்கபுரம் தெப்பக்குளம் இரண்டே மாத கால அளவிற்குள் ஆழப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டது. இப்பணிக்கு உழைப்பு நல்கிய தொழிலாளர்கள் 115. அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியம் 2550 கிலோ அரிசி மட்டுமே....

ஏறத்தாழ அரை மைல் சதுர பரப்பளவில், சொக்கம்பட்டியில் அமைக்கப்படும் 'ஊற்றுக் குளம்', 14 நீர்ப்பாசனக் கிணறுகளுக்கு நீர் வழங்கும். இதனால் குறிப்பிடத்தக்க வகையில், புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்றப்படும்.

இவை அனைத்தும் வெற்றிப் பட்டியலின் சில வரிகளே...

கடந்த கால வாழ்வைத் திரும்பிப் பார்ப்பதுதான் எதிர்காலத்தைப் பற்றி எண்ணத் தூண்டுகிறது. எனவே கடந்த ஓராண்டுக் கால வளர்ச்சிப்பாதையில்-நாம் நடந்து வந்த வழியைத் திரும்பிப் பார்க்கிறோம். அப்பாதையில் தெரிபவை வெற்றிச் சின்னங்களே.. எனவே மேலும் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறோம் ..அதற்குப்பிறகும் செல்வோம். சென்றுகொண்டேயிருப்போம்... நம்முடைய இப்பயணத்தின் முடிவு எப்போது.. எங்கள் கிராமத்தில் எதுவுமே இல்லை என்று சொல்லுகின்ற கூற்றை மாற்றி எங்கள் கிராமத்தில் எதுதான் இல்லை என்ற தன்னிறைவுடன் கிராம மக்களாகிய நீங்கள் கூறும் வரை இப்பயணம் தொடரும்...



# செம்மல் இழுத்த செக்கு!




பி.வி. கிரி

சென்னை அண்ணா சாலையியில் உள்ள அரசினர் தோட்டம்!

உள்ளே நுழைகிறோம். இராஜாஜி மண்டபத்திக்கு எதிரே 'காந்தி இல்லம்' தெரிகிறது. அதற்குப் பக்கத்திலே ஒரு செக்கு கம்பி வலைகளுக்குள்ளே பத்திரமாக வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

இந்தச் செக்கு இங்கே எப்படி வந்தது ?

இதற்குப் பின்னணியிலே, ஒரு வீர வரலாறே பின்னிக் கிடக்கின்றது!

வெள்ளையர்கள் நம் நாட்டை ஆண்ட காலம், இந்தியர்கள் அடிமைகளாக இருந்திட்ட காலம் அது.

அப்போது, நாடெங்கும் மூலை முடுக்குகளிலெல்லாம் சுதந்தரத் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் 'வந்தேமாதரம்' என்ற முழக்கம் வானைப் பிளந்தது. அதன் விளைவு?

அடக்குமுறை ஆர்த்தெழுந்தது. விடுதலை கேட்போருக்குக் கெடுதலை தந்தது ஆங்கில அரசு. மான மறவர்கள் அதற்கா அஞ்சுபவர்கள்? வெள்ளையரை எதிர்த்து வீரமுழக்கமிட்டார்கள். 'அன்னியர் வந்து புகல் என்ன நீதி? என்று கொதித்தெழுந்தார்கள்.

அவர்களிலே 'தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை' முதன்மையானவர். ஆம். தென்னிந்திய உரிமைப் போர் மறவருள் முதல்வர் அவர்.

'தமிழகத்தார் மன்னன்' என்று மகாகவிபாரதியாரும், 'ஒப்பில்லா செந்தமிழ்ச் செல்வன்' என்று கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களும் போற்றிப் புகழப் பெற்ற 'கப்பலோட்டிய தமிழன்' 'செக்கிழுத்த செம்மல்' வ.உ. சிதம்பரனாரை உலகம்அறியுமே!

சிதம்பரனார் குற்றவாளி எனத் தீர்மானித்த ஆங்கிலேய அரசு, அவருக்கு நாற்பது ஆண்டுகள் தீவாந்தரத் தண்டனையும் விதித்து மகிழ்ந்தது.

நீதிபதி பின்ஹே தீர்ப்பு வழங்கினார். தீர்ப்பில் குறிப்பிட்ட அந்த வாசகம்:


''சிதம்பரம் பிள்ளை பெரிய இராஜத்துரோகி. அவரது எலும்புக்கூடுகூட ராஜவிசுவாசத்திற்கு விரோதமானது. சுப்பிரமணிய சிவா அவர் கையில் அகப்பட்ட ஒரு கோல். திருநெல்வேலிக் குழப்பத்திற்குக் காரணம் இவர்கள் தாம். பிள்ளையின் சொற்பொழிவையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர்த்தெழும்; புரட்சி ஓங்கி எழும்!''

வெள்ளையரைக் கதி கலங்க வைக்க இதைவிடச் சான்று வேறென்ன வேண்டும்? வீரர் சிதம்பரனார், தமது தண்டனைக் காலத்தை, கோயம்புத்தூர், கண்



ணணூர் ஆகிய சிறைகளிலே கழித்தார்.

கோவை சிறையில், தேசத் தொண்டர்கள் எவரும் இல்லை. சிதம்பரனார் மட்டுமே தனியே இருந்தார். சிறையோ நரகமாகக் காட்சியளித்தது. கொடுமதியாளர்கள் அங்கே சூழ்ந்திருந்தார்கள். அவர்கள், வழக்கறிஞர் சிதம்பரனாரை கொலைகாரர்களைவிடக் கேவலமாக நடத்தினர். உணவு உண்பதற்குச் சட்டியும், தண்ணீர் குடிக்க கலயமும் அங்கே அவருக்குத் தந்தனர். அவருக்கு அளிக்கப்பட்ட உணவோ கேழ்வரகுக்கூழ்!



தந்தை இழுத்த செக்குக்கு தனயன் மாலை அணிவிக்கிறார்.

அதுமட்டுமா? வீர சுதந்திரம் வேண்டி முழக்கமிட, ஊர்தோறும் நடந்து சென்ற அந்தக் கால்களில் இரும்புச் சங்கிலி போட்டுக் கட்டினர், வெள்ளையர்-வெள்ளை மனம் இல்லாதவர்!

மெல்லிய ஆடை அணிந்தவர்க்கு முரட்டுத் துணி ஆடை தந்தனர். அரைக்கால் சட்டை, கையில்லாக் கைச்சட்டை, தலையிலே ஒரு குல்லா. மொட்டையும் அடித்தனர். அத்தோடு விட்டால் பரவாயில்லையே!

கல்மனம் கொண்ட சிறையதிகாரி ஒருவன், வ.உ.சி.யைக் கொடுமைப்படுத்தினான். சணல் கழிக்கும் இயந்திரத்தை அவன் சுற்றச் சொன்னான். அவரது பஞ்சு போன்ற மென்மையான கைகளில் தோல் உரிந்து இரத்தம் கசிந்தது. அதைக் கண்டும் அவன் மனம் இரங்கவில்லை. பிறகு அவன் ஒரு பயங்கரமான-கொடூரமான வேலை தந்தான். அதுதான் செக்கு இழுக்கும் வேலை !

அந்தச் சிறையிலே ஒரு செக்கு இருந்தது. மாடு இழுக்கும் செக்கு அது! அதை மான மறவர் இழுக்கும்படிச் செய்தனர் கல்மனத்தார். ஆம். வீரர் சிதம்பரனார் அந்தச் செக்கை மாடு போல் இழுத்தார்!

அவ்வாறு அவர் செக்கிழுக்கும் போதெல்லாம், 'சுதந்திர அன்னையின் கோயிலை அல்லவா சுற்றிவருகிறேன்' என்று கூறுவாராம்.

ஒருநாள், கடும் வெய்யிலில் அந்தச் செக்கை இழுத்துக் கொண்டிருக்கும்போது, களைப்பு மிகுதியால் அப்படியே நிலத்தில் சாய்ந்தார். அப்போது அன்னை பூமி அவரைத் தாங்கிக் கொண்டாள் போலும்!

'மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும் நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ!' என்று இந்தக் காட்சியை நம் கண்முன் கொண்டு வருகிறார் மகாகவி பாரதியார்.

''வன் சிறையில் செக்கிழுத்த வீரன் சிதம்பரன்' என்று கவிமணியும் கண்ணீர் விட்டார்.

கடுஞ்சிறையில் .. படுந்துன்பமோ கொடிது! கொடிது! அந்நிலையிலேயும் வீரர் வ.உ.சி. ஒரு பாட்டுப் பாடினார். அந்தப் பாடல், அவரது மன உறுதியை-குன்றென நின்ற அவர் மனத்திட்பத்தை நமக்கு எடுத்துக் காட்டுகின்றது:

''என் மனமும் என் உடம்பும்
என்சுகமும் என் அறமும்
என் மனையும் என் மகவும்
என் பொருளும் - என்னலமும்
குன்றிடினும் யான்குன்றேன்;
கூற்றுவனே வந்தாலும்
வென்றிடுவேன் காலால்
மிதித்து!''

கோவைச் சிறையில் செக்கிழுத்த செம்மல், கண்ணணூர்ச் சிறையில் கட்டைகள் செதுக்கினார்; அச்சுக் கோத்தார்.

இவ்வாறு சிறை வாசத்தில் சித்ரவதைகள் பட்ட சிதம்பரனாரின் வாழ்க்கைச் சித்திரமோ, நமக்கெல்லாம் ஒரு பாடமாக விளங்குகிறது.

1936ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ந் தேதி அவர் நம்மை விட்டுப் பிரியும்போதுகூட, அவர் விரும்பிக் கேட்டது, ''என்று தணியும் எங்கள் சுதந்திரத் தாகம்' என்ற பாரதியின் பாடலைத்தான்!

சுதந்திர அன்னையின் திருக்கோயிலாய்க் காட்சியளித்த அந்தச் செக்கு அரசினர் கோட்டத்தில்-'காந்தி இல்லத்துக்குப் பக்கத்தில், இன்றுங் காட்சி அளிக்கிறது. காந்தியடிகளோடு சிதம்பரனார் ஒன்றிக் கலந்திருந்த காரணத்தினால் என்னவோ, அவர் இழுத்த அந்தச் செக்கும் காந்தி இல்லத்துக்குப் பக்கத்திலேயே வந்ததுபோலும்!

வ. உ. சிதம்பரனார் அவர்களின் குமாரர் திரு வ. உ. சி. சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்து இந்தச் செக்கைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லும்படிக் கேட்டோம்.

அதற்கு அவர், ''என் தந்தையார் இழுத்த செக்கினைப் பார்த்துப் பல ஆண்டுகளாகிவிட்டன. ஆகவே, எங்கள் குடும்பத்தாருடன் வந்து அதைப் பார்க்கலாம் என்றிருக்கிறோம்'' என்றார்.

ஒருநாள், திரு வ.உ.சி. சுப்பிரமணியம் அவர்கள், தம் குடும்பத்தாருடன் அரசினர் தோட்டத்திலுள்ள அந்தச் 'செக்கினைப் பார்க்க வந்தார்.

வீர சிதம்பரனார் இழுத்த அந்தச் 'சுதந்திர அன்னையின் திருக்கோயிலை' பயபக்தியுடன் கண்டு கண்கொட்டாமல் பார்த்தனர் அவர்தம் குடும்பத்தினர். திரு வ.உ.சி. சுப்பிரமணியம், அவரது துணைவியார், இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள் ஆகியோர் அதைப் பார்த்துப் பார்த்து உணர்ச்சி வசப்பட்டார்கள்.

குறிப்பாக, திரு வ.உ.சி. சுப்பிரமணியம் அவர்கள், செக்கிற்கு கதர்மாலை அணிவித்து, இருகை கூப்பி வணங்கினார். அப்போது அவர் கண்கள் கலங்கின. அவர் நினைவு எங்கேயோ பின்னோக்கிச் சென்றிருக்க வேண்டும்.

அதற்குப் பிறகு அவர், 'காந்தி இல்லம்' சென்று அங்கு தன் தந்தையார், காந்தியடிகளுக்குத் தம் கைப்பட எழுதிய கடிதத்தைப் பார்த்தார்.

செக்கைப் பற்றித் திரு வ.உ.சி. சுப்பிரமணியம் அவர்கள் கூறுகையில் குறிப்பிட்டதாவது:

''ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டுகளுக்கு முன்பு என் தந்தையவர்கள் கோவைச் சிறையில் இழுத்த செக்கினை, அவர்களது நூற்றாண்டு விழாவையொட்டி 1972ல் தமிழக அரசு தலைநகரத்துக்குக் கொண்டுவந்து, ஒரு நினைவுச் சின்னமாகப் போற்றிக் காத்து வருகின்றது. ஆனால், எட்டு ஆண்டுகள் கழித்து, இன்றுதான் அந்தச் செக்கினைத் தொட்டுப்பார்க்கும் பேறு எனக் கிடைத்தது.

''எண்ணற்ற வீரர்கள் இந்நாட்டின் விடுதலைக்கு ஆற்றிய அரும்பெரும் தொண்டினை எண்ணிப் பார்த்திட இது ஒரு தூண்டுகோலாய் இருந்து, சிறு வயதிலேயே நான் இழந்துவிட்ட என் தந்தையரின் திருவுருவம் எங்கள் எண்ணத் திரையில் தோன்றி, எங்கள் குடும்பத்தாரையும், தமிழக மக்களையும் வாழ்த்துவது போன்ற எண்ணம். எழுந்தது.

''இளம் தலைமுறையினர் இந்தச் செக்கு பற்றிய வரலாற்றினையும், காந்தி இல்லத்தையும் கண்டு நாட்டின் விடுதலைப் போராட்டம் பற்றி அறிய கல்வி நிலையங்கள் வகை செய்வது தலையாயக் கடமையாகும் என்று ஒரு தேசபக்தனின் மகன் என்ற முறையில் கூறிக் கொள்கிறேன். இந்த வாய்ப்பினை அளித்த அனைவருக்கும் நன்றி''.

வ.உ.சிதம்பரனாரின் பேரன் பொறியியல் கல்லூரி மாணவரான திரு எஸ். சிதம்பரம் அவர்கள் கூறுகையில்—

''இந்த நினைவுச் சின்னத்தைக் கண்டு பெருமைப்படுகிறேன். நாட்டுக்காக உழைத்த நல்லவர்களின் நினைவுச் சின்னங்களை, தாமாகவே வந்து பார்க்கின்ற ஆர்வம் பொதுமக்களுக்கு வரவேண்டும். என் தாத்தாவின் நினைவாக, தமிழக அரசு செய்துள்ள இந்த அரிய பணிக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

---

# பலதுறைப் புலவர் வ.உ.சி.

கப்பலோட்டிய தமிழரின் புதல்வர்

## திரு வ. உ. சி. சுப்பிரமணியம்

''வ.உ.சி.'' என்ற மூன்றெழுத்துக்கள் தெரியாத தமிழ்மகன் இல்லை எனலாம். 'வ.உ.சி.' என்றால் 'கப்பலோட்டிய தமிழன்' என்று பள்ளிப் பிள்ளைகளும் கூறிவிடுவர்!

நன்றி பாராட்டும் நற்பண்புடைய தமிழ் மக்கள் அன்புடன் 'வ.உ.சி.' என்று மூன்றெழுத்தால் என் தந்தை வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்களைக் குறிக்கிறார்கள்.

''செக்கிழுத்த செம்மல்'', ''கல்லுடைத்த நல்லவர்'' ''வெஞ்சிறை வாழ்ந்த நூலோர்'' என்றெல்லாம் தமிழ் கூறும் நல்லுலகம் வ.உ.சி. க்குப் புகழ் பாடுகிறது.

என் தந்தையார் ஒரு சிறந்த வழக்கறிஞர் என்பதை அறிந்தவர்கள் சிலரே. அவர் அந்தக் கால அதிகாரிகளுக்கு ஒரு 'சிம்ம சொப்பனமாக' இருந்தார் என்று கூறினால் போதும்; அதுவே அவரது வழக்குரைக்கும் வன்மைக்குச் சான்று.

வ.உ.சி. சிறந்த தமிழ் அறிஞர்; பல அரிய நூல்களை வெளியிட்டுள்ளார். அவரது தமிழ்த் தொண்டு இன்றுதான் நாட்டில் பரவத் தொடங்கியுள்ளது.

என் தந்தையார் பாட்டாளிகளின் தலைவரும்கூட. முதன் முதலாக ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்துக்கு வித்திட்டு வெற்றி கண்டார். அரை நூற்றாண்டுக்கு முன்பு, எட்டுமணி நேர வேலைக்காக நடந்த வேலை நிறுத்தம் அது.

சீர்திருத்தப் பணிகள் என்றால் வ.உ.சி. க்குத் தித்திக்கும் தேன் போல. கண்ணிழந்த அரிசனப் பெரியார் ஒருவரை வீட்டிலேயே வைத்துக் காத்தார். அரிசனப் பெரியார் சுவாமி சகஜானந்தரின் தமிழ்ப் புலமைக்கு என் தந்தையாரே குரு. விதவா விவாகங்களும், கலப்பு மணங்களும் நடத்தி வைத்து நாட்டுக்கு வழி காட்டினார்.



கடலாதிக்கத்தில் வெள்ளையரை முறியடிக்கக் கப்பல் ஓட்டியதுபோல, தொழில் வாணிபத் துறைகளில் நம்மவர் உயர நெசவுச் சாலையும், சுதேசிப் பண்டக சாலையும் கண்டவர்.


தமிழன் பல மொழிகளும் கற்க வேண்டும் என்ற கொள்கையுடையவர். நாமே பல மொழிகள் கற்றார். ஆங்கிலத்திலும், சமஸ்கிருதத்திலும் வல்லவர். மலையாள மொழியில், ஆங்கில நூல் ஒன்றை மொழிபெயர்த்திருக்கிறார். தெலுங்கும் தெரியும். உரை நடையிலும், கவிகள் புனைவதிலும் வல்லவர். 'வ.உ.சி சுயசரிதை' அவர் கவி வன்மைக்கு சான்று.

'இல்லை' என வந்தாருக்கு ஈயாமல் இருந்ததில்லை. ஒரு நாள் உதவியவரையும் தாம் உள்ளளவும் போற்றினார். சிறை மீண்ட பின்பு தமக்கு வழக்கு உரைக்கும் உரிமை வாங்கித் தந்த வெள்ளை நீதிபதி 'வாலேஸ்' பெயரைத் தம் மகனுக்கு இட்டு நன்றி பாராட்டியவர். கடவுள் பற்று மிக்கவர். சைவ சித்தாந்தம் அவரது அற வாழ்வுத் திறவுகோல்.

பல துறைகளிலும் நிறை வாழ்வு வாழ்ந்த பெரியவர் வ.உ.சி.

*('தளபதி வ.உ. சிதம்பரனார்' என்னும் நூலிலிருந்து - 1959)*

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை—600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

**அரியணையில் அழகு தமிழ்!**

**ஆசிரியர் :**
**கோ. முத்துப்பிள்ளை, பி. ஏ.,**

**வெளியீடு :**
**முத்தமிழ் நிலையம்,**
**24, ஆறாவது குறுக்குச் சாலை,**
**வியாசர்பாடி, சென்னை—49.**

**பக்கம் : 96 விலை : ரூ. 3—00**

தமிழகத்தில், தமிழ் ஆட்சி மொழியாகிப் பல்லாண்டுகள் ஆகிவிட்டன. கல்விக்கூடங்கள்- அரசு அலுவலகங்கள் ஆகியவற்றில் எல்லாம் புதிய மலர்ச்சி ஏற்பட்டு 'எங்கும் தமிழ்' என்னும் இனிய நிலை பரவி வருகிறது.

என்றாலும் ஆங்கில மோகம் கொண்ட பலர், 'தமிழால் முடியுமா' என்றெல்லாம் வினவுவதுடன் கேலியும் செய்து வருகிறார்கள். அத்தகையவர்களுக்குத் தக்க விடையாக அமைந்துள்ளது இந்நூல்.

நூலாசிரியர் அரசுத்துறையில் அலுவலராகப் பணிபுரிந்து தாம் பெற்றுள்ள அனுபவத்தை இந்நூலில் சுவைபடக் கூறியுள்ளார். சில கட்டுரைகள் நகைச்சுவை விருந்தை அளிக்கின்றன. 'கோப்பா — கோவையா' — 'மொழிபெயர்ப்பு வேடிக்கைகள்' 'செயலாளரா' ஆகிய பகுதிகள் ஆராய்ச்சித் திறன் கொண்டு விளங்குகின்றன. பல்வேறு ஆங்கிலச் சொற்களுக்கு நூலாசிரியர் வழங்கியுள்ள தமிழ்மொழி பெயர்ப்புச் சொற்கள் எண்ணி எண்ணி மகிழத்தக்கன. நூலாசிரியரின் (ஆங்கிலம் - தமிழ்) இருமொழிப் புலமையையும் எழுத்தாற்றலையும் செம்மையாய் எடுத்துக்கூறும் இந்நூல், படிப்போரைப் பரவசப்படுத்தும் என்பது உண்மை.

**பாரதியின் நீதிகள்**

**[ஆசிரியர்: எஸ். குலசேகரன், வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம், நார்த்தம் பூண்டி, திருவண்ணாமலை வட்டம், வ. ஆ. மாவட்டம்-606 809. விலை ரூ. 4]**

பாட்டுக்கொரு புலவன் பாரதியை ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் ஆய்ந்து வருகிறார்கள். பாரதி என்னும் கடலில் ஆழ்ந்து சென்று அழகிய நல்முத்துக்களை எடுத்துத் தந்திருக்கிறார்கள். அந்த வகையிலே எடுக்கப்பட்ட ஒரு வெண்முத்துதான் 'பாரதியின் நீதிகள்' என்னும் நூல்.

பாரதி பாட்டிலே சொன்ன அற்புதமான கருத்துக்களை உரைநடையிலே, படிப்போர் மனத்திலே பதிகின்ற வகையிலே பாங்குற எழுதியுள்ளார் இந்நூலாசிரியர். எளிய நடை நம்மைக் கவர்கிறது.

**பயிற்றுப் பயிற்சியும், மொழியாசிரியர்களும்**

**ஆசிரியர் :**
**மு. கோவிந்தராசன்,**
**பி.ஏ.பி.எல்., எம்.பி.எல்.,**

**வெளியீடு:**
**திருமலைக்குமரன் பதிப்பகம்,**
**கூத்தங்குடி, கீழ்ப்படுகை அஞ்சல்**
**விசயபுரம் வழி,**
**தஞ்சை மாவட்டம்.**

**பக்கம் : 265 விலை : ரூ.10—00**

நாடு விடுதலை அடைந்ததற்குப் பின்னர், தாய்மொழி தனிச் சிறப்புப்பெற்று வருகிறது. தமிழகத்தைப் பொறுத்த அளவில் தாய்மொழி, பயிற்று மொழியாகவும் திகழ்கிறது. தமிழ் மொழிவாயிலாகப் பயிற்சிபெறும் ஆசிரியப் பயிற்சி மாணவர்கள்- பயிற்று மொழியைத் தக்கவிதத்தில் அறிந்துகொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகிறது.




அவர்களுக்கு மிகவும் பயன்படும் வகையில் எழுதப் பெற்றிருக்கிறது. இந்நூல். இந்த நவீன காலத்திற்குரிய வகையில் கல்வித்துறையில் பயன்படுத்தப்பெறும் துண்டுப்பட வீழ்த்தி, இசை வழங்கி, நாடாப் பதிவுப்பொறி, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள் ஆகியவை பற்றிய குறிப்புகள் இந்நூலில் சிறப்பாகத் தெரிவிக்கப் பெற்றிருக்கின்றன.

திறமையாக எழுதும் திறன், பேசும் திறன், எடுத்துக்கூறும் ஆற்றல், மொழிப்புலமை, இலக்கண இலக்கியப் புலமைஆகியவை ஆசிரியர் பயிற்சி பெறுபவர்க்கு அமைதல் வேண்டும் என்பதை வலியுறுத்தி எடுத்துக்காட்டுக்களுடன் கூறியிருக்கிறார் நூலாசிரியர்.

இந்நூலின் எளிய, இனிய, தமிழ்நடை சுவையாக உள்ளது.

**—தமிழ்ப்பித்தன்.**

**இருட்டறையிலே உலகம்**

**[ஆசிரியர்: கவிஞர் மு. கோவிந்தராசன். வெளியிட்டோர் : திருமலைக் குமரன் பதிப்பகம், கூத்தங்குடி, கீழ்ப்படுகை அஞ்சல், விசயபுரம் வழி, தஞ்சை மாவட்டம். விலை ரூ. 4.50]**

இருட்டறையிலே இருக்கின்ற சமுதாயத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறார் கவிஞர். ஆழ்ந்த சிந்தனையின் விளைவாய் எழுந்த இந்தக் கவிதைகளிலே தான், எத்தனைக் குமுறல்- ஏக்கம்- சவுக்கடி!

'புதுச்சாதி - பொதுச் சாதி' என்னும் பாட்டு என்னும் சாட்டையால், சாதி பேதம் பேசித் திரியும் சழக்கர்களைச் சாடுகிறார். 'காலமெனும் காட்டாற்றில் சாதி சாகும்' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார் கவிஞர்.

விதவையின் வதுவை!' என்னும் கவிதையில், புரட்சிப்பூக்கள் மலர்கின்றன. 'ஆணவத்தால் பேசுகின்ற ஏற்றத் தாழ்வை, காதலொன்றே சமன் செய்யும் கருவியாகும்' என்று கோடிட்டுக் காட்டுகிறார். இறுதியில் 'விதவை வீணை மீட்டுங்கள், வாழ்வில் இன்பம் கூட்டுங்கள்' என்று விதவைத் திருமணத்துக்கு ஊக்கந் தருகிறார். இந்நூலில் இடம் பெற்றுள்ள மற்றகவிதைகளிலும், கவிஞர் சீர்திருத்தக் கொள்கைகளை விரவியிருக்கிறார்.

**—பி.வி.ஜி.**



# கப்பலோட்டிய தமிழனின் தமிழ்ப் பணி

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர்

ம. பொ. சிவஞானம்

அரசியல் மேடையில் தமிழிலேயே பேசுவதென்று விரதம் கொண்டிருந்தார் வ.உ.சி. பாட்டாளி மக்களைக் கூட்டி வைத்து, ஆவேசத் தமிழிலே அரசியல் பேசினார்! அதற்காகத்தான் அவருக்கு இரண்டாயுள் தண்டனை விதித்தார் வெள்ளை நீதிபதி பின்ஹே! அவர் தனது தீர்ப்பில் கூறினார், ''வாக்குரிமை இல்லாத மக்களைக் கூட்டிவைத்துப் பேசினாயே, அதுவே பெருங்குற்றம்'' என்று.

வ.உ.சி. வாழ்ந்த நாளிலே- குறிப்பாக, இந்த இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுக் காலத்திலே, அரச நிந்தனையாக ஆங்கிலத்தில் பேசினால், ஆங்கிலத்தில் எழுதினால் அதற்காக வழக்கு வராது; தண்டனை கிடைக்கும். தாய்மொழியில் பேசினால், எழுதினால் அரச நிந்தனைக் குற்றம் சாட்டி வழக்கு தொடரும் ஆங்கில அரசு. அதற்குத் தண்டனை வழங்கும் நீதிமன்றம். தண்டனை என்றால், மாதக் கணக்கிலா, வருடக்கணக்கிலா? அதெல்லாம் இல்லை. ஆயுள் கணக்கில் சிறைத் தண்டனை! இரண்டு ஆயுள் தண்டனைப் பெற்றார் சிதம்பரனார். எதற்காக? தமிழ் மட்டுமே தெரிந்தவர்களுக்குத் தேசபக்தியைப் போதித்ததற்காக!

சிதம்பரனார் நாற்பதாண்டுக் காலச் சிறைத் தண்டனையைப் பெற்றது நாட்டுப்பற்றுக்காக மட்டுமல்ல; மொழிப் பற்றுக்காகவும்தான்! பாட்டாளி மக்களைக் கூட்டிவைத்து, அன்று தமிழில் அவர் எதைப் பேசினாரோ, அதையே பட்டதாரிகளைக் கூட்டிவைத்து, ஆங்கிலத்தில் பேசியிருப்பாரானால், அவர்மீது அரச நிந்தனை வழக்கு வந்திருக்காது. அவருக்கும் இரண்டு ஆயுள் தண்டனை கிடைத்திருக்காது. ஆங்கிலேயருக்குப் புரிந்திருந்தது, தாய்மொழியில் பேசினால்தான் தமிழ் மக்கள் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக எழுச்சி கொள்வார்கள் என்பது.



சிறைபுகுந்த பிறகும் நாட்டையும் மொழியையும் மறக்கவில்லை சிதம்பரனார்! மனிதரிலே மாணிக்கமான அந்த மாபெரும் தலைவர், மாடுபோல் செக்கு வலித்தார் மாற்றார் சிறையிலே! அப்போதும் பாரததேவியின் கோயிலைச் சுற்றி வருவதாகவே அந்தப் பண்டிதப் பெருமகன் கற்பனை செய்து கொண்டு மகிழ்ந்தார். ஒரு புலவரைத் தவிர வேறு எவர் இப்படி கற்பனை செய்து களிப்படைய முடியும், செக்கு இழுக்கும் நேரத்திலே! அதுவன்றோ தமிழ்ப்பற்று!

சிதம்பரனார் சிறந்த கவிஞராகவும் விளங்கினார். அதனால் தாம் சிறையிலிருந்தபோது தனது உயிரெனக் கருதி மனைவியாருக்குக் கவிதை நடையிலே கடிதங்கள் எழுதினார். மனைவிக்கு எழுதிய ஒரு கடிதத்திலே, தான் சிறையில் அணிந்திருந்த ஆடைகளையும், கைவிலங்கு, கால் விலங்கு போன்ற அணிகலன்களையும் வருணித்திருக்கிறார்.

''திருவும் புகழும்
சிறந்தன பிறவும்
மருவுற நிற்குமென்
மாசிலா மனைவியே!
என்னரும் உயிரினும்
என்னுயிர் உளத்தினும்
மன்னுறப் பாதியை
மகிழ்ந்துனக் களித்தேன்
பின்னைப் பாதியை
பெரிய நம் தேயத்தின்
தன்னடிக் களித்தேன்;
சத்தியம் இஃதே!''

இது இரண்டாயுள் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்த தேசபக்தர் எழுதிய வருண்னை! தம் உடம்பில் பாதி போன்றதாம் தேசம்; மற்றொரு பாதியாம் மனைவி! என்ன அருமையான கற்பனை! இதை நாட்டுப் பற்று என்பதா! மொழிப் பற்று என்பதா? இரண்டும் கலந்தது என்றுயான் கூறுவேன்.

தமிழ்ப் புலமை முதன் முதலாகச்சிறை புகுந்தது, தமிழர் சிதம்பரனார் வடிவில்தான்!

வ.உ.சி. திருக்குறள் அறத்துப் பாலுக்குப் புத்துரை எழுதியவர். அதே அறத்துப்பாலுக்கு மணக்குடவர் எழுதி வைத்துப்போன உரையைப் பதிப்பித்துத் தந்தவர். சிவஞான போதத்துக்குத் தெளிவுரை எழுதியவர். இவ்வளவு புலமைக்கும் மெத்தனமாகச் சேர்த்து ஆங்கிலப் பேரரசு தந்த பரிசு இரண்டாயுள் தண்டனை! இன்று நினைத்தாலும் நெஞ்சம் நடுங்குகின்றதே!

தமிழகம் பெற்றெடுத்த தேசியத் தலைவர்களிலே முதன் முதலாக தமது தியாக வரலாற்றைக் கவிதைத் த்மிழிலே எழுதி வழங்கியவர் சிதம்பரனாரேயாவார். அதிலே, அவர்தான் இதுவரை முடிவானவராகவும் இருக்கிறார்.

சிறையிலே தம்முடனிருந்த கைதிகளுக்குத் தமிழ் பயிற்றுவித்தார், செக்கிழுத்தார். ஒய்ந்த நேரத்திலே கல்லுடைத்துக் களைத்த நேரத்திலே! வெறுந் தமிழையல்ல; நீதிபோதனை கலந்த கவிதைத் தமிழையே கற்றுத் தந்தார். அவர்களுக்கென ஆத்திசூடி பாணியில் வரிவரியாக ''மெய்யறம்'' என்னும் நூலை எழுதினார்.

செந்தமிழ் வல்ல சிதம்பரனார் 1806 முதல் 1920 வரை தொடர்ந்து 15 ஆண்டுக்காலம் நாட்டுப் பணியிலும் மொழிப் பணியிலும் ஈடுபட்டிருந்தார். ஆனால், தேசத்தில் தலைமை மாறியதன் காரணமாக, நிலைமையும் மாறியது. திலகரிடமிருந்து தலைமை காந்திஜிக்கு மாறியது; அதனால் கப்பலோட்டிய தமிழர் தேசப் பற்றை விட்டுவிடவில்லை யென்றாலும், தேசப் பணியிலிருந்து விலகி நிற்கலானார், அதன் பின் 15 ஆண்டுக் காலம், அவர் உயிர் வாழ்ந்தார். அந்தக் காலத்திலே தமிழ்ப்பணி ஒன்றில் மட்டுமே கருத்து செலுத்தினார். தாய் நாட்டை விடவும் தாய்மொழியே அவரை அதிகமாகக் கவர்ந்தது போலும்.

சிதம்பரனாரைப் பின்பற்ற விரும்புவோர், தமிழோடு சேர்த்து தேசத்தையும் நேசிக்கப் பழக வேண்டும், தேசத்தோடு சேர்த்து தமிழிடத்தும் பற்று செலுத்தப் பயிற்சி பெறவேண்டும். அதுவே சிதம்பரனார் நமக்குக் காட்டிய சிறந்த வழி!

*(வ.உ. சிதம்பரனார் பிறந்த நாளான செப்டம்பர் 5-ஆம் நாளன்று (1980) சென்னை வானொலியில் நிகழ்த்திய உரையிலிருந்து.)*



வ. உ. சிதம்பரனாரும், அவருடைய முதல் மனைவி வள்ளியம்மையாரும்.

## வ. உ. சி. அவர்களின் தமிழ்ப்பணி

### எழுதிய நூல்கள் :

1. மெய்யறிவு
2. மெய்யறம்
3. எனது பாடல் திரட்டு
4. வ. உ. சி. கண்ட பாரதி
5. சுயசரிதை.

### மொழிபெயர்ப்பு நூல்கள் :

1. மனம்போல வாழ்வு
2. அகமே புறம்
3. வலிமைக்கு மார்க்கம்
4. சாந்திக்கு மார்க்கம்

### உரை எழுதிய நூல்கள் :

1. இன்னிலை
2. திருக்குறள்
3. சிவஞான போதம்.

### பதிப்பித்த நூல்கள் :

1. தொல்காப்பியம் — எழுத்ததிகாரம் [இளம்பூரணர் உரை]
2. தொல்காப்பியம்— சொல்லதிகாரம் [இளம்பூரணர் உரை]
3. சிவஞான போதம்

### அச்சு வடிவில் வந்த அரசியல் சொற்பொழிவு :

''எனது அரசியல் பெருஞ்செயல்''

### நடத்திய ஏடுகள் :

1. விவேகபாநு
2. தமிழ் நேஷனல் பத்திரிகை
3. இந்துநேசன்.

### அச்சில் வராத நூல்கள் :

1. அழகும் ஆரோக்கியமும்
2. ஆயுளை நீடிக்கும் ஆறு
3. ஊழை வெள்ள உபாயம்
4. சிவ மதம்
5. விஷ்ணு மதம்
6. புத்த மதம்
7. இஸ்லாம் மதம்
8. கிறிஸ்து மதம்
9. மனித மதம்
10. முக்தி நெறி
11. The Universal Scripture
12. திருக்குறள்- மணக்குடவர் உரை [பொருள்]
13. திருக்குறள் - மணக்குடவர் உரை [இன்பம்]
14. திலக மகரிஷி

# வரியை மிச்சப்-படுத்துங்கள்

தேசீய
சேமிப்புப்
பத்திரங்களில்
முதலிடுங்கள்
(2-வது வெளியீடு)

ஆண்டொன்றுக்கு 6.5% கூட்டு வட்டி (சாதாரண வட்டி 7.93%) கிடைக்கும். வட்டிக்கு முழு வருமான வரி விலக்கு கிடைக்கும். ரூ. 100/- 7 வருடங்களில் ரூ. 155.50 ஆகும்.

மூன்றுண்டுகளுக்குப் பிறகு பத்திரத்தை பணமாக்கிக் கொள்ளலாம். தனிப்பட்டவர்களுக்கு முதலீட்டு வரம்பு ரூ. 75,000/-. மற்ற முதலீடுகளுக்கும் சொத்து வரி விலக்குண்டு.

**மேற்பட்ட விவரங்களுக்கு தயது செய்து கீழ்க் காணுபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்:**

* அங்கீகாரம் பெற்ற ஏஜென்ட் * மாவட்ட சேமிப்பு அதிகாரி, மாவட்ட கலெக்டரக மேற்பார்வை * பாரத ஸ்டேட் பாங்க் மற்றும் அதனிடம் மானியம் பெறும் வங்கிகள் * அண்மையிலுள்ள அஞ்சலகம் * தேசிய சேமிப்பு நிறுவனத்தின் பிராந்திய அலுவலகம் (மாநில அல்லது மத்திய அரசு)

டி.ஏ.வி.பி. 80/118

அல்லது இந்த முகவரிக்கு எழுதுங்கள்:
நாஷனல் சேவிங்ஸ் ஆர்கனேசேஷன்,
12, ஸெமினரி ஹில்ஸ், நாக்பூர்-440006.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

**1—10—80**

தமிழகத்தின் முதன் முறையாக பவானி சாகரில் 82 ஏக்கர் பரப்பில் 4 கோடி ரூபாய் செலவில் நூல் பதினிடும் தொழிற் சாலை அமைக்கப்படும் என்று மாண்பு மிகு பொதுப்பணி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ்.என். ராசேந் திரன் தெரிவித்தார்.

**2—10—80**

ஒலிம்பிக்கில் வெற்றி பெற்ற இந்திய ஆக்கிக் குழுத் தலைவரும், தமிழ்நாட் டைச் சேர்ந்தவருமான திரு பாஸ்கர னுக்குத் தமிழக அரசு ரூ. 1.40 இலட்சம் மதிப்புள்ள வீடு வழங்கும் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தெரிவித்தார்.

**3—10—80**

இந்தியாவிலேயே முதன் முதலாக கொடைக்கானலில் சர்வதேச உடற் பயிற்சி மருத்துவப் பள்ளி அமைக்கப்பட இருப்பதாக மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு கா. இராசா முகமது அவர்கள் தெரிவித்தார்.

**4—10—80**

தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக் காக தனித் துறை ஒன்றினை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் புதிய துறை இரண்டாவது செயலாள ரின் பொறுப்பில் இயங்கும்.

**5—10—80**

மதுரை மாவட்டத்தில் சிறு விவசாயிகள் பெற்ற கூட்டுறவுக் கடன் ரூபாய் 5 கோடியே 9 இலட்சம் ரத்து செய்யப் பட்டது என்றும் சிறு விவசாயிகளுக்குப் புதிய கடன் வழங்கப்படும் என்றும் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங் கியின் செயலாளர் திரு. விசுவநாதன் அறிவித்தார்.

**6—10—80**

விற்பனை வரி த்துறையில் 500 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் தெரிவித் தார்.

**7—10—80**

தமிழ்நாட்டில் கட்டிடங்கள் இல்லா 1,500 பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் இந்த ஆண்டு கட்டி முடிக்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு குழந்தைவேலு தெரி வித்தார்.

**8—10—80**

திருச்சி குடிநீர் திட்டத்திற்கு ரூ. 3 கோடி செலவிடப்படும், என்று குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு ஈ.ஆர். கிருஷ்ணன் கூறினார்.

**9—10—80**

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் குடிசை களுக்கு மின்விளக்குத் திட்டத்தின்கீழ் இதுவரை 18,977 குடிசைகளுக்கு மின் விளக்கு போடப்பட்டுள்ளது.

**10—10—80**

சேலம், தர்மபுரி, நெல்லை, குமரி மாவட்டங்களில் உள்ள தொழிலாளர் களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் வச தியாக சேலத்திலும், நெல்லையிலும் தொழிலாளர் துறை துணை ஆணையர் அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டுள் ளன.

**11—10—80**

முதியோர் உதவித் தொகை, ஊனமுற் றோர் உதவித்தொகை, விதவைகள் உத வித்தொகை பெறுபவர்களுக்கு 1.11.80 முதல், வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். கூறினார்.

3-வது ஊதியக்குழு சிபாரிசின் அடிப் படையில் அரசு ஊழியர்களுக்கு 1.7.80 இல் இருந்து ஒரு அகவிலைப்படி அளிக் கப்படும். அரசு ஊழியர்களுக்குப் பண் டிகை முன்பணம் இதுவரை ரூ. 300 தரப்பட்டு வந்தது. இது ரூ. 500 ஆக உயர்த்தப்படுகிறது; இதுவரை ரூ. 1000 அடிப்படைச் சம்பளத்துக்கு உட் பட்டவர்களுக்கு முன்பணம் அளிக்கப் பட்டது; இனி ரூ. 1350 வரை அடிப் படைச் சம்பளம் உள்ளவர்களுக்கும் கிடைக்கும் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி. ஆர். கூறினார்.

தொகுப்பு: மருது

## 12—10—80

கிராமப்புறத் தன்னிறைவுத் திட்டத்தை விரைவாக முடிக்கவேண்டும் என்பதற்காக மாவட்ட வளர்ச்சி அலுவலர்கள், கோட்ட வளர்ச்சி அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பணிகள் கூடுதலாக உருவாக்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு கூறினார்.

## 13—10—80

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க 180 இலட்சம் ரூபாய் முதலீட்டில் சிறு தொழில்கள் துவக்கப்பட இருப்பதாக மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி கூறினார்.

## 14—10—80

தூத்துக்குடியில் ரூ. 11.5 இலட்சம் செலவில் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு சட்டம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அடிக்கல் நாட்டினார்.

## 16—10—80

குடிசை வாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படும்; மக்கள் தெரிவிக்கும் குறைகளை அலுவலர்கள் உடனடியாகக் கவனித்துச் சீர்செய்ய, சென்னை மாநகராட்சியில் உள்ள 150 வார்டுகளில் 150 அலுவலர்களை நியமிக்க இருக்கிறோம் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தெரிவித்தார்.

## 17—10—80

கிண்டி, வேளச்சேரி, அரும்பாக்கம், அமைந்தகரை பகுதிகளில் சாக்கடை வசதி இல்லை. இதற்காக ரூ. 2 கோடி செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு தொழிலாளர் நலம் மற்றும்வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் கூறினார்.

## 18—10—80

சென்னை மாநகராட்சியின் வருவாயைப் பெருக்க மாநகராட்சியின் சார்பில் ஒன்பது திரையரங்குகள், கடைகள் கட்டப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு பா. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்தார்.

## 19—10—80

விவசாயிகள் எளிதில் கடன்வசதி பெறும் விதத்தில் நில உரிமைமுறை திருத்தப்படும் என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார்.

## 20—10—80

திருச்சி மாவட்டத்தில் அமராவதி ஆற்றின் இருகரைகளையும் இணைக்கும் புதிய பாலம் ரூ. 1 கோடியே 30 இலட்சம் செலவில் கட்டப்படுகிறது. இந்தப் பாலத்திற்கு மாண்புமிகு மத்திய போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ஏ. பி. சர்மா அவர்கள் அடிக்கல் நாட்டினார். மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

## 21—10—80

வீட்டு மனைப்பட்டா கொடுப்பதில் தமிழகத்தில் மதுரை மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. 1979-80ல் செப்டம்பர் வரை 5,523 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் பேட்டியில் தெரிவித்தார்

## 22—10—80

மக்களுடைய உயிர் உடைமைகளைக் காப்பதில் வீரதீர செயல்புரியும் தமிழகத்தைச் சேர்ந்த பொதுமக்களுக்கு 'அண்ணா மெடல்' வழங்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது 'அண்ணா மெடல்' வழங்குவதோடு இந்த மெடல் பெறுவோருக்கு ரூ 1,000 ரொக்கம் வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் மூவருக்கு இந்த மெடல் வழங்கப்படும்.

## 23—10—80

சேலத்தையடுத்த தளவாய்ப்பட்டியில் ரூ. 3 கோடியே 28 இலட்சம் ஒன்றரை ஆண்டு காலத்தில் பால் பவுடர் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படும். இதனால் 500 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்தார்.

## 24—10—80

செங்கற்பட்டு மாவட்டம், திருப்போரூர் தொகுதியிலுள்ள நெமிலி கிராமத்தில் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புயல் பாதுகாப்பு இல்லம் ஒன்று திறக்கப்பட்டது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு மத்திய அரசு சுகாதாரத்துறை அமைச்சர் திரு என். ஆர். லஸ்கர் அவர்கள் புயல் பாதுகாப்பு இல்லத்தினைத் திறந்து வைத்தார்.

1976-ஆம் ஆண்டு, 1979-ஆம் ஆண்டு மற்றும் 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்களின்கீழ் மனுச் செய்வதற்கு அல்லது கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள காலவரம்புவரை கடனாளிகள் அடகுப்

பொருட்களை விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.

## 25—10—80

தமிழ்நாட்டில் 69 ஊராட்சி ஒன்றியங்களில் மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற தன்னிறைவுத் திட்டத்தை அரசு அமல்படுத்தி வருகின்றது. இப்பணியினைக் கவனிக்க கண்காணிப்புக் குழுக்களை அரசு நியமித்துள்ளது.

## 26—10—80

அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் இலவச மருத்துவ வசதி செய்துதர அரசு முடிவு செய்துள்ளது.

## 27—10—80

77ஆம் ஆண்டு ரூ. 556 இலட்சத்திற்கு வெளிநாட்டிலிருந்து சிறுதொழிலுக்கான மூலப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இந்த ஆண்டு ரூ. 26 கோடிக்கு இறக்குமதி செய்யப்படும் என்று மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்தார்.

## 28—10—80

தமிழகத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடங்கள் அபிவிருத்தித் திட்டத்திற்கு உலக வங்கி ரூ. 102 கோடி கடன் வழங்க ஒப்புக் கொண்டுள்ளதாகவும், மூன்று மாவட்டங்களில் 2.75 இலட்சம் ஏக்கராவில் நிலக்கடலை பயிரிடத் திட்டம் உள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் தெரிவித்தார்கள்.

## 29—10—80

விவசாயிகள் மீட்டர் வாடகைக் கட்டணம் ரூ. 4லிருந்து ரூ. 3 ஆகக் குறைக்கப்படுகிறது; 1—7—80 முதல் அமலுக்கு வருகிறது என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

## 30—10—80

கைத்தறி நெசவாளர்களுக்கும், பீடி தொழிலாளர்களுக்கும் இலவச மருத்துவ சிகிச்சை செய்வதற்காகத் தமிழக அரசு ரூ. 35 இலட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளது.

## 31—10—80

சென்னை அண்ணாசாலை, ஈ.வே.ரா. நெடுஞ்சாலைப் பகுதிகளில் தெருப் பெயர்ப் பலகைகளில் அப்பகுதியின் தபால் துறை அஞ்சல் குறி எண்களும் பொதுமக்கள் நலனுக்காகக் குறிப்பிடப்படும் என்று சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

பொள்ளாச்சி-வால்பாறை இடையே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலை அபிவிருத்தி செய்ய ரூ. 8 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்தார்.

கைத்தறித் துணிகள் ஏற்றுமதி மூலம் நமது நாடு போதுமான அளவு அந்நியச் செலாவணி பெறுகிறது. 1970-71-ஆம் வருடம் 25 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி பெறப்பட்டது. 1979-80-ஆம் ஆண்டு 288 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை நாம் பெற்றுள்ளோம்.

கைத்தறித்துணிகள் 130 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மாறிவரும் காலத்திற்கேற்ப இந்த தொழில் செயல்படும் வகையில் செயற்கை இழைகள் உபயோகப்படுத்துவது போன்ற முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் ஏற்றுமதி அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.



**மாணவர் பக்கம் :**

# பரிசு

இரா. இரகுபதி

'லீனா கங்கிராஜிலேசன்ஸ்' என்று தோழிகள் பாராட்டுகளை அள்ளி வழங்கிக் கொண்டிருந்தார்கள். ஆசிரியைகள் வாழ்த்துக் கூறினார்கள். அதன் காரணமாக லீனா மகிழ்ச்சிக் கடலில் மிதந்து கொண்டிருந்தாள்.

இந்த மகிழ்ச்சிக்கெல்லாம் உச்சாணிக் கொப்பாக அவள் பள்ளியில் பெரிய பாராட்டு விழாவே நடத்தி விட்டார்கள். ஆனால் அவள் உள்ளத்தில் மட்டும் எங்கோ சிறிய கவலையின் ரேகைகள், ஓர் உராய்வு அவளை அந்த மகிழ்ச்சியில் திளைக்க விடாமல் செய்து கொண்டிருந்தது. அவளது தோழி மலர்விழிதான் அதற்குக் காரணம்.

'எப்பொழுதும் சிரித்துக் கொண்டேயிருக்கும் இந்த மலர்விழிக்கு என்ன வந்துவிட்டது? சோவியத்நாடு நடத்தும் நேருவின்நினைவுக்குரிய அனைத்து இந்தியக் குழந்தைகள் வரையும் ஓவியப் போட்டியில் தான் முதன்மை பெற்றதையும், அதற்காக சோவியத் நாட்டில் உள்ள கருங்கடற்கரைப் பயணியர் முகாமிற்கு ஒரு மாதம் இலவசமாகச் சென்றுவரப்போவதையும் தன் தோழி மலர்விழியிடம்தான் முதன் முதலாகச் சொன்னாள்.

இதுமட்டுமா? 'இந்திய-சோவியத் குழந்தைகள்' என்ற அந்த ஓவியத்தை வரைந்து முதன் முதலில் மலர்விழிக்குத்தான் காட்டினாள். அப்பொழுதுகூட ரொம்ப மகிழ்ச்சியாக வாழ்த்தினாளே. இப்பொழுது என்ன வந்துவிட்டது இவளுக்கு! லீனாவிற்கு நினைக்க நினைக்கச் சங்கடமாக இருந்தது. தனக்குக் கிடைத்த 'மகிழ்ச்சி' என்ற பண்டத்தைத் தன் தோழியிடம்பகிர்ந்துஉண்ண முடியவில்லையே என்று மிகுந்த வேதனைப் பட்டாள். அதுவும் ஒரு வாரமாக ஏனோ எதிலும் ஈடுபாடு காட்டாமலும் இருந்தாள். அவளுக்கு என்னவென்று பிடிபடாத காரணத்தால், இன்று பள்ளி முடிந்ததும் எப்படியும் அவளிடம் கேட்டுவிட வேண்டும் என்று நினைத்து, அவளோடு அவள் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

இடையில் ஒன்றும் பேசாது அமைதியாக இருவரும் மலர்விழியின் வீட்டை அடைந்தனர். எப்பொழுதும் மகிழ்ச்சியாக வரவேற்கும் மலர் விழியின் அம்மாவின் முகத்தில்கூட மலர்ச்சி இல்லை. கவலை குடிகொண்டிருந்தது.

என்னவென்று புரியாது மலர்விழியின் வீட்டிற்குள்ளே சென்றாள் லீனா. அப்பொழுதுதான் அவளுக்கு விஷயம் புரிய ஆரம்பித்தது. எப்பொழுதும் சுட்டித்தனம் செய்து கொண்டிருக்கும் ராமு மலர்விழியின் தம்பி கட்டிலில் படுத்திருந்தான். லீனா பக்கத்தில் சென்று பார்த்தாள். ஆடாமல் அசையாமல் அப்படியே கட்டிலில் கிடந்தான்.

''என்னம்மா... ராமுவுக்கு என்ன காய்ச்சலா...'' என்று கேட்டாள் லீனா.

''இல்லேம்மா முதல்லே காய்ச்சல்தான் இருந்தது. ஆனா இப்போது அவனுடைய கை கால்கள் இயங்கவிடாத ஒரு புது வியாதி வந்திருக்கிறது ஒரு வாரமா இவனை வைச்சிக்கிட்டு இவங்க அப்பா... எல்லா டாக்டர்கள் கிட்டேயும் போயிட்டு வந்திட்டார்... நேற்றுத்தான் சென்னைக்குக் கொண்டு போயிட்டு திரும்பி வந்தாங்க. டாக்டர்கள் கையை விரிச்சுட்டாங்க 'வெளிநாட்டிலே இருக்கிற டாக்டர்களால் ஒருவேளை முடியும்.... பத்திரிகைகளிலே விளம்பரம் கொடுங்க.. யாராவது உதவி பண்ணுவாங்க' என்று அவங்க சொல்லி அனுப்பிட்டாங்க, என்ன பண்ணுறது லீனா? வெளிநாட்டுக்குக் கொண்டு போற அளவுக்கு அவ்வளவு பெரிய செல்வந்தர்களா நாம்'' என்று உருக்கத்துடன் மலர்விழியின் அம்மா கூறியவுடன் லீனாவுக்கு அழுகையே வந்துவிட்டது.

ஆனால் லீனா எதையும் வேகமாகச் சிந்திக்கக் கூடியவள். பிரச்னைகளுக்கு விரைவிலே தீர்வு கண்டு விடுகின்ற பழக்கத்தை அந்தச் சிறு வயதிலேயே செய்து பழக்கப்பட்டுப் போனவள். ஆகவே 'கவலைப்படாதிங்க அம்மா.. இன்னும் ஒரு வாரத்திலே உங்களுக்கு நல்ல செய்தியோடு வர்றேன், என்று சொல்லிவிட்டு மலர்விழிக்கும் ஆறுதல் கூறிவிட்டு தன் வீட்டை அடைந்தாள் லீனா.

தன் தோழியின் மகிழ்ச்சிக்காக தனக்குக் கிடைத்த 'முதற்பரிசான சோவியத் நாடு செல்லும் வாய்ப்பே வேண்டாம். அதற்குப் பதிலாக என் தோழியின் தம்பியின் உடல் நோயைப் போக்கும் சிகிச்சையை நீங்கள் ஏற்கவேண்டும் என்று டில்லியிலுள்ள இந்திய சோவியத் நட்புறவுக் குழுவுக்கு எழுதினாள். ஒரு வாரத்தில் பதில் கிடைத்தது. லீனாவின் நட்பின் பிணைப்பைப் பார்த்து இரண்டையும் ஏற்றுக் கொண்டு கடிதம் எழுதினார்கள் சோவியத் நட்புறவுக் குழுவினர்.

லீனா தன் தோழி மலர்விழியின் வீட்டை நோக்கி ஓடிக் கொண்டிருந்தாள். அவளது கைகளில் இருந்த கடிதம் காற்றின் வேகத்தில் படபடத்தது.

''இதோ பாருங்கம்மா..நம்ம இராமுக்கு சோவியத் நாட்டில் சிகிச்சை செய்ய அந்த நாடே எல்லா செலவையும் ஏத்துக்கிடுதாம். இராமு கூட நீங்களும் போகலாம். நானும் அவங்க கொடுத்த பரிசின்படி சோவியத் யூனியன் போகலாமாம். இதோ பாருங்க... தபால் வந்திருக்குது'' என்று லீனா சொன்னபோது மலர்விழியின் தாய் மெய்சிலிர்த்துப் போனாள். 'லீனா.... நீ எனக்குப் பிறக்காத ... மக' என்று ஆனந்தக் கண்ணீர் விட்டாள்; மலர்விழி அப்படியே தன் தோழியைக் கட்டித் தழுவிக் கொண்டாள். தன்னுடைய மகிழ்ச்சிக்காகவே தன் தோழி லீனா இப்படி ஒரு பெரிய செயலைச் செய்திருக்கிறாள் என்பதை மலர்விழி புரிந்துகொண்டாள். லீனாவோ, தன் தோழியின் மகிழ்ச்சியைப் பார்த்து, தான் பரிசு பெற்றதைவிட அதிகமாக மகிழ்ச்சியடைந்தாள்.

# அறிவுச்சுடர்

உலகிலேயே கடினமான மொழியின் பெயர் எலமைட் (Elamite) என்பதாகும். மிகக் குறைந்த அளவில் வெளியுலகிற்கு அறிமுகமா யுள்ளதும், வேறெந்த மொழியுடனும் தொடர் பில்லாததும், நாகரிக மொழி என்று கருதப்படு வதும் எலமைட் மொழி ஆகும். எலமைட் மொழியை ஈரானில் உள்ள ஒரு பகுதி மக்கள் பேசுகின்றனர்.

கேதரைன், மோசஸ் என்ற இரு மருத்துவர் களது கண்டுபிடிப்பின் அடிப்படையில், இரத்த அழுத்தத்தைக் குறைக்க பச்சை வெங்காயத்தைச் சாப்பிடுவது நல்லது என்று தெரிகிறது. பச்சை வெங்காயத்தில் ப்ரொஸ்ட கிளாண்டின் என்ற சத்து உள்ளது. இது இரத்த அழுத்தத்தைக் குறைக்கின்றது.

புள்ளி விவரப்படி 'O' இரத்த வகையை உடையவர்களை நோய் எளிதில் அணுகுவ தில்லை. வயதானவர்களில் அதிகப் பேரின் இரத்த வகை 'O' இரத்த வகையாகும். 40 வயதுக்கு மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் 'O' இரத்தவகை கொண்டுள்ளனர். வயிறு சம்பந்தப்பட்ட தொல்லை உடையவர்களின் இரத்த வகை 'A' ஆகும்.

1. கடுமையான பனிக்காலத்தில் தண்ணீர்க் குழாய்கள் வெடித்து உடைகின்றன. ஏன்?
2. கடற்கரை நகரில் அதிகம் வியர்ப்பது ஏன்?
3. நட்சத்திரங்கள் மின்னுவதேன்?
4. கார் திடீரென்று நின்றால் நாம் முன்னே தள்ளப்படுவதேன்?
5. வெள்ளைத் துணிக் குடையே வெயிலுக்கு ஏற்றது, ஏன்?

## ஏன்? ஏன்? ஏன்?

6. மலிவான கடிகாரம் கோடையில் மெதுவாக ஓடுவதேன்?
7. மின்சார பல்பு உடையும்போது பேரொலி எழுவதேன்?
8. மரத்தைக் காக்கும் மின்னல் மரத்தின் அருகே நிற்கும் மனிதனையும் தாக்குவது ஏன்?
9. ஜுரமானியை வெந்நீரில் கழுவக் கூடாது ஏன்?
10. மலைப் பிரதேசத்தில் சமையல் தாமதமாவது ஏன்? (விடை: அடுத்தபக்கம்)



விஞ்ஞானம் மனிதனுடைய அறிவை அதிகரித்தது மட்டுமின்றி, இயற்கையின் மீது அவன் செலுத்தக் கூடிய ஆதிக்கத்தையும் அதிகரிக்கிறது.

யந்திரமும், யந்திரக்கைத்தொழிலும் வந்த பிறகு மதத்தின் பால் காட்டப்பட்டு வந்த அலட்சியம் இன்னும் அதிகரித்தது. இருட்டு நம்பிக்கையின் அடிப்படையை விஞ்ஞானம் தகர்த்தெறிந்துவிட்டது.

விஞ்ஞானம் வாழ்க்கையின் வழி, முறைகள் எல்லாவற்றையும் அடியோடு மாற்றிவிட்டது. அது உலகிலேயே ஒரு புரட்சியை உண்டு பண்ணிவிட்டது.

விடைகள் :

1. குளிரில் நீர் உறைவதால் விரிவடைகிறது. எனவே, குழாய் உடைகிறது.

2. கடற்கரைக் காற்றில் ஈரம் மிகுந்திருப்பதால் வியர்வை சீக்கிரம் உலர்வதில்லை. எனவே அதிகம், வியர்க்கிறது.

3. நட்சத்திரத்தின் ஒளி, காற்று மண்டலத்தின் வழியே வரும்போது காற்றின் அசைவு காரணமாக விட்டு விட்டுப் பிரகாசிக்கிறது. அதாவது மின்னுகிறது.

4. நகர்ந்துகொண்டிருக்கும் ஒருபொருளை வேறு ஒரு சக்தி தடுத்தாலொழிய அப்பொருள் நகர்ந்து கொண்டேதான் இருக்கும் என்பது நியூட்டன் விதி. கார் திடீரென்று நிற்கும்போது எந்தச் சக்தியும் பணிகளைத் தடுத்து நிறுத்தாததால் அவர்கள் முன்னே தள்ளப்படுகிறார்கள்.

5. கறுப்புத்துணி சூரிய ஒளியை உட்கவர்வதால் தலை சூடேறும். வெள்ளைத் துணி ஒளியைப் பிரதிபலிப்பதால் சூடேறாது.

6. பெண்டுலம் விரிவடைவதால் அலைவு நேரம் அதிகமாகும். எனவே, மலிவான கடிகாரம் மெதுவாக ஓடுகிறது.

7. பல்பு உடைந்ததும் உள்ளே இருந்த வெற்றிடத்தை நிரப்ப, வெளிக்காற்று வேகமாக நுழைவதால்.

8. மனித உடல் ஒரு மின்சக்தி. மரமோ மின்சாரம் கடத்தாப்பொருள். எனவே, மரத்திலிருந்து மனிதனைத் தாக்கி மண்ணில் சேர்கிறது மின்னல்.

9. ஜுரமானியை வெந்நீரில் கழுவக் கூடாது. ஏனென்றால் ஜுரமானியில் 110° எப் வரைதான் பாதரசம் விரிய இடமுண்டு. வெந்நீரின் சூடு 212° எப் இருக்கலாம். எனவே, பாதரசம் விரிய இடமின்றி ஜுரமானி உடைந்துவிடும்.

10. மலைப் பிரதேசத்தில் காற்றழுத்தம் அதிகம். ஆதலால் நீரின் கொதி நிலை குறைவு. எனவே, நீர் கொதித்தாலும் சூடு இருக்காது. எனவே, சமையல் தாமதமாகிறது.


—ப. அசோக்குமார்.

## என். சி. சி. யில் இந்தியாவிலேயே சிறந்த மாணவி



என்.சி.சி. பயிற்சி சம்பந்தமான ஒரு டாகுமெண்டரி படத்தைப் பார்த்த ஒரு மாணவி, என்.சி.சி. யில் சேர ஆர்வம் கொண்டு சேர்ந்தார். அதில் சேர்ந்த நான்கு ஆண்டுகளில் அவர் இந்தியாவிலேயே அட்வான்ஸ்டு லீடர்ஷிப்பில் (Advanced Leadership) சிறந்த மாணவியாகத் (Best Cadet) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் யார் தெரியுமா? நம் துறைமுகத் தலைமை மருத்துவ அதிகாரி திருமதி மீரா ஸ்ரீகுமார் அவர்களின் மகளே ஆவார். இவர் பெயர் அனுராதா. சென்னை எத்திராஜ் கல்லூரியில் பி.ஏ. (பொருளாதாரம்) இரண்டாம் ஆண்டு பயிலும் இவர் என்.சி.சி. யில் விமானப் படை பயிற்சி மாணவியாக (Cadet) இருக்கிறார்.



சென்னை கோட்டையிலுள்ள செயிண்ட் மேரி சர்ச்சின் மூன்றாவது நூற்றாண்டு விழா அக்டோபர் திங்களில் கொண்டாடப்பட்டது.

சூயஸ் கால்வாய்க்குக் கிழக்கே உள்ள மிகப் புராதன அங்கிலகன் சர்ச் என்ற பெருமை பெற்றது இது.

இந்தச் சர்ச்சில்தான் ராபர்ட் கிளைவின் திருமணமும், சென்னை கவர்னர் எலிஹூயேலின் திருமணமும் நடைபெற்றன. எலிஹூ யேல் பெயரில் அமைக்கப்பட்டதுதான், அமெரிக்காவிலுள்ள புகழ் பெற்ற யேல் பல்கலைக் கழகம்.

பழைய காலத்தில் கீழை நாடுகளில் "வெஸ்ட் மினிஸ்டர் அபே" என்று இது புகழப்பட்டு வந்தது.

ஓரளவு தமிழ் அறிவு உடையவர்கள் தனிநாயக அடிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பார்கள். தமிழ் இலக்கிய இலக்கணங்களோடு நெருங்கிய தொடர்பு உடையவர்கள் தனிநாயக அடிகளை ஒரு நல்லறிஞராக மதிப்பார்கள்; இந்த எல்லைகளைத் தாண்டிய உலகத் தமிழ் ஓர்மை உடையவர்கள் யாராயினும், அவர்கள் தனிநாயக அடிகளை, உலகு தழுவி வீசிய ஒரு தெள்ளு தமிழ்ப் பூங்காற்றாகவே மதித்து மனம் மகிழ்வார்கள்.

### அடிகளின் வளர்ச்சி

ஈழத்திலே பிறந்த தனிநாயகம் ஒரு மதபோதகராக வளர்ந்து, தமிழ் அறிஞராக மலர்ந்து,— தமிழ்ப்பண்பாடு என்னும் நறுமணத்தை உலகெங்கும் கமழச் செய்த வரலாறு மிகமிகச் சுவையானது. மதம் என்னும் எல்லைக்குள் நிற்போரையும், தனது மாண்பார்ந்த சிந்தனைகளால் கவர்ந்து வளர்த்துத் தனது அருமைத் தொண்டர்களாக்கிக் கொள்ளும் தமிழின் அரிய சாதனை வரலாறு அது!

தனிநாயகம் இளமையில் தமிழ் பயின்றவரல்லர்; ஆங்கில இலக்கியமே பயின்றார். பின்னரும் தமிழாசிரியர் ஆவதற்கு உரிய பயிற்சிகளைப் பெற்றவரல்லர்; கத்தோலிக்க மத குரு ஆவதற்கான பயிற்சியையே பெற்றார். அவரே ஓர் இடத்தில் சொல்லியிருப்பது போல,— இத்தாலி நாட்டில் பல நாட்டவரோடு பழகி மதகுருவுக்கான கல்வியைப் பெற்று வந்தபோது, தமிழ், சிறிது சிறிதாக அவரைத் தன்பால் கவர்ந்தது: ''பிறநாட்டில் நாம் வாழும்போது மொழிப் பற்றும் பண்பாட்டுப் பற்றும் வளர்வது இயல்பு'' என்று இதைக் குறிப்பிடுகிறார் அடிகள்.

ஈழத்துப் பூதந்தேவன் முதல் இந்நாள் கனகசெந்திநாதன், எஸ். பொன்னுத்துரை வரை, ஒரு நெடிய தமிழ்த் தொண்டர் வரலாறு உடையது ஈழநாடு. அந்நாட்டின் ஊர்காவல்துறையில் 1913-ல் பிறந்த தனிநாயகம் ஒரு மதகுருவுக்கு உரிய கல்வியை முடித்ததும் தாய்த் தமிழகத்திலே (நெல்லை மாவட்டத்தின்) தூத்துக்குடியிலே பணியேற்கும் வாய்ப்பு அவருக்கு அமைந்தது. மேலை நாட்டிலிருந்து கிறித்துவ மதம் பரப்ப வந்தோரில் பல பேரைத் தமிழ்த் தொண்டர்களாக்கிய தமிழகத்து நெல்லை மாவட்டமே, தனிநாயகரையும் அந்தத் திசையில் ஊக்கியது. அவர், பள்ளியிலும் கல்லூரியிலும் பயிலாத தமிழைத் தனியேகற்றுக் கொள்ளத் திட்டமிட்டார்.

## தமிழ் வளர்த்த பெரியார்கள்

தமிழ்ப் புலவர் ஒருவரிடம் கற்ற தமிழ், அவரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மாணவராக உயர்த்தியது.

அந்நாளில் தமிழ்ப் பல்கலைக் கழகம் என்னும் சிறப்புக்கு உரியதாக விளங்கிய அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தனிநாயகரிடம் தோன்றித் தளிர்விட்டிருந்த தமிழ் ஆர்வ ஆற்றலை நன்கு வளர்த்தது. அங்கு நிலவியதும்,

# தனிநாயகம் என்னும்



# தமிழ்ப் பூங்காற்று

தமிழகம் எங்குமுள்ள தமிழ் அறிஞர்களை இனிதே கவர்ந்தது மாகிய ஒரு தமிழ் உணர்வு அடிகளாரின் வாழ்வையே, தமிழ்த் தொண்டர் வாழ்வாக மலரச் செய்தது. அந்நாளையத் தமிழ்ப் புலவர்களில் பல பேர் இடைக் காலத்தில் தமிழரைப் பற்றிக் கொண்ட பொறாமை நோய்க்கு விலக்காக இல்லாவிட்டாலும்,— மலர்களின் தேனை மட்டும் எடுத்துக் கொண்டு வானில் பறந்து எழும் தேனீயைப்போல, அவர்களின் உறவால் கிடைத்த ஒரு தமிழ் எழுச்சியை மட்டும் தமதாக்கிக் கொண்டார் அடிகள். தேனீயின் தனிச்சிறப்பே அது தானே?

—முனைவர் சாலை இளந்திரையன்

அண்ணாமலையில் பெற்ற தமிழ்ப் பட்டங்களோடு, அவர் தமது இளங்குருப் பணிக்குத் திரும்பியபோது, அவரை ஈன்றெடுத்த ஈழத் தமிழகம் அவருடைய பணியை நாடி வரவேற்றது. இலங்கைப் பல்கலைக் கழகக் கல்வித்துறை அவருடைய பணிகளுக்குப் புதிய களமாயிற்று.

அது முதலே, தனிநாயக அடிகளின் தமிழ்ப்பணி உயர்ந்து பெருகத் தொடங்கியது. கத்தோலிக்க மதகுரு என்பதனால் கிடைத்த உலகத் தொடர்பு வாய்ப்புகளையும், தமிழகத்துத் தமிழ் அறிஞர்களோடு ஏற்பட்ட தொடர்புறவையும் விடாமல் வளர்த்துக் கொண்டார். இந்த இருபால் தொடர்பே, அவர் எங்குச் சென்றாலும் ஒரு தமிழ்த் தூதுவராகவே மிளிரும் நிலையை ஏற்படுத்தியது. ஆங்கிலக் கல்வி, சமயக்கல்வி என்னும் இரண்டு தளங்களில் நல்ல பயிற்சி பெற்ற பின்பே தமிழ் இலக்கியத்தைப் பயின்றதால், தமிழ் இலக்கியத்தின் மாண்பார்ந்த அரிய சிந்தனைக் களங்களை அவரால் எளிதாக உணர்ந்து போற்ற முடிந்தது. (தமிழ் இலக்கியம் பயில்வோர் அதை மட்டும் பயில்வதோடு அமையாமல், வேறு சில துறைகளையும், இயன்றால் வேறு இலக்கியங்களையும் பயில்வது அவர்களுக்கும் நல்லது; நமது தமிழுக்கும் நல்லது.) எனவே இப்பாரிய பழஞ்செல்வத்தை உலகெங்கும் பரப்புதல் வேண்டும் என்னும் நியாயமான ஆசையும் அவருக்கு ஏற்பட்டது.

தமிழ் ஆர்வலர் சிலரை ஒன்று சேர்த்தார்; தமிழ்ப் பண்பாடு (''தமிழ்க் கல்ச்சர்'') என்னும் முத்திங்கள் ஆங்கில இதழ் ஒன்றைத் தொடங்கினார்; முந்திய சில நூற்றாண்டுகளிலே, மேலை நாட்டுப் பாதிரியார்களின் ஆர்வத்தால் அங்கங்கே சென்று தங்கி நின்ற தமிழ்மேன்மை என்னும் பஞ்சுமுகில் மழைமுகிலாக விரிவடையத் தொடங்கியது. அடிகளாரின் பணிஇடமும் மலேசியக் கோலாலம்பூருக்கு மாறியது.

தனிநாயக அடிகள் மலேசிய இந்திய இயல் (தமிழ்) பகுதியின் தலைவராக இருந்த போதுதான் 1964-ல், இந்தியத் தலைநகரில், கிழக்கத்தியக் கலை, பண்பாட்டி ஆய்வாளர்களின் 22-ஆவது மாநாடு நடைபெற்றது. உலகின்

பல பகுதிகளில் இருந்து தமிழ் ஆர்வலர்களும் தமிழ்ப் பயிற்சி உடையவர்களுமான பிறமொழி அறிஞர்பலர்அங்கே கூடினார்கள். தமிழகத்துத் தமிழ்ப் பேராசிரியர்களும் இந்தியாவின் மற்ற மாநிலங்களைச் சேர்ந்த தமிழறிஞர் சிலரும் இலங்கை நாட்டுத் தமிழறிஞர்களும் வந்திருந்தனர்.

இந்த மாநாட்டில் பங்குகொள்வதற்காக தில்லிக்கு வந்து எங்கள் இல்லத்தில் தங்கியிருந்த ஈழத்து அறிஞர் கா. பொ. இரத்தினம் அவர்கள், ''பல பேர் வந்திருக்கிறார்கள்; இங்கேயே உலகு தழுவிய தமிழ் அமைப்பு ஒன்றை நிறுவி விடலாமே'' என்றார். (ஏற்கெனவே இதுபற்றி அவரும் தனிநாயக அடிகளாரும் பேசியிருந்தார்களோ என்னவோ, தெரியாது). நாங்களும் (நானும் சாலினியாரும்), ''ஆமாம்; நல்ல யோசனை'' என்றோம். மூவரும் ஒன்றாகச் சென்று பல நாட்டு அறிஞர்களிடமும் இந்தக் கருத்தைத் தெரிவித்தோம். அடிகளார் மிகச் சுறுசுறுப்பாக இப்பணியில் ஈடுபட்டார். ஒரே நாளில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் (International Association for Tamil Research) உருவாயிற்று. அடிகளார் தனி நாயகமே அதன் செயலாளர் நாயகமாகப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று எல்லோரும் கேட்டுக் கொண்டார்கள்....

இந்த மன்றத்தை உருவாக்கியதும் அதன் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்ததும் எவ்வளவு பொருத்தம் என்பது விரைவிலேயே தெரியலாயிற்று. 1964-ல் தொடங்கிய இம்மன்றம், 1966 லேயே உலகு தழுவிய ஒரு தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைத் தமிழகத்துக்கு வெளியே (கோலாலம்பூரில்) நடத்த முடிந்தது என்றால், அது, சாதாரணமான சாதனை அல்லவே !

## அடிகளாரின் எழுத்து

இவர் 1952-ல் தொடங்கிய 'தமிழ்க் கல்ச்சர்' என்னும் முத்திங்கள் இதழ் 1967 வரையில் சிறப்பாக வெளிவந்தது. தமிழ் இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவைகளைப் பற்றித் தமிழரும் மற்றவர்களும் எழுதிய பல அரிய கட்டுரைகள் இந்த இதழில் வெளிவந்தன. அடிகளாரும் இதிலே சில கட்டுரைகளை எழுதினார்.

''இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தில் மாநிலத் தேசியம்'' என்னும் அவருடைய கட்டுரை, இலக்கியத்தில் கருத்துத் தீண்டாமையை வளர்க்கும் உயர்சாதிச் சுகவாசத் தொட்டாற் சுருங்கிகளுக்குப் பெரிய அறைகூவலாக அமைந்தது. அது தெற்கே எழுந்த தமிழ் (திராவிட) தேசியத்தை நியாயப்படுத்துவதாக இருந்ததால் அதற்கு அவர்கள் மறுப்புகளும்கண்டனங்களும், எழுதினார்கள். ஆயினும் கடைசியில் அவர்கள் உண்மை தெளிந்து ஓய்ந்தார்கள். இதேபோல், 'இலங்கையின் இறந்தகால—நிகழ்கால-எதிர்காலப் பண்பாடு' (1955), 'இலங்கையில் மொழி உரிமை' (1956) என்னும் கட்டுரைகளும், மக்களோடு அவர் எந்த அளவு தொடர்பு கொண்டிருந்தார் என்பதை விளக்கும் சீரிய ஆய்வுரைகள்.

உலகெங்கும் உள்ள பல பல்கலைக்கழகங்களில் தமிழ்க் கலை-இலக்கியப்பண்பாடுகளைப் பற்றி இனியஆய்வுரைகள் நிகழ்த்திய அடிகள், சில நல்ல புத்தகங்களையும் எழுதியுள்ளார். அவைகளுள் 'ஒன்றே உலகம்' (1966) என்பதும் 'திருவள்ளுவர்' (1967) என்பதும் தனித்த சிறப்புக்கு உரிய ஏடுகள். ஒன்றே உலகம் என்பது, உலகநாடுகள் பலவற்றில் அவர் மேற்கொண்ட சுற்றுப்பயணங்களைப் பற்றியது; திருவள்ளுவர் என்பது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அடிகள் நிகழ்த்திய மூன்று ஆய்வுப்பொழிவுகளின் தொகுப்பு.

## ஒன்றே உலகம்

தனிநாயகர் எங்கே சென்றாலும் தமிழை அவர் மறப்பதே இல்லை என்பதை விளக்கி நிற்கிறது ஒன்றே உலகம். அதேபோல், தமிழர்களுக்குப்பயனுள்ள செய்தி எங்கே கிடைத்தாலும், அதை மறவாமல் இந்நூலில் குறித்துள்ளார் அடிகள். சான்றுக்கு, இந்த நூலின் சிலபகுதிகள்:

''தமிழ்'' என்னும் சொல் தாய்லாந்து நாட்டில் ''தமின்'' என்று வழங்குகிறது. ஆனால், நாம் கருதுவது போல இனிமை, பெருமை முதலான பொருள்களில் அங்கே அச்சொல் ஆளப்படவில்லை; 'கறுத்த கொடிய இந்தியன்' என்னும் பொருளிலேயே அச்சொல் வழங்குகிறது. 'ஈழ நாட்டின் மீது சோழர்கள் படையெடுத்த காலத்தில் புத்த முனிவர்கள் பலர் ஈழத்திலிருந்து தாய்லாந்திற்குச் சென்றனர். அங்குச் சென்றிருந்த போது தமிழ் மக்கள் தங்கள் பால் இழைத்த கொடுமைகளைப்பற்றி பேசினர். இது காரணம் பற்றியே தாய்லாந்தில் அதுகாறும்சிறப்புப் பெற்று விளங்கிய ''தமிழ்'' என்னும் சொல்லிற்குக் கொடுமையுடன் தொடர்புள்ள புதிய பொருளொன்றுசேர்ந்தது. நாளடைவில் தமிழர்ஆதிக்கம் குன்றியதும் அப்பொருளே நிலைத்தது.

''வியட்நாமின் கிழக்குப் பகுதிக்குச் சென்றால் அங்குள்ள பெருவீதியின் ஓரத்தில் சாம்பர் என்னும் இனத்தினர் கட்டிய பல தனிக் கோபுரங்கள் தோற்றமளிக்கும். இக்கோபுரங்கள் பெரும்பாலும் மாமல்லபுரக் கோபுர மரபில் கட்டப்பட்டவை ஆயினும் இவை கல்லின் கட்டப்பெறாமல் செங்கல்லால் அமைக்கப் பெற்றவை.''

''சுமத்திராவில் வாழும் காரோபட்டக் என்னும் இனத்தவர் தம் இனத்தாரின் உட்பிரிவுகளுக்குச் சேரர், சோழர், பாண்டியர், கலிங்கர், மலையாளியர் என்ற பெயர்களை வழங்கி வருகின்றனர். இன்று பேசப்படும் இந்தோனீசிய மொழியில் தமிழ்ச் சொற்கள் சில உள. பணத்தைத் துணை என்றும், காப்பாளரைக் காவலர் என்றும், கவியைத் தோழன் என்றும், மதிப்பை நிலை என்றும், சுங்க வரியைச் சுங்கே என்றும், கொடியைத் தாலி என்றும் கூறுகின்றனர். இடம், வட்டில், பண்டம், கலம், கடலை, கண்டு என்னும் சொற்களும் உள்ளன. இத்தமிழ்ச் சொற்கள் சில பண்டைச் சாவகக் கவிதையிலே உள.

''இலண்டனுக்கு முதன்முறையாகச் சென்றதும், இந்திய மாணவர் இந்தியர் பலரைச் சந்திக்கின்றனர். இந்திய உணவு உண்பதற்காக அடிக்கடி இந்திய விடுதிகளுக்கும் இந்திய உணவுச் சாலைகளுக்குமே செல்கின்றனர். கல்வி பயில்வதற்காக இலண்டனுக்குச் செல்வதால் தம் கல்வியை விரைவில் முடித்துக்கொண்டு தாய்நாடு திரும்ப முயல்கின்றனர். எனவே, தம் கல்விக்குரிய தேர்வுத் துறையைத் தவிர்த்த ஏனைய கல்வித் துறைகளினும் சமூக நட்பிலும் பங்கு பற்றுவதற்குத் தகுந்த மேற்பார்வையாளர் இன்றேல், இம்மாணவர் அத்துறைகளில் ஈடுபடுவதில்லை.

''ஜெர்மன் மக்கள் முதல்முதல் இந்திய மொழிகளுடன் தொடர்பு கொண்டது தமிழ்நாட்டிலேயே. தரங்கம்பாடிக்கு வந்த ஜெர்மன் போதகர் தமிழ்மொழியின் அமைப்பையும் தமிழ் இலக்கியங்களையும் பயின்றனர். சீகன் பால்க் இவர்களுள் தலைசிறந்தவர். இவர் தமிழ் நாட்டிலிருந்து எழுதிய கடிதங்கள் நூல் வடிவமாக 1710-ஆம் ஆண்டில் அச்சேறின பின், அந்நூல் ஐரோப்பாவில் தென் இந்தியாவைப் பற்றிய பெரும் விருப்பையும் வியப்பையும் உண்டாக்கியது.

''கிரேக்க நாட்டின் வரலாற்றிலிருந்து தமிழ்மக்கள் பாடம் ஒன்றினை நன்றாகக் கற்க வேண்

டும்; பண்டைப் புகழ் ஒரு நாட்டில் எத்துணை மண்டிக் கிடந்தாலும், அந்நாட்டின் இக்காலத்து மக்கள் நன்முயற்சியால் தம் முன்னோர் பூட்கைகளைப் பொன்னே போற் போற்றி மேற்கொண்டாலன்றி, அந்நாடு வீசும் பண்பாட்டு ஒளி மங்கி மறைந்தே விடும்!

''போர்த்துக்கலில் தங்கிய பொழுது தமிழ்நாட்டைப்பற்றிய சில பழைய அறிக்கைகளைப் படித்ததுடன் இரு பண்டைத் தமிழ் நூல்களையும் பார்வையிட்டேன். ஒரு நூல் பதினாறாம் நூற்றாண்டில் கத்தோலிக்கக்குரு ஒருவர் இயற்றிய தமிழ் இலக்கணக் கையெழுத்துப் பிரதி. இதுவே, நாம் அறிய ஐரோப்பியர் ஒருவரால் யாக்கப் பெற்ற முதல் இலக்கண நூல்.

''1861 ஆம் ஆண்டில் அங்கு (மொரிசியஸ் நாட்டில்) வெளியிட்ட பிரஞ்சு செய்தித் தாள்களில் தமிழ் அச்சுக்களைக் கொண்ட தமிழ் விளம்பரங்களை பதிப்பித்துள்ளனர். 1868 ஆம் ஆண்டில் ஒரு தமிழ்ச் செய்தித் தாளை இத்தீவில் பதிப்பித்தார்கள்.

''ஒருவன் ஒரு துண்டுக் கடுதாசியை நிலத்தில் எறிந்ததும் வேறொருவன் அவனைக் கண்டித்து அவ்வாறு செய்வது தவறு என்று சுட்டிக் காட்டுவதைப் பார்த்தேன். இங்ஙனம், சிலர் சட்டங்களை மீறும் பொழுது பிறர் கண்டித்து அவர்கள் சட்டங்களை அனுசரிக்குமாறு செய்வது இக்கால ரஷியாவில் ஒரு மரபாக இருக்கின்றது.''

**சிந்தனை உலகம்**

தமிழின் கீர்த்தி உலகெங்கும் பரவியுள்ள தன்மையையும் உலகோரிடமிருந்து தமிழர்கள் கற்க வேண்டிய சில பண்புகளையும் இந்த நூலில் தொகுத்துரைத்த அடிகள், தமிழ்ச் சிந்தனைகள் உலகச் சிந்தனைகளோடு ஒத்தும் ஓங்கியும் உள்ள பாங்கினைத் 'திருவள்ளுவர்' பற்றிய சொற்பொழிவுகளிலே எடுத்துக் காட்டுகிறார்.

''கி. மு. ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகளில் பெரும் ஞானிகள் பல நாடுகளில் தோன்றினர். கிரேக்க நாட்டில் சாக்ரட்டீஸ்,' பிளாத்தோ, அரிஸ்டாட்டில் பாரசீக நாட்டில் சொரோவாஸ்டர், சீனத்தில் கன்பூஷியஸ், லாவோட்சே, இந்தியாவில் மகாவீரர், புத்தர், கோசாலர் போன்றவர்கள் தோன்றினர். உலகில் பெரும் சிந்தனை முன்னேற்றத்தையும் இயக்கங்களையும் இப்பெரியார் வளர்த்தனர்.''

மதச்சார்பு அற்றதும் மாண்பு உயர்ந்ததும் ஆன நமது சங்க இலக்கியம் மற்றும் குறள்வழிச் சிந்தனைகளுக்குப் பின்புலமாக அமைந்த வரலாற்றை இப்படி விளக்குகிறார் அடிகள். அதன் மூலம், எந்தத் தமிழ் அறிஞரும் அதுவரை சுட்டிக்காட்டாத ஓர் உலகப்பொதுச் சிந்தனை மரபை நமக்கு உணர்த்திய சிறப்பைப் பெறுகிறார் தனிநாயக அடிகள்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று நமது சங்கத் தமிழ் பேசுகிறது; ரோமானிய நாட்டு செனேக்கா என்பவர், சற்றேறக் குறைய அதே காலத்தில், 'எல்லா மக்களின் நாடுகளும் என் தாய்நாடு என்றும் என்நாடு எல்லா மக்களுக்கும் தாய்நாடு என்றும் நாம் கருதுதல் வேண்டும்' என்று சொல்லியுள்ளார். பொய் கூறாமை, கள்ளுண்ணாமை போன்றவற்றைப் பவுத்த மதம் வலியுறுத்துகிறது; இவைகளையே நமது குறளும் ஓங்கிச் சொல்லுகிறது.

நமது ஒழுக்க ஏடுகளில் காணப்படும் பல செய்திகள் எகிப்து நாட்டின் பழைய ஏடுகளிலும் சற்றேறக் குறைய அவ்வாறே காணப்படுகின்றன: ''சொல்வன்மை வாய்ந்தவன்தான் எந்த அவையிலும் பேச வல்லவன். எத்தொழிலிலும் பேசுந்தொழில் தான் மிகவும் கடுமையானது'' என்னும் (6000 ஆண்டுகளுக்கு முந்திய) எகிப்து நாட்டு அறவுரை 'பகையகத்துச் சாவார் எளியர், அரியர் அவையகத்து அஞ்சாதவர்' என்னும் குறளை நினைப்பிக்கின்றது அல்லவா?...

இந்த உண்மைகளை எடுத்துத் தந்து ஒப்பிட்டுக் காட்டியதன் மூலம், 'நாமும் ஒரு பாரிய சிந்தனை மரபுக்கு உரியவர்களே'' என்கிற ஒரு பெருமிதம் இந்நாள் தமிழர்க்கு உண்டாகிறது. அதே சமயம், நம்முடைய முன்னோர்கள் மட்டும்தான் பெரிய சிந்தனையாளர்கள் என்று கருதும் ஒடுக்கநெறிப் போக்குத் தலை சாய்ந்து, நம்மிடமே ஒரு நிதான நடுநிலை உணர்வு உண்டாகிறது. பல திசைகளிலும் சுயநலச் சிற்றறிவினோரால் அலைப்புண்டு தவிக்கும் இந்நாள் தமிழர்களுக்கு மிகமிகத் தேவையான செய்திகள் இவை.

1-9-80-ல் தமது 67-ஆம் வயதில் இயற்கை எய்திய தனிநாயக அடிகளாரின் வரலாறு தமிழர் ஒவ்வொருவருக்கும் புதிய நம்பிக்கையைத் தரும் வரலாறு; தமிழைப் பற்றிய நேரான மதிப்பீடுகள் தோன்றுவதற்கு அடிப்படையான தீரப்பணிகள் பலவற்றைப்புரிந்த ஒரு தமிழ் வீரரின் வரலாறு. 'தமிழர்கள் குண்டு சட்டிக்குள்ளேதான் குதிரை ஓட்டிக் கொண்டு இருப்பார்கள்' என்ற பழிச்சொல்லை மாற்றித் துடைத்து, 'தமிழனும் தனது பெருமையை உலக அரங்கில் உயர்த்தி வைக்க வல்லவனே' என்னும் புதிய வரலாறு படைத்த வரலாறு அது. ஆகையினால் தான், தனிநாயக அடிகளின் நினைவு மெல்லிய பூங்காற்றாக நமது நெஞ்சுக்கும் நினைவுக்கும் இதம் தருகிறது; அதிலேயிருந்து எழுந்து கமழும் ஒரு புத்தெழுச்சி என்னும் நறுமணத்தையும் நம் நெஞ்சிலே பாய்ச்சுகிறது.

**தெருவிளக்குகளைப் பராமரிக்கப் நகராட்சிகளுக்கு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஆணை!**

தமிழ்நாட்டில், உபரி நிதிவசதி உள்ள நகராட்சிகள் அனைத்தும் மின்சார ஊழியர்களைப் பணிக்கு நியமித்து, தெரு விளக்குகளைப் பராமரிக்க வேண்டும் என்று நகராட்சிகளுக்கு உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்.

தமிழ்நாட்டில் மொத்தம் 99 நகராட்சிகளும், 8 நகராட்சி நகரியங்களும் உள்ளன. இவற்றிற் 57 நகராட்சி அமைப்புக்களில் உபரி நிதி வசதியுள்ளது. இவைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

நகராட்சிகளில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் 'சோடியம் வாயு' விளக்குகளை அமைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# கிருஷ்ணாபுரம் சிற்பங்கள்





விரலாற்றுச் சிறப்புமிக்க நெல்லை மாவட்டம், சிற்பக் கலைகளுக்குப் பெயர் பெற்ற சிற்பங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் கிருஷ்ணாபுரம் கோவிலால் மேலும் பெருமை யடைகிறது.

கிருஷ்ணாபுரம் திருநெல்வேலி மாவட்டத் தில் ஓர் சிற்றூர். திருநெல்வேலியிலிருந்து 12 கிலோ மீட்டர் தூரத்தில், பாளையங்கோட்டை –திருச்செந்தூர் செல்லும் சாலையில் உள்ளது. மதுரையை ஆண்ட குமாரகிருட்டிணப்ப நாயக்க மன்னனின் ஆட்சிக்காலத்தில் (கி. பி. 1563-73) தோன்றியது. அரசவையின் ஓரங்கமாகப் பணி புரிந்த மயிலேரும் பெருமாள் முதலியார் என்ப வரால் கிருஷ்ணாபுரம் அமைக்கப்பட்டது என்ற உண்மை தெய்வச் சிலையார் பாடிய விறலி விடு தூதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெரியாரே திருக்கோயில் திருமதில், கோபுரம் முதலியவை அமைத்தனர். அரியநாயக முதலியாரின் மருக ரான தெய்வச்சிலை முதலியார் என்பவர் கோயில் முன்பாக நற்பணிகள் தெப்பம், புதுத்தேர் இவை யாவும் செய்தார் எனக் கல்வெட்டுகள் பகர் கின்றன.

தூர்ந்துபோன கிணறுகளும், கோவிலைச் சார்ந்த இடிந்துபோன வீடுகளின் அஸ்திவாரங் களும் இக்கிராமம் முன்காலத்தில் மிகப் பெருமை யுடன் விளங்கி வந்ததற்குச் சான்றுகள் பகர் கின்றன.



இப்பெரிய கோவிலைச் சுற்றி ‘‘ஓம்” என்ற பிரணவ மந்திரத்தின் வடிவில் பெரிய கற்களால் ஆன மதில் சுவர் கட்டப்பட்டிருந்தது. ஒரு பெரிய கோபுரமும் கட்டப்பட்டிருந்தது.

இக்கோயிலைச் சிறப்பிப்பது இங்கு அமைக் கப்பட்டுள்ள சிற்பக் கலைகளாகும். உலகில் எங்கும் காணமுடியாத எழில் சிற்பங்களை இங்கு காணலாம். கருங்கல்லினால் செதுக்கப்பட்டுள்ள சிலைகள், இவை சிற்பங்களா அல்லது உயிரோ வியங்களா என்ற ஐயப்பாட்டை எழுப்பத் தக்கவை. இங்குள்ள சிலைகளாவன: நாடோடி நடன மங்கை, குறத்தி ராஜகுமாரனைத் தூக்கிச் செல்லல், அர்ச்சுனன், கர்ணன், வீரன் ராஜ குமாரியைத் தூக்கிச் செல்லல், அப்ஸரஸ் நடனம், வீரபத்திரர், மன்மதன், பீமன், புருஷமிருகம், தருமர், யானையும் பசுவும், துறவியும் மங்கையும், ரதி, ஏவலர் முதலிய சிலைகள் பிரமிக்கத் தக்கவை; விலை மதிப்பற்றவை.

வெளி நாட்டவரும், சிற்பக்கலை வல்லுநர் களும் கண்டு வியக்கும், இக்கோவிலின் திருப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



கே. எம். ராஜு
மாவட்ட ஆட்சித் தலைவரின
நேர்முக உதவியாளர்,
செய்தி-மக்கள் தொடர்பு)
திருநெல்வேலி மாவட்டம்.




# பெரும்பள்ளம் ஓடை குடிசை மாற்றுத் திட்டம்

பெரியார் மாவட்டம் பெரும்பள்ள ஓடைக் குடிசை மாற்றுத் திட்டத்திற்கான அடிக்கல்லினை வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு.ஈ. எஸ். வெங்கடேசன் எம். எல். சி. அவர்கள் தலைமையில் 22-10-1980 அன்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் நாட்டினார்.

''இத்திட்டத்தின் கீழ், 400 குடிசைவாழ் மக்கள் பயன் பெறுவர். நான்கு அடுக்கு மாளிகைகளாக, மொத்தம் '400 குடியிருப்புகள் ரூ. 12.23 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

"இவ்வீடுகளில் குடியிருப்போர் மாதம் ரூ. 30 முதல் ரூ. 45 வரை வாடகையாக 25 வருடங்கள் கட்டி வந்தால், அவ்வீடுகள் அவர்களுக்கோ அல்லது அவர்கள் வாரிசுதாரர்களுக்கோ சொந்தமாக்கப்படும்'' எனவீட்டு வசதி வாரியத் தலைமைப் பொறியாளர் திரு வி. எல். இராமகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்குத் தலைமை வகித்த வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு ஈ. எஸ். வெங்கடேசன், எம். எல். சி. அவர்கள் ''இந்தியாவிலேயே, ஹட்கோ நிறுவனத்தின் மூலம் உதவி பெற்று திட்டம் தீட்டிச் செயல்படுவதில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் முதலிடம் வகிக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில் 'சாதாரணமாக ஈரோட்டுப் பகுதியில் வசிப்போர் குறைந்தது மாதம் ஒன்றிற்கு ரூ. 35 வரை சிறிய வீட்டிற்கு வாடகையாகக் கொடுக்கின்றார்கள். ஆனால் அது எப்போதும் அவர்களுக்குச் சொந்தமாகப் போவதில்லை. வீட்டு வசதி வாரியத்தால் கட்டப் போகிற மாடி வீடுகளுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 30 முதல் ரூ. 40 வரை கட்டிவந்தால் 25 ஆண்டுகள் கழித்து, அவர்களுக்கோ அல்லது அவர்கள் வாரிசுதாரர்களுக்கோ அவ்வீடுகள் சொந்தமாக்கப்படும் என்றும், இதுபோன்ற வீடுகள் இன்னும் குறைந்தது 2,000 வீடுகள் ஈரோட்டில் கட்ட வேண்டுமென்றும் வீட்டுவசதி வாரியத் தலைவரைக் கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவில் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் வி. இலட்சுமிரதன் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ''ஈரோட்டில் குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கான நிலங்களை கையகப்படுத்துவதற்கென்றே தனி அலுவலகம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், ஈரோடு வீட்டுவசதிப் பிரிவில் அமைக்கப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது'' என்பதைத் தெரிவித்தார்.

மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களும், கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.



# பசும்பொன்னார் பிறந்தநாள் விழா!

தமிழகத்தில் புகழ் ஒளி வீசித் திகழ்ந்த பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் அவர்களின் 72வது பிறந்த நாள் விழாவைத் தமிழக அரசு 30.10.80ல் கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. ராசாராம் அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்றார்கள்.

விழாவுக்கு வந்திருந்த தமிழ்ப் பெருமக்களைச் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எம்.எஸ். கோபால் அவர்கள் வரவேற்றார். தமது வரவேற்புரையில் அவர் குறிப்பிட்டார்:

''பசும்பொன் எனும் ஊரைச் சேர்ந்த தேவர் அவர்கள், உள்ளத்தாலும் உடலாலும் பசும் பொன்னாகத் திகழ்ந்தவர்; நாட்டுப் பற்றும்-தமிழ்ப் பற்றும் கொண்டு தமிழகத்திற்குச் சேவை செய்த தேச பக்தர்: சமூகப் பணியைத் தமது முழுப் பணியாகக் கொண்டு நாளெல்லாம் உழைத்து வந்த பெரியார். அத்தகைய பெரியார்களின் வாழ்க்கை நெறி முறைகளை வருங்காலச் சந்ததியினர் அறிந்து, பின்பற்ற வேண்டும் என்ற முறையில் - நோக்கத்தில் இத்தகைய விழாக்களைத் தமிழக அரசு நடத்தி வருகிறது''.

**மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்**

விழாவுக்குத் தலைமை வகித்த

நிகழ்ச்சித் தொகுப்பு
தமிழ்ப்பித்தன்

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. ராசாராம் அவர்கள், முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருஉருவப் படத்தைத் திறந்து வைத்து தமது உரையை ஆற்றினார்; தலைமை உரையில் அவர் தெரிவித்ததாவது:—

''சமூக மேம் பாட்டுக்கு உழைத்த தலைவர்களைப் போற்றி விழா எடுக்கும் பணி இந்தியாவில் தமிழ்நாடு தவிர வேறு மாநிலத்தில் நடைபெறுகிறதா என்பது ஐயப்பாட்டுக்குரிய செய்தியாகத்தான் இருக்கிறது.

''முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் 32 கிராமங்களுக்குச் சொந்தக்காரராக விளங்கிய போதிலும், - பெரும் நிலப்பிரபுவாகத் திகழ்ந்த போதிலும்- அவர் எளியவராக வாழ்ந்தவர். சமய பக்தராக, சிவப்பழமாகக் காட்சியளித்தார்.

''கட்டுப்பாடான சமுதாயத்தை-இயக்கத்தை-குழுவை வளர்த்தார்; மனத்தில் பட்டதை உள்ளம் திறந்து சொல்லிய தலைவர் அவர். அவர் காட்டிய அறவழியை - நெறிமுறையை-கட்டுப்பாட்டை நாமும் பின் பற்றி வாழவேண்டும் என்பதை இந்த விழாவில் ஒரு சங்கற்பமாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்''

**டாக்டர் இராசகோபால்**

அடுத்துப்பேசிய பசும்பொன் அறக்கட்டளையைச் சேர்ந்த டாக்டர் ராஜகோபால், தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், அரசியல் தலைவராக தேசியத் தலைவராக - சன்மார்க்கத் தலைவராக - ஆன்மிகத் தலைவராக- சமத்துவத்துக்குப் பாடுபட்ட தலைவராக விளங்கினார்''.

**இராசேசுவரி நடராசன்**

பின்னர் பேசிய திருமதி ராசேசுவரி நடராஜன் குறிப்பிட்டார்:

''தேசிய வாதியாகத் தமது வாழ்க்கையை ஆரம்பித்த தேவர்



அவர்கள் மகாத்மா காந்தியடிகளின் விடுதலை வேள்வியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். மனிதர்களில் உயர்ந்தவராக - உள்ளத்தில் ஒளி பொருந்தியவராக வாழ்ந்தார்.

பசும்பொன் தேவர் அவர்களைக் குறித்துச் சரியான வாழ்க்கை வரலாற்று நூல் கிடையாது; அதை உருவாக்குவது நமது கடமையாகும்''.

**ப. இராமன்**

அடுத்துப் பேசிய பேராசிரியர் திரு ப. ராமன் குறிப்பிட்டார்;



''எல்லா மக்களும ஒன்று என்று கருதியவர் தேவர். சாதி குலம், பிறப்பு என்னும் நிலைகளை எல்லாம் கடந்த தேவர் அவர்கள் அன்பின் வடிவம் ஆவார்; சமநீதியுள்ள சமுதாயத்தைக் காண்பதற்கே துடித்தவர் அவர்; அச்சமில்லாத வர்; வீரத்தின்நிலைக்களனாய் வாழ்ந்தவர்''.

**எஸ். பி. மகாதேவன்**

அடுத்துப் பேசிய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் திரு எஸ்.பி. மகாதேவன் குறிப்பிட்டார்:

''இந்தியாவின் மற்ற மாநிலத்தைச் சேர்ந்த தலைவர்களை எல்லாம் நாம் நன்கு தெரிந்து வைத்திருக்கிறோம்; இதுபோன்று நமது மாநிலத் தலைவர்களைக் குறித்து வட மாநிலத்தவர்கள் அறிந்து கொள்ளவில்லை. மற்ற மாநிலத்தவர்கள் நமது முத்துராமலிங்கத் தேவர் அவர்களைப் பற்றி அறிந்து கொள்ளும்படிச் செய்ய வேண்டும். அவரைப் பற்றிய செய்திகள் பாடப்புத்தகங்களில் இடம் பெறுதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.''

**சௌந்தரா கைலாசம்**

அடுத்து உரையாற்றிய திருமதி சௌந்தரம் கைலாசம் தெரிவித்ததாவது:

''பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரை அறியாதார் எவரும் தமிழ்நாட்டில் இருக்க முடியாது. அருளியலை ஒரு கண்ணாகவும் தேசத் தொண்டினை மற்றொரு கண்ணாகவும் எண்ணி வந்தவர் அவர். ஆன்மீகத்தை உயிராகவும் அரசியலை உடலாகவும் எண்ணி அவர் செயல்பட்டார். தூக்கத்தை அரசியல் மேடையிலிருந்தும், துக்கத்தை அருளியலிலிருந்தும் களைந்து எறிந்தவர். அவரது பேச்சில் அழகு இருந்தது; ஆழம் இருந்தது; பொலிவு இருந்தது; பொருள் இருந்தது; வீரம் இருந்தது; விவேகம் இருந்தது.''

**அ. ச. ஞானசம்பந்தம்**

அடுத்து உரையாற்றிய பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் தெரிவித்தார்:

"மணிவாசகனாரின் திருவாசகத்தை ஓதி உணர்ந்தவர் தேவர்; அவர் யோக வாழ்வை-ஆன்மிக வாழ்வை நடத்தி வந்தார்;பரம பண்டிதர்கள் கூறாத கருத்தை எல்லாம் அவர் சொன்னார்; அவர் எதையும் அச்சமின்றித் தெரிவித்தார். மன அடக்கம் பெற்றுவிட்டால் வாயால் எது வேண்டுமென்றாலும் பேசலாம் என்பதற்கு அவர் சான்றாகத் திகழ்ந்தார்.''

**டி. செங்கல்வராயன்**

அடுத்து, உரையாற்றிய திரு டி. செங்கல்வராயன் குறிப்பிட்டதாவது:

"அரசியலில் சமயக் கோட்பாடை இணைத்து - சமயஞானத்தைப் பொருத்தி உரையாற்றியவர் தேவர். ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்று முழங்கி வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முழக்கமிட்டார்.

"அரசியலில் உயர்வு கொடுத்தார்; சமயத்துறையில் மதிப்பளித்தார். சிறந்த அரசியல் பண்புகளை வளர்த்துக் காட்டினார். அரசியல் நாகரிகத்தை நமக்குக் கற்றுக் கொடுத்தார். சிறந்த முழு மனிதராக-சிறந்த பக்தராக இருந்த ஒரே உருவமாக- ஒரே காவியமாக அவர் விளங்கினார்.''

**மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்**

பின்னர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், விழா நிறைவு உரையை ஆற்றினார்; அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:

''இந்த விழா தனி மனிதருக்காக எழுப்பப்பட்ட விழா அல்ல; ஒரு தத்துவத்தின் வடிவத்திற்கு ஆத்ம பலத்தின் இருப்பிடத்திற்கு திமையை எதிர்க்கச் சலியாமல் - சோர்வடையாமல் - தடை பல உண்டென்றாலும் தடந்தோள்கள் எமக்கு உண்டு என்ற வகையில் போராடிய வீரருக்கு-புதிய சமுதாயத்தைக் காண நடத்திய சோதனைகளில் உறுதியாக இருந்த ஒரு சக்திக்கு எடுக்கும் விழாவாகும்!

'உள்ளத்தில்-வன்மை-திண்மை அஞ்சாமை கொண்டவர் அய்யா பசும்பொன் தேவர் அவர்கள். அவர் சிறந்த பேச்சாளர்; பேச வேண்டிய விஷயத்தைப் பேச வேண்டிய நேரத்தில் பேசவேண்டியவர்களின் முன்னிலையில் பேசியிருக்கிறார் ; அத்தகைய பேராற்றல் அவருக்கு உண்டு.

''காலம் அழிந்தாலும், தமிழர்கள் இருக்கும் வரை - தமிழ்நாடு இருக்கும் வரை - ஜனநாயகம் இருக்கும்வரை - தேவரின் திருப்பெயர் மறையாத வகையில் -சட்டப் பேரவையில் அவரது திருவுருவப் படத்தைத் திறந்து வைத்த பெருமை மாண்புமிகு தமிழக முதல்வருக்கு உண்டு! எதற்கும் அஞ்சாத அரசியல் வாதி அவர்; சுதந்திரப்போரில் அவர் செய்துள்ள தியாகம் அளப்பரியது.

"தமிழ் மரபு - ஜனநாயகப் பண்பு - ஆகியவற்றைக் காத்தவர் அவர்; எதையும் அளந்து சொல்லிய மேதை தேவர். அவர் தர்மத்தின் சின்னமாக - சத்தியத்தின் சின்னமாக விளங்கினார். அளப்பரிய அன்புக்குரிய அருளாளராக அவர் காட்சி தந்தார்.''

பின்னர் செய்தி - மக்கள் தொடர்புத்துறையின் உதவி இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் நன்றி கூற, விழா இனிதுநிறைவேறியது:

மொத்தத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்தநாள் விழா அனைவர் இதயத்திலும் நீங்காதுஇடம் பெற்ற பாங்கான திருவிழாவாக அமைந்துவிட்டது என்று சொன்னால் அது, உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.



# கூட்டுறவே
# உன்னை வாழ்த்திப் பாடுகின்றேன்!



சிந்தையில் மூடிய வல்லிருள் ஓடிடச்
செங்கதி ராயுதித்தாய்! — ஒரு
பந்தய மாய்ப்பல விந்தைகள் கூடிடப்
பாய்ந்துமே நீருதித்தாய்!
வெந்த மனத்தவர் செந்தணல் மாற்றிட
பொன்மழை தூவுகிறாய்! — எம்
முந்தையர் வேர்வையிற் சிந்திய முத்தெழில்
மொய்த்திட மேவுகிறாய்!

நலிந்தவர் இதய நரம்பு சிலிர்த்திட
நாட்டியம் காட்டுகின்றாய்! — தினம்
பொலிந்தன நன்மைகள்; பொசுங்கின புன்மைகள்
புன்னகை தீட்டுகின்றாய்!
மலிந்தன தேவைகள்; மயங்கின தீமைகள்
மாண்புகள் நாட்டுகின்றாய்! — பெரும்
பலன்தரு செந்தமிழ்ச் சோலையில் ஆடிடப்
பாடலை மீட்டுகின்றாய்!

அருவியில் ஆடிய சுகங்களை உன்றன்
அணைப்பினில் அளிக்கின்றாய்! — உன்
கருவிழி மீனினம் காட்டிடும் கற்பனை
கலந்துடல் குளிக்கின்றாய்!
கருகிய உழவரின் பெருகிய விழிகளில்
கனிவினைத் தெளிக்கின்றாய்! — வளம்
பெருகிட உதவிகள் பெருகிட விம்மிப்
பெருமையில் களிக்கின்றாய்!

சிறுதொழில் ஆயிரம் புரிந்திட ஏழையர்
சிரித்திட நடக்கின்றாய்! — பலன்
பெறப்பலர் உழைத்து நிறைந்திட மலராய்ப்
பாதையில் கிடக்கின்றாய்!
சிறுமதி யாளரின் கெடுமதி தூளாய்ச்
சிதறிட வெடிக்கின்றாய்! — பல
சிறுதுளி இணைந்து பெருங்கட லாகிச்
சிறந்திடத் துடிக்கின்றாய்!

கூடியே வாழ்ந்திடக் கோடி நன்மைகள்
குவித்திட நாடுகின்றாய்! — மனம்
வாடியே வதங்கிடும் வகையினை மாற்றிடும்
வழியினைத் தேடுகின்றாய்!
ஆடிடும் காவிரி பாடிடும் தேனிசை
அள்ளிட ஓடுகின்றாய்! — நீ
தேடிய வளங்கள் தீந்தமிழ் போன்றே
வாழ்ந்திடப் பாடுகின்றேன்!







கொங்குநாடன்



# ஏமாற்றாதே! ஏமாறாதே!!

மாமூலன்

காட்சி—1

(ஊருக்குப் பெரியமனிதரும் செல்வந்தருமான காளமேகத்தின் வீடு. அவரைப் பார்க்க செந்தில் வருகிறான்.)

காளமேகம்:

வாங்க.. வாங்க. உட்காருங்க! உங்களைப் பார்க்கணும்தான் நினைச்சேன்...

செந்தில்:

ஊரிலே இல்லே .. என்னை விசாரிச்சதாகச் சொன்னாங்க அதுதான் நானே வந்தேன்.

காளமேகம்:

மூன்று நாளா தொடர்ந்து ஊரிலே இல்லேயே.. .ஏதாவது வேலையா?

செந்தில்:

நம்ப ஊரிலே கூட்டுறவு முறையிலே பாய்முடையும் சங்கம் முதல் கூட்டுறவு பால் விற்பனை சங்கம் வரை இருக்கு. புதிதாக கூட்டுறவு முறையிலே ஒரு பட்டு நெசவு சங்கம் ஏற்படுத்தனும்னு அதற்கு ஏற்பாடு செய்ய...

காளமேகம்:

எஞ்சினியருக்குப் படிச்சிட்டு நல்ல வேலைக்குப் போகாமே, கிராமத்திலேயே விவசாயக் கருவிகள் செய்யவும் பழுது பார்க்கவும் சிறிய தொழிற்கூடம் அமைச்சுக்கிட்டு வேலை செய்றீங்களே! அதே போதாதா... இந்த வேலை எல்லாம் ஏங்க உங்களுக்கு?

செந்தில்:

நம்ப கிராமம் - ஒரு நடுத்தரமான ஊர். இங்கே நாலு தொழில் வளர்ந்தால் நல்லது தானே?

காளமேகம்:

இந்தக் காலத்துப் பிள்ளைங்க நாங்க சொல்றதை எங்கே புரிஞ்சுக்கப் போறீங்க, நம்மைப் போல நாலு பேரும் வளர்ந்துட்டால் அப்புறம் நமக்கு எங்கே பெருமை! உங்க ப்ரண்டு..அதான் என் அருமைப் புதல்வன் வளவன் இருக்கானே அவனும் இப்படிதான்..... நீங்கதான் அவனுக்குப் புத்தி சொல்லணும்..

செந்தில்:

வளவனுக்கு நான்போய் அறிவுரை சொல்றதா?

காளமேகம்:

அவன் பெரிய மேதை. அறிவுரை சொல்லக் கூடாதா? அவன் யாரைக் கட்டிக்கணும்னு சொல்றான் தெரியுமோ?

செந்தில்:

வளவன் தான் விரும்பும் பெண்ணைத் தான் கலியாணம் செய்துக்கிறேன் என்பான்.

காளமேகம்:

அங்கே தானே இருக்கு சிக்கல் எல்லாம்! அவன் விரும்பும்பெண் யார் தெரியுமா? பெண் எடுக்கற இடம்ன்னா ஒரு தகுதிவேண்டாம்? என்னிடம் ரூ. 2000கடன் வாங்கிட்டு நாலு வருஷமா ஏமாத்திக்கொண்டு வரானே... அதுதான்... அந்த ஞானவேலு அவன் பெண்ணை...

செந்தில்:

ஞானவேலு பெண் ராணிக்கு என்ன குறைச்சல்? படிப்பில், அழகில் எதில் குறைச்சல்?

கார்மேகம்:

பணத்தில் குறைச்சல்!

செந்தில்:

பணத்தை நாளைக்கு வளவனும் ராணியும் சேர்ந்து சம்பாதித்து விடமாட்டாங்களா?

கார்மேகம்:

நாளைக்குக் கிடைக்கப்போற பலாக்காயை விட இன்று களாக காய் கிடைத்தால் போதும். நீங்க தான் சொல்லணும்... வளவன் உங்கள் நண்பன் என்பதைவிட, இந்த வீட்டுக்கு நாளைக்கு நீங்க மாப்பிள்ளை ஆகப் போறீங்க... உங்கள் எதிர்கால மைத்துனன் புளியங்கொம்பைப் பிடிக்காமல் ஒதிய மரக்கிளையைப் பிடிப்பேன் என்று பிடிவாதம் பிடிப்பது நியாயமா? நல்லா யோசிச்சுப் பாருங்க!

செந்தில்:

ஞானவேலு சாரை நீங்க ஏன் குறைவா நினைக்கணும்?

கார்மேகம்:

வாங்கின கடனைக் கொடுக்க வக்கில்லாத ஆளை யாரு உயர்வா நினைப்பாங்க... இவனோட சம்பந்தம் செஞ்சுக்கிட்டா ஊரிலே எனக்கு இப்ப இருக்கிற பேரு என்னாவது?

செந்தில்:

உண்மைதான். ஊர்முழுவதும் உங்கள் புகழ்தானே! எங்கும் உங்களைப் பற்றியே பேச்சு.

கார்மேகம்:

இது உங்களுக்குப் புரியுது. ஆனால் வளவன் நியாயம் பேசுறான். நான் செய்றதும் பேசுறதும் அவனுக்கு அவமானமாக இருக்குதாம். ஆனால் ஊர் ஜனங்க நான் சொல்றதை எப்படி கேட்கிறாங்க பாத்திங்க இல்லே!

செந்தில்:

உங்கள் கொள்கையும் தத்துவமும் அப்படி மக்களை ஈர்க்கிறது! ''அரசிடம் வாங்கிய கடனைக் கட்டாதே! வரியும் கொடுக்காதே என்பது சாதாரண கொள்கையா? உலகிலேயே மிக உயர்ந்த தத்துவமாயிற்றே!

கார்மேகம்:

என்ன மாப்பிள்ளை கிண்டலா செய்றீங்க?



**செந்தில்:**

வேற? கிண்டல் செய்யாமே, சமுதாயத்தைக் கெடுத்துக் குலைக்கும் உங்கள் புண்ட செயலைக் கொண்டாடவா முடியும்?

**கார்மேகம்:**

உற்பத்தி செய்யும் விவசாயியின் துன்பத்தைத் துடைக்கச் சொல்கின்றோம். கஷ்டப்படுபவன் கண்ணீரைத் துடைக்கச் சொல்கிறோம். அதை மறுப்பதால்தான் இப்படி!

**செந்தில்:**

அரசாங்கத்திலே வாங்கிய கடனைக் கட்ட மறுப்பது நீங்க! வசதி உள்ளவங்க நீங்க! பளபளப்புக் கார் உண்டு; பங்களா உண்டு; படாடோபமான வாழ்க்கை உண்டு; பொறுப்பு மட்டும் கிடையாது. அதை மறந்து விட்டு மற்றவர்களுக்கு நீலிக்கண்ணீர் சிந்துவது....

**கார்மேகம்:**

வளவன் மாதிரியே பேசுறீங்க.

**செந்தில்:**

உண்மை யார் பேசினாலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்..

**கார்மேகம்:**

உங்களை வளவனுக்கு அறிவுரை சொல்லச் சொன்னால்... எனக்கே புத்தி சொல்றீங்க... காலம் கெட்டுப் போச்சு..

**செந்தில்:**

உங்களைப் போல வசதி உள்ளவங்க கூட வாங்கின கூட்டுறவுக் கடன்களைக் கொடுக்க மாட்டேன்னு சொல்வதாலும் அதற்குக் கூட நியாயம் கற்பித்துப் பேசுவதாலும் காலம் ரொம்பக் கெட்டுப் போச்சு - உங்கள் பேச்சு சாத்தான் வேதம் ஓதுகிறது போல இருக்கு...

**கார்மேகம்:**

சரிசரி, அந்த விவகாரத்தை விட்டு விடுவோம்.. வேறே விஷயத்திற்குப் போவோம்.

**செந்தில்:**

உங்களிடம் கடன் வாங்கிய பணத்தைத் தரவில்லை என்பதால் ஞானவேலுவின் மகளை உங்கள் மருமகளாக்கிக் கொள்ள மறுக்கிறீங்க.. அவருக்கு உண்மையாகவே கொடுக்க முடியலை. முடிந்தால் கொடுத்திருப்பார். கூட்டுறவுக் கடனை ஏராளமா கைநீட்டி வாங்கிவிட்டு அதைக் கொடுக்க மறுக்கும் உங்களைப் போல வசதி படைத்தவரை என் மாமனாராக ஏற்றுக்கொள்ளுவது மட்டும் எப்படி என்னால் முடியும்?

**காளமேகம்:**

மாப்பிள்ளையா இப்படிப் பேசுறீங்க..? எம் பொண்ணு வாணி இந்தவார்த்தையைக் கேட்டால் துடித்துப்போய் விடுவாள். அடுத்த மாதத்திலேயே திருமணத்தை வச்சுக்கலாம்னு நினைச்சுக்கிட்டிருந்தேன்.

**செந்தில்:**

திருமணம் தானே! யோசித்துச் சொல்றேன்.

**கார்மேகம்:**

இதிலே யோசனை செய்ய என்ன இருக்கு?

**செந்தில்:**

நீங்கள் ராணியை வளவனுக்கு திருமணம் செய்ய யோசிக்கலியா? கைநீட்டி வாங்கிய கடனைக் கட்ட மறுக்கிற உங்களைப் போன்ற பெரிய மனுஷர் ஒருவரைச் சட்டத்துக்கு உட்பட்டு நியாயத்தோடு வாழ நினைக்கிற என்போன்றவன், மாமனாராக ஏற்க யோசனை செய்ய வேண்டாமா? வர்றேன்.. (போகிறான்)

**கார்மேகம்:**

(தனக்குள் கோபத்துடன்) அப்பா செந்தில்.. நான் இருக்கிறதை விட்டுவிட்டு பறக்கிறதைப் பிடிக்கப் போகிற புத்திசாலி இல்லை. பணம் பாதாள மட்டும் பாயும்! போகப் போக புரிஞ்சுக்கத்தான் போறீங்க.

**காட்சி—2**

**(வளவனும் செந்திலும் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்.)**

**வளவன்:**

செந்தில் ..நீ அவசரப்பட்டு முடிவு செய்திட்டே! எங்க அப்பாவுக்கு இன்னும் கொஞ்சமாவது புத்திபுகட்டியிருக்கணும்.

**செந்தில்:**

நான் என்ன செஞ்சேன்?

**வளவன்:**

என் தங்கை வாணியைத் திரு மணம் செய்து கொள்கின்றேன்னு ஏன் ஒப்புக் கொண்டே.....

**செந்தில்:**

உனக்காக! நீயும் ராணியும் திருமணம் செய்து கொள்ள வேணும் என்பதற்காக...

**வளவன்:**

அடே அப்பா என்ன தியாகம்! வாணி மீதுள்ள உன் ஆசை இவ் வளவு அவசரப்பட வச்சிடுச்சு.. உண்மையை ஒத்துக்கொள். அதை விட்டுட்டு.. செந்தில்..... ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும் என்பாங்க... நீயோ உன் திருமணத்தை நடத்திட ஒப்புக் கொண்டுட்டு என் திருமணத்துக் காக என்கிறியே.....

**செந்தில்:**

உங்க வீட்டு மாப்பிள்ளையா கப் போகிறேனே.. அதனாலே உங்க அப்பா மாதிரியே யோசித் தேன்.

**வளவன்:**

நல்லவேளை, எங்க அப்பா மாதிரி மாறலியே.....

**செந்தில்:**


அதனாலே ஒரு திட்டம்போட் டோம் நானும் வாணியும்... .

**வளவன்:**

உடனே திருமணம் செய்து கொள்வதாக ... செந்தில்..எங்க அப்பா என்ன சொல்லிக்கொண் டிருக்கிறார் தெரியுமா? நான் நினைத்தது நடந்தது. பணம் பாதாளம் மட்டும் பாயும் என் பதை நிரூபிச்சுட்டேன். செந் தில் பணத்துக்கு மயங்கிட்டான் பணத்தாலேயே அவனை அடிச் சுட்டேன் என்று பேசிகிட்டு இருக்கிறார். அவர் மாதிரி பணம் கறக்கிற இடமா பாருடா என்று எனக்கு வேற அட்வைஸ் பண்றார்... நீ என்ன சொல் றியோ.... இப்ப எங்க அப்பா வுக்குத்தான் வெற்றி.

**செந்தில்:**

அந்த வெற்றி யாருக்கு என் பது நாளைக்கு காலையில் வா.. அப்ப தெரியும்.. (போகிறான்)



## காட்சி—3

**(காளமேகம் தனது நண்பர் முருக வேளிடம் பேசிக்கொண்டிருக் கிறார்.)**

**காளமேகம்:**

அப்பவே நினைச்சேன்..அந்த ஞானவேலு வட்டியும் முதலுமா பணத்தைக் கொண்டு வந்து கொடுக்கும் பொழுதே! உம்..... நமக்கு வரவேண்டிய பணம் தானேன்னு நினைச்சேன். உண் மையிலேயே அது என் பணமா இருக்கு:.....

**முருகவேள்:**

அதுதான் போகட்டும். நீங்க வாங்கின விவசாயக் கடன்களை எல்லாம் வேறே கட்டிட்டாங்க ளாமே?

**காளமேகம்:**

என் மகனே போய் கட்டியிருக் கிறான். எனக்கு எதிரியே என் மகனும் மகளும் தான்! ....

**முருகவேள்:**

ஊரிலே உள்ளவர்களை எல் லாம் வாங்கின கடனை கொடுக் காதே! வட்டி கட்டாதே என்று சொல்லிக்கொண்டு வந்தீங்க. இப்ப நீங்களே ஏமாந்திட்டீங்க..

**காளமேகம்:**

நல்ல சொத்துள்ள பைய னாச்சேன்னு, செந்திலுக்கு 25,000 ரூபாயை அன்பளிப்புத் தொகையாகக் கொடுத்து ஆளை மடக்கிட நினைச்சேன். என் பெண் வாணிதான் எனக்கு இந்த அபூர்வ யோசனையைச் சொன்னாள். இப்பப் பார்த்தா..

**முருகவேள்:**

எல்லாரும் சேர்ந்தே இப்படி ஒருதிட்டம் போட்டிருப்பாங் கன்னு தெரியுது.

**காளமேகம்:**

நான் இனிமேல் எப்படி வெளியே தலைகாட்டுவேன்?

**முருகவேள்:**

வாங்கின கூட்டுறவுக் கடனைக் கொடுக்காமே இருந்தபோது கௌரமாக நடமாடினீங்க.... இப்ப.... என்னடான்னா.... எப் படி வெளியே தலை காட்டு வேன்னு சொல்லுறீங்க ......

**காளமேகம்:**

நீரும் கேலி செய்றீரா.... இப்ப எனக்கு என்ன செய்ற துண்ணே புரியலே..........

**முருகவேள்:**

உங்கள் பையனும் வருங்கால மாப்பிள்ளையும் அவர்களே உங்க கடனை எல்லாம் கட்டிவிட்டு அதுவும் நீங்க கொடுத்த பணத்தி லிருந்தே கட்டிவிட்டு, நீங்க கூட் டுறவு விவசாயக் கடன்களை எல்லாம் கட்டி விட்டதா நோட் டீஸ் வேற போட்டு ஊரெல்லாம் கொடுத்திருக்காங்க!

**காளமேகம்:**

எப்படியோ மானம் காற்றிலே பறக்குது. ஊரிலே அப்படி....வீட் டுக்குள்ளே எப்படி தெரியுமா? என் பெண் வாணி செந்திலை யும், என்மகன் வளவன் ராணி யையும் பதிவுத் திருமணம் செய்து கொள்ளப் போறாங்களாம். எளிய முறையில்.. உம்... ஊர் சிரிக்காதோ?

**முருகவேள்:**

சிறுசுகள்.. இந்தக் காலத்துப் பிள்ளைகள்...... அப்படித்தான் இருக்கும். விட்டுத் தள்ளுங்க.

**காளமேகம்:**

ஓய் முருகவேள்! நீர் எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றுகிறீர்! உமக்கு இப்படி ஒரு பெண்ணும் பையனும் இருந்தால் தெரியும்!

**முருகவேள்:**

என்ன இப்ப குடிமூழ்கிபோச்சு.. வாங்கின கடனை கட்டிட்டிங்க. அரசாங்கத்தை ஏமாற்ற நினைச் சீங்க. இப்ப நீங்களே ஏமாந்துட் டீங்க.. தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும். உங்கள் பெண்ணுக்கும் பையனுக் கும்தான் வெற்றி! அதை நினைச்சு சந்தோஷப்படுங்க.

**கார்மேகம்:**


அதைத் தவிர வேறு வழி! நாமொன்று நினைக்க தெய்வ மொன்று நினைக்கும் என்பாங்க. என்வரையிலே அது நூற்றுக்கு நூறு உண்மையாயிடுச்சியா ... அப்பவே நானே கடனை எல் லாம் திருப்பிக் கட்டியிருந்தா... எவ்வளவோ கௌரவமாயிருந்தி ருக்கும். இப்ப சின்னப் பசங்க எனக்குத் தண்ணி காட்டிட் டாங்க!

— காட்சி முடிகிறது

# சுற்றுலாவுக்கு ஒரு குருசடித்தீவு

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபம் முகாமிலிருந்து தொலைவிலும் சுற்றுப்புறமாக இராமேசுவரம் உள்பட மொத்தம் 17 தீவுகள் உள்ளன. இதில் இராமேசுவரம் நீங்கலாக 16 தீவுகள் பல்வேறு வகைகளில் சிறப்புற்றுள்ளன. இதில் ஒன்றுதான் குருசடித் தீவு.

இத்தீவு இராமேசுவரம் தீவை ஒட்டி 250 மீட்டர் தொலைவிலும் பாம்பனிலிருந்து 5½ கிமீட்டரிலும் அமைந்துள்ளது. இயற்கை வளம் கொண்ட இத்தீவின் பரப்பளவு 127 ஏக்கராகும்.



தொகுப்பு: நா. தில்லை கோவிந்தன்,
மக்கள் தொடர்பு உதவியாளர்,
(செய்தி-மக்கள் தொடர்பு)
இராமநாதபுரம் மாவட்டம்


பழங்காலத்தில் இங்கு சிறிய தூய சேவியர் ஆலயம் ஒன்று கட்டப்பட்டிருக்கின்றது. தற்சமயம் பழைமையான நிலையில் உள்ளது. கிருஸ்தவ மதத்துடன் உள்ள தொடர்பு காரணமாக குருசு என்றால் சிலுவை என்பதிலிருந்து மருவி குருசடித் தீவு என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது இத்தீவு. 1915-ஆம் ஆண்டில் அரசு இத்தீவை முத்து சிப்பிப் பண்ணை அமைக்க எடுத்துக் கொண்டுள்ளது. இத்தீவில் கடல் உயிரியல் கேந்திரம் ஒன்று இயங்கி பல ஆராய்ச்சிப் பணிகளைச் செய்து வந்துள்ளது.

1964, 1967-ஆம் ஆண்டுகளில் வீசிய புயல் காரணமாக பெரும் சேதம் ஏற்பட்டதால் இந்த ஆராய்ச்சி நிலையம் மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் இந்தியாவில் உள்ள பல மாநிலங்களிலிருந்தும் விலங்கியல் பயிலும் மாணவர்கள் இத்தீவிற்கு வந்து கடல்வாழ் பிராணிகள், தாவர வகைகள் குறித்து ஆய்வுப் பணிகளில் ஈடுபடுகின்றனர். இத்தீவினைச் சுற்றிலும் தேசிய கடற்பூங்கா ஒன்றை அமைக்கும் திட்டம் மத்திய அரசிடம் உள்ளது.

இத்தீவைச் சுற்றுலாத் தலமாக அமைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 1979-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாடு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் சென்று பார்வையிட்டுள்ளார். இவ்வாண்டு ஆகஸ்டுத் திங்கள் முகவை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு வே. மாதவன் நாயர் அவர்கள் மதுரை பத்திரிகையாளர்களுடன் இத்தீவிற்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

அரசின் ஆய்வில் உள்ள இச்சுற்றுலா மையம் அமைக்கும் திட்டம் நிறைவேறினால் முகவையின் புகழ் எங்கணும் பரவும் என்பதில் ஐயமில்லை!



# கிராம அங்காடித்திட்டம்

தமிழ் நாட்டிலுள்ள சுமார் 16,000 வருவாய் கிராமங்களில் வாழும் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்யும் முகத்தான் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு சில்லரை அங்காடி திறந்து பொது வினியோகத் திட்டத்தை அமல் நடத்துவதென்ற கொள்கை முடிவினை அரசு மேற்கொண்டது.

செங்கற்பட்டு, வடார்க்காடு, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, பெரியார், திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கிராம அங்காடிகள் திறக்கும் பொறுப்பினைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தஞ்சாவூர், தென்னார்க்காடு, தர்மபுரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் கிராம அங்காடிகளைத் திறக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரை 6660 புதிய கிராம அங்காடிகளைத் திறந்ததோடல்லாமல் ஏற்கெனவே கிராமப்புறங்களில் செயல்பட்டு வந்த 4441 நியாய விலைக் கடைகளும் அத்யாவசியப் பொருட்களை விற்கும் சில்லறை அங்காடிகளாக மாற்றப்பட்டன.

இந்த வகையில் 11,101 கிராம அங்காடிகள் கூட்டுறவுச் சங்கங்களாலும் 4049 கிராம அங்காடிகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்பட்டு வருகின்றன. 500 மக்கள் தொகையுள்ள கிராமங்களில் முழுநேர அங்காடிகளும் அதற்குக் குறைந்த மக்கள் தொகையுள்ள கிராமங்களில் பகுதி நேர அங்காடிகளும் செயல்பட்டு வருகின்றன.

இக் கிராம அங்காடிகள் அந்தந்த வருவாய் கிராமங்களின் விவகார எல்லையில் உள்ள கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. புதியதாகத் துவக்கப்பட்ட ஒவ்வொரு கிராம அங்காடிக்கும் தளவாட சாமான்கள் வாங்க ரூ. 1250 -அரசு மான்யமாக வழங்கியுள்ளது. இந்த மான்யத் தொகையினைக் கொண்டுகிராம அங்காடிகளுக்கு வேண்டிய தளவாடச் சாமான்கள் வாங்கப்பட்டுள்ளன.

இது மட்டுமின்றி சிப்பந்தி சாதல்வார் இனங்களுக்கென ஒவ்வொரு முழுநேர அங்காடிக்கு ஆணடொன்றிற்கு ரூ. 2400-ம் ஒவ்வொரு பகுதி நேர அங்காடிக்கு ரூ. ரூ. 1800-ம்அரசு மான்யமாக வழங்கி வருகின்றது. இந்த மான்யம் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும் எனத் தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு முழுநேர அங்காடியும் ஒரு முழுநேர விற்பனையாளரைக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இந்த முழுநேர அங்காடிகள் வாரத்தில் ஆறு நாட்களும் செயல்படுகின்றன. இரண்டு பகுதி நேர அங்காடிகள் ஒரு விற்பனையாளரைக் கொண்டு ஒரு நாள் விட்டு ஒரு நாள் செயல்பட்டு வருகின்றன. எல்லா கூட்டுறவு கிராம அங்காடிகளும் முற்பகல் 9.00 மணி முதல் 1.00 மணி வரையிலும் பிற்பகல் 3.00 மணி முதல் 7.00 மணி வரையிலும் செயல்பட்டு வருகின்றன.

கூட்டுறவுத் துறையில் உள்ள 11,101 கிராம அங்காடிகள் அந்தப் பகுதியில் உள்ள மாவட்ட கூட்டுறவு விநியோக மற்றும் விற்பனைச் சங்கம்-கூட்டுறவு மொத்தவிற்பனை பண்டகசாலை மற்றும் பிரதம கூட்டுறவு விவசாய சங்கங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்ட அளவிலான சங்கங்கள் முதன்மைச் சங்கங்கள் என அழைக்கப்படுகின்றன. இத் திட்டம் 35 முதன்மைச் சங்கங்களால் செயலாக்கப்பட்டு வருகின்றது. இம் முதன்மைச் சங்கங்கள் கிராம அங்காடிகளுக்குத் தேவையான எல்லாச் சரக்குகளையும் மொத்தமாகக் கொள்முதல் செய்து 128 விநியோக மையங்கள் மூலம் அந்தப் பகுதியில் செயல்படும் கிராம அங்காடிகளுக்குப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு விநியோக மையத்துடன் சுமார் 90 முதல் 100 கிராம அங்காடிகள் இணைக்கப்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கீழ்க்காணும் அத்தியாவசியப் பொருட்கள் கிராம அங்காடிகள் மூலம் விநியோகிக்கப்பட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட்கள்; சர்க்கரை; புளி; மிளகாய்; கொத்தமல்லி (தனியா); கடலெண்ணெய்.

மேலே கூறப்பட்ட பொருட்களைத் தவிர அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் தேவைக்கேற்ப கீழ்க்காணும் இதர 39 அத்யாவசியப் பொருட்களும் கூட்டுறவு கிராம அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மஞ்சள்; சீரகம்; கடுகு; வெந்தயம்; சோம்பு; மிளகு;பூண்டு; வெல்லம் (சதுரம்); வெல்லம்; (உருண்டை); வெல்லம்(கருப்பு) உப்பு; காபித்தூள்; தேயிலை; துவரம் பருப்பு; உளுத்தம்பருப்பு

கடலை; பயித்தம் பருப்பு; பயித்தம் பயிறு; மொச்சை; கடலைப் பருப்பு; நல்லெண்ணெய்; தேங்காயெண்ணெய்; மைசூர் சந்தன சோப்; சந்திரிகா சோப்; லைபாய் சோப்; சன்லைட் சோப்; அரசு பார் சோப்; ரின் சோப்; டெட் சோப்; பாண்ட்ஸ் பவுடர் (சிறியது); ஹார்லிக்ஸ்; எவரெடிசெட், அமிர்தாஞ்சனம்; அசோகா பிளேடு; தீப்பெட்டி; கடலைப் புண்ணாக்கு; பருத்திக்கொட்டை மண்ணெண்ணெய்; விக்ஸ்.

மேலே கூறப்பட்ட அத்யாவசியப் பொருட்கள் முதன்மை சங்கங்களால் ஒப்படைப்பு முறையின் கீழ் கிராம அங்காடிகளுக்கு வழங்கப்படுகின்றன. கிராம அங்காடிகளின் வாசலிலேயே முதன்மைச் சங்கங்கள் பொருட்களைக் கொண்டு வந்து விநியோகம் செய்கின்றன. இதற்கான வண்டிச் சத்தம் ஏதும் கிராம அங்காடிகள் கொடுக்க வேண்டியதில்லை. இதனால் கிராம அங்காடிகள் பொருட்களைக் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளிடமிருந்து பெற்று கிராமப்புற மக்களுக்குத் தரமான பொருட்களை நியாய விலையில் வழங்க ஏதுவாகிறது. மேலும் முதன்மைச் சங்கங்கள் உரிய பருவத்தில் பொருட்கள் உற்பத்தியாகும் இடங்களிலிருந்து அதிக அளவில் கொள்முதல் செய்வதால் கிராம அங்காடிகளில் விற்கப்படும் பொருட்கள் தரமுள்ளதாகவும் நியாயமான விலையில் கிடைக்கின்றன. மேலும் கிராம அங்காடிகளுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளுக்கு அரிசி, சீனி, மண்ணெண்ணெய், சர்க்கரை போன்ற குடிமைப் பொருட்களும் தட்டுப்பாடின்றி அந்தந்தக் கிராமங்களிலேயே மக்களுக்குக் கிடைக்க கிராம அங்காடிகள் சேவை செய்து வருகின்றன.

மத்திய அரசு நாடு முழுவதிலும் 2000க்கும் மேல் மக்கட்தொகையுள்ள கிராமங்களில் நியாய விலைக் கடைகள் திறக்க வேண்டுமென்று கோரியிருந்த போதிலும் தமிழ்நாடு அரசின் ஒரு கிராமம் ஒரு அங்காடி திட்டத்தின் கீழ், மக்கள் தொகை 100ல் இருந்து 500க்கும் குறைவாக உள்ள வருவாய் கிராமங்களில் பகுதிநேர அங்காடிகளும் 500-க்கு மேற்பட்ட மக்கட்தொகை உள்ள கிராமங்களில் முழுநேர அங்காடிகளும் செயல்பட்டு வருவதால் கிராமப்புறங்களில் வாழும் மக்கள் தங்கள் அத்யாவசியத் தேவைப் பொருட்களை அந்தந்தக் கிராமங்களிலேயே பெறுவதற்கு ஏதுவாக உள்ளது. பொது விநியோகத் திட்டத்தினை சீராகச் செயல்படுத்த



அரசின் நிதியுதவியில் துவக்கப்பட்ட கிராம அங்காடிகள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. நமது நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குப் பொது விநியோகத் திட்டம் கிராம அங்காடிகள் மூலமாகச் செயல்பட்டு வருகின்றது. கிராம அங்காடிகள் சரிவர செயல்படுவதைக் கண்காணிக்க 9 துணைப்பதிவாளர்களும் 153 சார் பதிவாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அபுல்ஹாசன்
கூடுதல் பதிவாளர்
(நுகர்வோர் பணிகள்)

இதுவரை கிராமக் கூட்டுறவு அங்காடிகள் ரூ. 18.07 கோடி பெறுமானமுள்ள பொருள்களை 1979-80 (1.7.79 முதல் 30.6.80 முடிய) ஆண்டில் கிராம மக்களுக்கு விநியோகித்துள்ளன. 1.7.80 முதல் 30.8.80 முடிய மூன்று மாதங்களில் ரூ. 536.56 இலட்சம் மதிப்புள்ள பொருளை கிராம மக்களுக்கு விநியோகித்துள்ளன.



ஆக, தமிழ்நாட்டில் கிராமப்புற மக்கட்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை, தரமுள்ளதாகவும் சரியான எடையுடனும், நியாயவிலையிலும் ஆங்காங்கே கிடைக்க இக்கிராம அங்காடிகள் உதவுகின்றன. இதனால் அந்தந்தப் பகுதியில் இயங்கிவரும் தனியார் கடைகளும், மேற்கண்டவாறு கூட்டுறவு அங்காடிகளை அனுசரித்து தங்களின் வியாபாரமுறைகளையும், விலையையும் கட்டுக்குள் வைத்திருக்க இக்கடைகள் வழிவகுத்துள்ளன. இக்கிராம அங்காடித்திட்டத்தின் பயனாக, கிராமப்புற மக்களுக்கு, அவர்கள் வசிக்குமிடங்களிலேயே அத்யாவசிய தேவைப் பொருட்கள் கிடைக்க கூட்டுறவு கிராமச் சங்கங்கள் செய்துள்ள பணி இதர மாநிலத்தோர் வியக்கத்தக்க வகையில் உள்ளது. கூட்டுறவுகளின் பணி மேலும் ஓங்கட்டும்!

சம் டன் எண்ணெய் வித்துக்கள், 20 இலட்சம் டன் வெல்லம் என்ற அளவில் கரும்பு, 4½ இலட்சம் பேல்கள் பருத்தி என்ற அளவில் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்கள் தவிர்த்த மற்ற பயிர்களின் உற்பத்தி, இலக்குக்கும் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப்படும் தஞ்சைத் தரணியில் தமிழக அரசின் முன்னேற்பாடான நடவடிக்கையின் பயனாக நடப்பு ஆண்டில் 4½ லட்சம் ஏக்கரில் குறுவை பயிராகி சராசரி ஏக்கருக்கு 2 டன் அளவில் நெல் விளைந்துள்ளது. இதுபோல் மற்ற மாவட்டங்களில் குறுவை நன்கு விளைந்துள்ளது.

சம்பா சாகுபடி சிறப்பாக நடைபெற்றுள்ளது. தாளடி சாகுபடியும், காலத்தே நடந்து வருகிறது. எனவே நடப்பு ஆண்டில் உணவு உற்பத்தியில் குறைவு ஏற்படாது என்று நம்பப்படுகிறது.

வானத்தையே நம்பி வளரும் பயிர் , எண்ணெய் வித்துக்கள் குறிப்பாகப் பருவமழை பொய்த்த தன் காரணமாக நிலக்கடலை உற்பத்தி குறையும். அதை இறைவைப் பட்டத்தில் ஈடுசெய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

விளை பொருள்களுக்கு நல்ல விலை பெற்றுத்தர வேண்டும், அவர்களை இடைத்தரகர்களின் இரும்புப்பிடியில் இருந்து விடுவிக்கவேண்டும் என்பதற்காகவே இன்றைய தமிழக அரசு வேளாண் விளை பொருள் விற்பனைத் துறையைத் துவக்கியுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் 2 விற்பனைக் குழுக்களும், 64 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் ,28 துணை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களும், புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன.

16 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஒரு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஏற்படுத்தவும், அவைகளை மேம்படுத்தவும் உலகவங்கியிடம் இருந்து ஏறத்தாழ ரூ. 102 கோடி கடன்பெற விருக்கிறோம், அக்கடன் கிடைத்ததும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் சேமிப்புக் கிடங்கு உலர்களம், உழவர்கள் வியாபாரிகள் தங்குமிடம், சிற்றுண்டிவிடுதி அஞ்சலகம், வங்கி முதலிய வசதிகள் செய்து கொடுத்து உழவர்களுக்கு நல்ல விலைபெற்றுத் தரவிருக்கிறோம்.

அண்மையில் புதிதாகத் துவக்கப்பட்ட தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஊட்டச்சத்து மிகுந்த காய்கறிகள், கனிகள், கிழங்குகள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கவும், அந்

தரும் முந்திரி, மிளகு, தேயிலை காப்பி, மலர் வகைகள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கிடவும் அதன் மூலம் உழவர்களின் வருவாயைப் பெருக்கிடவும் முனைந்து வருகிறது.

எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டிற்காகவே, இந்த மாதம் தனி ஒரு துறை துவக்கப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுக்காக விரைவில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தவிருக்கிறோம். அவைகளின் மூலம் 2¾ இலட்சம் ஏக்கரில் நிலக்கடலை பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மானாவாரி நிலக்கடலை சாகுபடியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கவிருக்கிறது.

சுருங்கக்கூறின் தமிழக அரசின் வேளாண்மைத் திட்டங்கள் அனைத்தும் நலிவுற்ற உழவர்களின் நல்வாழ்விற்காகவே செயல் படுத்தப்படுகின்றன. எனவே, தமிழக அரசின் வேளாண்மைத் திட்டங்களைச் செம்மையாகவும், சிறப்பாகவும் நிறைவேற்ற ஒத்துழைக்கும்படி தமிழக உழவர் பெருமக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன். இத்தருணத்தில் உங்களின் நியாயமான குறைகளைத் தீர்ப்போம் என்ற உறுதியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(சென்னை வானொலி 2-11-'80)**

# மக்களின் ஒத்துழைப்பு!

## அரசு அலுவலர் அனுபவம்

**—சு. அரங்கசுவாமி,**
**ஒன்றிய கல்வி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்,**
**ஊராட்சி ஒன்றியம்,**
**வாலாசா,**
**வ. ஆ. மாவட்டம்.**

**1958-ஆம் ஆண்டு!**

நான் என்னுடைய கிராம சேவக் பயிற்சி ஓர் ஆண்டினை பட்டுக் கோட்டையில் முடித்து வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள செங்கம்வட்டாரத்தினைச் சேர்ந்த மேல்ராவந்தவாடி என்ற தொகுதிக்கு கிராம சேவக்காகப் பொறுப்பேற்றேன்.

மேல் ராவந்தவாடி என்னும் கிராமம் செங்கத்திலிருந்து 20 மைல் கல் தொலைவில் உள்ள கிராமமாகும். சுற்றிலும் காடுகள் நிறைந்த கிராமம். சுற்றிலும் முறையேகாட்டிற்குள் மணிக் கல், குடும்பட்டி, கல்லபாலி, ஏறங்குன்னி போன்ற கிராமங்கள் உள்ளன. போக்குவரத்து வசதியில்லாத கிராமம். அரசின் உத்திரவின்படி, நேரு பிறந்த நாளை ஊராட்சித் தினமாகக் கொண்டாட ஏற்பாடு செய்து, உத்திரவு அளித்தார் ஆணையா

மேற்படி விழாக் கொண்டாட்டம் சம்பந்தமாக ஒரு இரவு முழுவதும் விவாதித்து முக்கியமானப் பணிகளை செய்யக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

விழா தினத்தன்று அதிகாலை 2 மணிக்கு என் மனைவி என் வீட்டின் எதிரில் சாணம் தெளித்து பெரிய கோலம் போட்டாள். இதைக் கண்ணுற்ற அண்டை வீட்டுக்காரம்மாள் அவர் வீட்டைச் சுத்தம் செய்து கோலம் போட்டார். அப்படியே முதல்தெரு, இரண்டாம் தெரு என்று போட்டா போட்டியில் அனைத்து தெருக்களும் கோலம் போடப்பட்டது. அதற்குள் விழாச் சேதியினை அறிந்த காலனி ஊராட்சி உறுப்பினர் திரு. பெருமாள் என்பவர் மாவிலைத் தோரணங்களைக் கட்டி மேளங்களுக்கு ஏற்பாடுச் செய்தார். அனைத்து மக்களும் தானாகவே முன் வந்து, பெரிய நேரு படத்தினை அலங்கரித்தனர்.

என் மனைவியின் ஆரம்பச் செயலின் விளைவாக, போட்டா போட்டி போட்டுக் கொண்டு ஏற்பாடுகளைச் செய்தார்கள். இவ்வளவு ஏற்பாட்டிற்கும் கிராம சேவக் என்ற நான் நிலை புரியாமல் ஆச்சரியத்தில் மூழ்கி இருந்தேன். காரணம் மேற்படி கிராம மக்கள் இது மாதிரி கூட்டு முயற்சியில் செய்யும் விழா இதுவே முதல் முறை என்று பல வயதானவர்களே கூறக் கேட்டேன்.

அரசின் எந்தத் திட்டமானாலும் மக்கள் ஒத்துழைப்பினைப் பெறாது போனால் திட்டம் வெற்றி பெறாது என்பதையும், ஒத்துழைப்பு இருந்தால் மாபெரும் வெற்றிபெறும் என்பதையும் என்னால் அன்று நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.